CICTArchives

# செம்மொழி

திருவள்ளுவர் ஆண்டு 2041 தை - ஆனி (2010 சனவரி - சூன்)

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனச் செய்திமடல் - 5









CICTArchives

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் இந்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தன்னாட்சி நிறுவனமாகும். செம்மொழித் தமிழை மேம்படுத்தும் வகையில் தமிழின் தொன்மையையும் தனித்தன்மையையும் அடிப்படையாகக்கொண்டு பத்துச் செயல்திட்டங்களை வகுத்துச் செயற்படுத்திவருகின்றது.

- 41 பழந்தமிழ் நூல்களைச் செம்பதிப்பாக வெளியிடல்
- பழந்தமிழ் நூல்களை ஆங்கிலத்திலும் ஐரோப்பிய மொழிகளிலும் பிற இந்திய மொழிகளிலும் மொழி பெயர்த்தல்
- செம்மொழித் தமிழின் மொழி, இலக்கியம், தொல்லியல், கட்டடக்கலை முதலியவை சார்ந்த காட்சிக் குறும்படங்களை உருவாக்கல்
- இணையவழிச் செம்மொழித் தமிழ் கற்பித்தல்
- வரலாற்றுமுறைத் தமிழ் இலக்கணம் உருவாக்கல்
- வரலாற்று அடிப்படையிலும் இக்கால நோக்கிலும் தமிழ் வழக்காற்றுச் சொற்களைத் தொகுத்தல்
- செம்மொழித் தமிழ் நூல்களுக்கான தரவகம் உருவாக்கல்
- பழந்தமிழ் ஆய்வுக்கான மின் நூலகம் நிறுவுதல்
- இந்தியாவை ஒரு மொழிப் புலமாக ஆய்வுசெய்தல்
- செம்மொழித் தமிழின் பல்துறை ஆய்வுகளை மேம்படுத்தல்

முதன்மை ஆசிரியர்
பேராசிரியர் **ச. மோகன்**

ஆசிரியர்
பேராசிரியர் **க. இராமசாமி**

இணையாசிரியர்கள்
பேராசிரியர் **இ. சுந்தரமூர்த்தி**
முனைவர் **இரெ. குமரன்**
முனைவர் **ந. அரணமுறுவல்**

உதவி ஆசிரியர்கள்
முனைவர் **அ. கோ. இராஜதுரை**
முனைவர் **த. சரவணன்**

வடிவமைப்பு
திரு **க. சங்கர்**

## பொருள் நிரல்

வாழ்த்துச் செய்தி............1
பண்டைத் தமிழர் நீர்மேலாண்மை - கலைஞர் உரை............2
பயிலரங்குகள்............5
பாடவேறுபாடுகள்
பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை............20
கருத்தரங்குகள்............26
தொல்காப்பிய ஆராய்ச்சி வரலாறு
பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார்............46
பணியரங்குகள்............48
தமிழ் மருத்துவத்தின்
தொன்மையும் தனித்தன்மையும்
பேராசிரியர் க. அன்பழகன் உரை............50
கூட்டங்கள்............52
கலைஞர் மு. கருணாநிதி
செம்மொழித் தமிழ் விருது............58
உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு
கண்காட்சி அரங்கம்............62

அட்டை:

1. கல்லணை
2. பட்டணம் அகழ்வாய்வில் கிடைத்த தங்கக்கோடரி
3. மருங்கூரில் கிடைத்த தமிழி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள்

**செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்**
தன்னாட்சி நிறுவனம், உயர் கல்வித் துறை, மொழிகள் பிரிவு
மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகம், இந்திய அரசு
6, காமராசர் சாலை, சேப்பாக்கம், சென்னை 600 005.
தொலைபேசி : 044 - 2844 3222, தொலைநகல் : 2844 8888
மின்னஞ்சல் : info@cict.in, director@cict.in, இணையத்தளம் : www.cict.in

CICTArchives

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். - (குறள்.416)

# வாழ்த்துச் செய்தி

தமிழுக்குச் செம்மொழித் தகுதி கிடைக்கப் பல அமைப்புகளும் அறிஞர்களும் கடந்த ஒரு நூற்றாண்டுக் காலத்தில் தொடர்ந்து போராடியதன் அடிப்படையில் இந்திய அரசு முதன்முதலாகத் தமிழுக்குச் செம்மொழித் தகுதியை வழங்கியுள்ளது. அதன் தொடர்ச்சியாகவே செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தோன்றியது.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் இந்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறையின்கீழ் இயங்கும் நிறுவனமாகும். தமிழுக்குச் செம்மொழித் தகுதி கிடைத்தபின் செம்மொழித் தமிழ் உயராய்வு மையம் உருவாக்கப்பட்டு மைசூரில் அமைந்துள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தின் ஒரு பிரிவாகச் செயல்பட்டது. 2008ஆம் ஆண்டு முதல் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் சென்னையில் தன்னாட்சி நிறுவனமாக இயங்கிவருகிறது.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் பத்து முதன்மைத் திட்டங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகள் செம்மொழித் தமிழையும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தையும் தமிழ்கூறும் நல்லுலகில் பரவலாக அறிமுகம் செய்தன.

கோவையில் 2010ஆம் ஆண்டில் நிகழ்ந்த உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் சிந்துவெளி ஆய்வை மேற்கொண்டுள்ள பின்லாந்து பேராசிரியர் அஸ்கோ பர்ப்போலாவிற்குக் 'கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது' வழங்கப்பட்டது. இவ்விருது 10 இலக்கம் உரூபாய்ப் பணப்பரிசும் 100 கிராம் பொற்பதக்கமும் ஐம்பொன்னாலான திருவள்ளுவர் உருவச்சிலை நினைவுப் பரிசும் கொண்டதாகும். அஸ்கோ பர்ப்போலா சிந்துவெளியைப் பல ஆண்டுகளாக ஆய்வு செய்தபின் அது திராவிடர் நாகரிகம் என்ற முடிவுக்கு வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

செம்மொழிச் செய்திமடல் நிறுவனத்தின் பல்வேறு நிகழ்வுகளையும் பதிவுசெய்து தமிழார்வலருக்குப் பயன்படும் வண்ணம் தொடர்ந்து வெளியிடப்பெறுகின்றது. தமிழின் பல்வேறு ஆக்கங்களுக்கும் நிறுவனம் தொடர்ந்து ஒல்லும் வகையெல்லாம் பணியாற்றும். செம்மொழிச் சிறப்பை உலகமெங்கனும் உள்ள மொழியார்வலர்களுக்குச் சென்றுசேர்க்கும் பணியில் நிறுவனம் தொடர்ந்து தன் பங்களிப்பை வழங்கும்.

வாழ்த்துக்களுடன்,

முதன்மை ஆசிரியர்



CICTArchives




# பண்டைத் தமிழரின் நீர்மேலாண்மை

**செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் சார்பில் 23.03.2010 அன்று நடைபெற்ற கருத்தரங்கில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் ஆற்றிய தொடக்கவுரை**

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் சார்பில் நடைபெறும், "பண்டைத் தமிழரின் நீர் மேலாண்மை" கருத்தரங்கத்தின் தலைவர் பேராசிரியர் முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்களே!

காவிரித் தொழில் நுட்பக் குழுமத்தின் தலைவர் பேராசிரியர் ஆ.மோகனகிருஷ்ணன் அவர்களே!

தொல்லியல் துறையின் முன்னாள் இயக்குநர் நடன காசிநாதன் அவர்களே!

பனைத் தொழிலாளர் நல வாரியத்தின் தலைவர், இலக்கியச் செல்வர் முனைவர் குமரி அனந்தன் அவர்களே!

வரவேற்புரை ஆற்றிய பேராசிரியர் ச.மோகன் அவர்களே!

நன்றியுரை ஆற்றவிருக்கும் பேராசிரியர் க. இராமசாமி அவர்களே! கருத்தரங்கிற்கு வருகை புரிந்துள்ள பெரியோர்களே, நண்பர்களே, என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே! அனைவருக்கும் என் வணக்கங்கள்!

இன்று உங்களிடையே கலந்துகொண்டு, இங்கு நடைபெறும் பண்டைத் தமிழரின் நீர் மேலாண்மை குறித்த கருத்தரங்கினைத் தொடங்கிவைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

**பண்டைத் தமிழர் கலை, நாகரிகம்**

பழந்தமிழகத்தில் உழவுத் தொழில், நெசவுத் தொழில், கட்டடக் கலை, நாகரிகம், பண்பாடு அனைத்தும் சிறந்து விளங்கியது என்பதற்கு ஏராளமான சான்றுகள் நமக்குக் கிடைத்துள்ளன.

உலக வரலாற்று அறிஞர்கள் அனைவரும் இதனை ஒப்புக்கொண்டு பாராட்டி உள்ளார்கள்.

நீர் மேலாண்மையைப் பொறுத்தவரை பண்டைத் தமிழர்களின் பண்பட்ட அறிவும் ஆற்றலும் நம்மை வியக்க வைக்கின்றன.

பருவம் தவறாமல் பெய்யும் மழை நீரைத் தேக்கிக் கயம், வாவி, தடாகம், பொய்கை, குட்டம், குளம், ஏரி, கிடங்கு, மடு போன்ற நீர்நிலைகளை உண்டாக்கி, அவற்றிலிருந்து தேவைக்கேற்ப நீரைப் பயன்படுத்தும் உத்தியைத் தமிழர்கள் பல்லாயிரம் ஆண்டுகளாகப் பின்பற்றி வந்துள்ளனர். இதனைப் பழந்தமிழ் இலக்கியங்கள் வாயிலாக நாம் அறியலாம்.

ஓடைகளின் குறுக்கே "கற்சிறை" எனப்படும் கல்லால் ஆன அணை கட்டித் தண்ணீரைச் சிறைப்பிடித்துத் தேக்கிக் கால்வாய் வழியே அனுப்புகின்ற முறை பழங்காலத்திலேயே பெருவழக்காக இருந்துள்ளது. எதிர்த்து வரும் போர் வீரர்களை அந்தக் கற்சிறை போல ஒருவனாக நின்று தடுத்து நிறுத்துதல் தலைவன் பண்பு என்று கூறும் தொல்காப்பியர் பொருளதிகாரத்தில்,

**வருசிறைப் புனலைக் கற்சிறை போல**
**ஒருவன் தாங்கிய பெருமை யானும்**

(தொல்.பொருள். 657)

என்கிறார். பூம்புகார்த் துறைமுகத்தில் கப்பலிலிருந்து பொருள்கள் இறக்கப்படுவதையும் தரையிலிருந்து வேறு பல பொருள்கள் கப்பலில் ஏற்றப்படுவதையும் மழை மேகம் கடலிலிருந்து நீரை முகந்து தரையில் மழையாகப் பொழிவது போலவும் அந்த மழை நீர் கடலில் சென்று கலப்பது போலவும் இருந்ததாகப் ''பட்டினப்பாலை'' ஆசிரியர் உருத்திரங்கண்ணனார்,

**வான்முகந்தநீர் மலைப்பொழியவும்**
**மலைப்பொழிந்தநீர் கடல்பரப்பவும்**
**மாரிபெய்யும் பருவம்போல**

CICTArchives



**நீரினின்றும் நிலத்துஏற்றவும்**
**நிலத்தினின்று நீர்பரப்பவும்**
**அளந்துஅறியாப் பலபண்டம்**

(பட்டினப்பாலை,126-131)

என்று கூறுகிறார்.

நீர்நிலைகளை உருவாக்கி இந்நிலவுலகில் தம் புகழைப் பதித்திட வேண்டுமெனப் பாண்டியன் நெடுஞ்செழியனைப் பார்த்துக் குடபுலவியனார் கூறும்,

**அடுபோர்ச் செழிய! இகழாது வல்லே**
**நிலன்நெறி மருங்கில் நீர்நிலை பெருகத்**
**தட்டோர் அம்ம, இவன்தட் டோரே;**
**தள்ளா தோர்இவன் தள்ளா தோரே.**

(புறம். 18:27-30)

என்னும் புறநானூற்றுப் பாடல் வரிகள் நீர்வள இயலின் இன்றியமையாமையைச் சுட்டுகின்றன.

### கரிகாற்பெருவளத்தானின் கல்லணை

இன்றைய பொறியியல் துறை அறிஞர் பெருமக்கள் வியந்து போற்றக்கூடிய தொழில் நுட்பத்தை ஏறத்தாழ 1800 ஆண்டுகளுக்கு முன்பு கையாண்டு மாமன்னன் கரிகால் சோழன் காவிரி ஆற்றிற்குக் கரை எடுத்ததும் காவிரியின் குறுக்கே கல்லணை கட்டி, நீர்ப்போக்கை ஒழுங்கு செய்ததும் தமிழரின் நீர் மேலாண்மைத் திறனை மேதினிக்கு உணர்த்துகின்றன. இதன் பயனாகப் பிற நாட்டு வளங்களைவிடச் சோழநாட்டு வளம் செழித்துக் கொழித்தது என்பதனை,

**ஏரியும் ஏற்றத்தி னானும் பிறர்நாட்டு**
**வாரி சுரக்கும் வளன்எல்லாம் தேரின்**
**அரிகாலின் கீழுகூஉம் அந்நெல்லே சாலும்**
**கரிகாலன் காவிரிசூழ் நாடு**

(பொரு., தனிப்பாடல்)

என்னும் முடத்தாமக்கண்ணியாரின் பாடல் விளக்குகிறது.

சங்கப் பாடல்களுக்கு அடுத்தபடியாகச் சிலம்பும் மேகலையும் சிந்தாமணியும் நீரின் இன்றியமையாமை பற்றிப் பேசுகின்றன. மணிமேகலையில்,

**எந்திரக் கிணறும் இடுங்கற் குன்றமும்**
**வந்துவீ ழருவியும் மலர்ப்பூம் பந்தரும்**
**பரப்புநீர்ப் பொய்கையும் கரப்புநீர்க் கேணியும்**
**ஒளித்துறை யிடங்களும் பளிக்கறைப் பள்ளியும்**
**யாங்கனும் திரிந்து தாழ்ந்து விளையாடி**

(மணிமேகலை, 19 சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக்கிய காதை, 102 - 106)

என்ற அடிகள் மூலம், ஒரு நகரப் பூங்கா - அருவி, பொய்கை, கேணி முதலியவற்றோடு பொலிதல் வேண்டுமென்பதைச் சீத்தலைச்சாத்தனார் காட்டுகிறார்.

ஒரு குளத்திற்கு ஓடையின் மூலமாகத்தான் தண்ணீர் வர வேண்டும். ஓடையில் தொடர்ந்து தண்ணீர் வந்துகொண்டேயிருக்கும். ஓரிரு நாள் நீர்வரத்திலேயே குளம் நிறைந்துவிடும். குளம் நிறைந்ததும் நீர் மண்கரை மேலேறி வழியும்; வழிகின்ற நீர் கரையில் மண்ணை அரித்துவிடும். அதனால் கரையின் அந்த இடத்தில் உடைப்பு எடுக்கும் நீர் முழுவதும் வெளியேறி வீணாகும். அதுபோல அளவு இல்லாது செலவு செய்பவனுடைய வாழ்க்கையும் வீணாகும் என்பதை,

**அளவளாவு இல்லாதான் வாழ்க்கை குளவளாக்**
**கோடின்றி நீர்நிறைந் தற்று**

(குறள்:523)

என அய்யன் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.

### சிறுபஞ்சமூலம் கூறும் நெறி!

குளம் வெட்டுதல், அதனைச் சுற்றி மரக்கிளைகளை வெட்டி நடுதல், மக்கள் நடக்கும் வழியைச் செதுக்கிச் சீர்திருத்தல், தரிசு நிலத்தின் உள்ளிடத்தைச் செப்பம் செய்து உழுவயல் ஆக்குதல், அவற்றுடன் வளமாக நீர் வரும்படி தோண்டிச் சுற்றிலும் சுவர் எழுப்பிக் கிணற்றை உண்டாக்குதல் என்று சொல்லப்பட்ட இந்த ஐந்து பகுதிகளையும் உண்டாக்கியவன் உலகம் புகழ இன்புறுவான் என்பதைச் சிறுபஞ்சமூலம்,

**குளந்தொட்டுக் கோடு பதித்துவழி சீத்து**
**உளந்தொட்(டு) உழுவயல் ஆக்கி - வளந்தொட்டுப்**
**பாகு படும்கிணற்றோ(டு)என்றிவ் வைம்பால் படுத்தான்**
**ஏகும் சுவர்க்கத் தினிது**

(சிறுபஞ்சமூலம்:66)

என்கிறது. இதன்மூலம் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் அனைத்திலும் நீரின் முக்கியத்துவம்பற்றிய செய்திகள் விரவிக்கிடப்பதை அறிய முடிகிறது.

இலக்கியச் சான்றுகளுக்கு அடுத்தபடியாக அரசர்கள் நீர் ஆதாரங்களை ஏராளமாக உண்டாக்கித் தங்கள் பெயரை வரலாற்றில் இடம்பெறச் செய்துவிட்டனர் என்பதற்கு அடையாளமாகக் கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் அகழ்வாய்வுகளும் விளங்குகின்றன.

> "முதலாம் பரமேசுவரவர்மனின் ஆட்சிக் காலத்தில் (கி.பி.669-700) இருபது சதுர்வேதி பிராமணர்க்குப் பரமேசுவரமங்கலம் என்னும் பெயரில் பிரமதேயமாக நிலங்கொடுத்தான். அத்தோடு அவ்வூரில் பரமேசுவர தடாகம் என்று ஒரு ஏரியை ஏற்படுத்திப் பாலாற்றிலிருந்து நீர் கொண்டு வர பெரும்பிடுகு கால் என்னும் கால்வாயையும் வெட்ட, அக்கால்வாயிலிருந்து தலைவாய், தலைப்பேழை, ஊற்றுக்கால் என்னும் கிளைகளையும் வெட்டிக்கொள்ள அனுமதி அளித்தான் பரமேசுவரன்"

எனக் கூரம் செப்பேடு கூறுகிறது.

உத்திரமேரூரின் ஜீவநாடியாக அமைந்தது 'வயிரமேகத் தடாகம்' எனும் பேரேரியாகும். பல்லவ மன்னன்

CICTArchives



நந்திவர்மனுக்கு (கி.பி.796-847) "வயிரமேகன்" என்று ஒரு சிறப்புப் பெயர் உண்டு. இப்பெயரால் அமைந்ததுவே வயிரமேகத் தடாகம் என்னும் ஏரி என்பதை உத்திரமேரூர்ச் செப்பேடுகளும் கல்வெட்டுக்களும் தெரிவிக்கின்றன.

**வீர நாராயணன் ஏரி**

மாமன்னன் இராசேந்திர சோழன் 11ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், தான் உருவாக்கிய கங்கைகொண்ட சோழபுரத்தில், "சோழ கங்கன்" என்னும் தனது பட்டப் பெயரில், "சோழ கங்கம்" என்னும் ஏரியை உருவாக்கினான். அந்த ஏரி, இன்று ''பொன்னேரி'' என அழைக்கப்படுகிறது. அந்த ஏரியின் வடிகாலாக அவன் தனது சிறப்புப் பெயரிலேயே அமைத்த ''வீர நாராயணன் ஏரி'' இன்று ''வீராணம் ஏரி'' என்று புகழ்பெற்றுள்ளது.

பண்டைய நூல் எனக் கருதப்படும் 'கூவ நூல்' ஓலைச்சுவடியிலிருந்து பதிப்புச் செய்யப்பட்டு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளது. நிலத்தின் தன்மைபற்றியும் அங்கு வளரும் மரஞ்செடி கொடிகள்பற்றியும் அவற்றின் அடையாளம் கண்டு



நீர் இருக்கும் பகுதிகளை அறியும் முறைபற்றியும் அந்நூற் பாடல்கள் கூறுகின்றன. புலவர்களும் புவியியலாளர்களும் இணைந்து அதனை விரிவாக ஆராய வேண்டியது இன்றியமையாததாகும்.

இவ்வாறு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த இலக்கியங்களாலும் கட்டுமான அமைப்புக்களாலும் நீர்வளத்தில் அக்காலத்திலேயே ஒரு தெளிவு தமிழகத்தில் இருந்தமையை உணர முடிகிறது.

## இயக்குநர் பதவிக்கான தேர்வுக் குழுக் கூட்டம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இயக்குநர் பதவிக்கான தேர்வுக் குழுக் கூட்டம் 11-02-2010 அன்று நடைபெற்றது. இதில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி, மனித வள மேம்பாட்டு அமைச்சக உயர் கல்வித் துறைச் செயலர் திருமிகு எம். விபா புரி தாஸ், பேராசிரியர் வா.செ. குழந்தைசாமி, பேராசிரியர் எம். ஆனந்தகிருஷ்ணன், தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்



CICTArchives

# பயிலரங்குகள்

1 பயிலரங்கு

## கல்வெட்டு தொல்லியல்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் தமிழ்நாட்டரசுத் தொல்லியல் துறையும் இணைந்து 24.12.2009 முதல் 08.01.2010 வரை 'கல்வெட்டு - தொல்லியல்' என்னும் தலைப்பில் பயிலரங்கத்தினைச் சென்னையில் நடத்தின. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் முனைவர் ந. அரணமுறுவலும் தமிழ்நாட்டரசுத் தொல்லியல் துறையைச் சேர்ந்த கல்வெட்டாய்வாளர் திரு இரா. சிவானந்தமும் ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்பட்டார்கள்.

24.12.2009 அன்று காலை 10 மணியளவில் நடைபெற்ற பயிலரங்கைத் தமிழ்நாடு தொல்லியல் துறை அமைச்சர் மாண்புமிகு தங்கம் தென்னரசு தொடங்கி வைத்தார். தொல்லியல் துறை முதன்மைச் செயலாளர் - ஆணையர் முனைவர் தி.ஸ்ரீ. ஸ்ரீதர் இ.ஆ.ப. தலைமை ஏற்றார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி முன்னிலை உரை நிகழ்த்தினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன எண்பேராயக் குழு உறுப்பினர் கவிவேந்தர் கா.வேழவேந்தன், தமிழ்நாடு தொல்லியல் துறை மேனாள் இயக்குநர் முனைவர் இரா. நாகசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பின்னர்த் 'தமிழகக் கோயிற் கலைகள்', 'தரங்கம்பாடி அகழ் வைப்பகக் கையேடு' ஆகிய இரு தொல்லியல் துறை நூல்களை அமைச்சர் வெளியிட்டதுடன் தொல்லியல் துறைக் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் 2008-2009ஆம் ஆண்டு பயின்ற எட்டு மாணவர்களுக்கு முதுகலைப் பட்டயச் சான்றிதழ்கள் வழங்கினார். தொல்லியல் துறைப் பதிவு அலுவலர் பொ. இராசேந்திரன் வரவேற்புரை வழங்கினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் முனைவர் ந. அரணமுறுவல் நன்றிகூறினார்.

இப் பயிலரங்கில் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் ஆகிய மாவட்டங்களிலிருந்து தமிழ், வரலாறு முதலிய துறைகளைச் சேர்ந்த பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளின் ஆசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் 40 பேர் பயிற்சி பெற்றனர்.

திரு **க. குழந்தைவேலன்**
திரு **கோ. உத்திராடம்**
முனைவர் **ப. சண்முகம்**
திரு **நா. கணேசன்**
திரு **ஆறுமுக சீத்தாராமன்**
முனைவர் **தி.ஸ்ரீ. ஸ்ரீதர்** இ.ஆ.ப
திரு **பூரண சந்திர சீவா**
முனைவர் **அர. பூங்குன்றன்**
முனைவர் **சு. இராசவேலு**
முனைவர் **பாலாஜி**
முனைவர் **பா. செயக்குமார்**
முனைவர் **சு. இராசகோபால்**
திரு **கே. நரசிம்மன்**
முனைவர் **சொ. சாந்தலிங்கம்**
முனைவர் **சொ. சந்திரவாணன்**
முனைவர் **அர. பூங்குன்றன்**
திரு **பொ. இராசேந்திரன்**
திரு **ச. செல்வராஜ்**
திருமதி **அர. வசந்த கல்யாணி**
திரு **மா. சந்திரமூர்த்தி**
திரு **ஆர். பாலசுப்பிரமணியன்**
முனைவர் **தியாக. சத்தியமூர்த்தி**
திரு **ம. கலைவாணன்**
திரு **து. துளசிராமன்**
திரு **கி.சு. சம்பத்**
திரு **கோ. முத்துசாமி**
திரு **நடன. காசிநாதன்**





முனைவர் **தி. சுப்பிரமணியன்**
முனைவர் **சி. மகேசுவரன்**
திரு **இரா. சிவானந்தம்**
திரு **ச. பரணன்**
முனைவர் **சு. சுவாமிநாதன்**
திரு **இ. ஸ்ரீதரன்**
திரு **ச. கிருஷ்ணமூர்த்தி**
திரு **சேகர்**
முனைவர் **ஆ. பத்மாவதி**
முனைவர் **நா. மார்க்சியகாந்தி**
முனைவர் **சீ. வசந்தி**
பேராசிரியர் **சா. குருமூர்த்தி**
திரு **இரா. நாராயணன்**
திரு **ஸ்ரீ. ஸ்ரீகுமார்**
திரு **மு.சு. அசேக்தீன்**
செல்வி **ஜே.எம். காந்திமதி**
செல்வி **சத்தியபாமா**
முனைவர் **ஏ. ஏகாம்பரநாதன்**

ஆகிய தொல்லியல் அறிஞர்கள், தொல்லியல் துறை அலுவலர்கள் தங்கள் ஆய்வுகளையும் சிறப்புச் சொற்பொழிவுகளையும் நிகழ்த்தினர்.

பயிலரங்கின் ஒரு பகுதியாக, பங்கேற்ற மாணவர்களைத் தொல்லியல் - வரலாறு தொடர்பான காஞ்சிபுரம், கூழம்பந்தல், திருக்கழுக்குன்றம், மாமல்லபுரம், தீரிடிவனம், தாராசுரம், தஞ்சாவூர், மேலப்பழுவூர், கங்கைகொண்டசோழபுரம் ஆகிய ஊர்களுக்கு அழைத்துச்சென்று அறிஞர்கள் நேரடி விளக்கம் அளித்தனர். வரலாற்று முதன்மைச் சான்றுகளான கல்வெட்டுக்கள், காசுகள், செப்புப்பட்டயங்கள், ஓலைச்சுவடிகள், பானை ஓடுகள் ஆகியவற்றில் உள்ள எழுத்துக்களை எவ்வாறு படிப்பது என்று நேரடிப் பயிற்சி அளிக்கப்பட்டது.

08.01.2010 அன்று நடைபெற்ற நிறைவு விழாவில், தமிழ்நாட்டரசுத் தலைமைச் செயலாளர் கே.எஸ். ஸ்ரீபதி இ.ஆ.ப. பங்கேற்றுப் பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கிச் சிறப்புரை ஆற்றினார். 'விஜயமங்கலம்' என்னும் தொல்லியல் துறை நூலை வெளியிட்டார். இதைத் தமிழ்நாட்டரசுச் சுற்றுலா-பண்பாட்டுத் துறைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு இ.ஆ.ப. பெற்றுக்கொண்டு தலைமையுரை ஆற்றினார். தொல்லியல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தி.ஸ்ரீ.ஸ்ரீதர் இ.ஆ.ப. பயிலரங்க ஆய்வு உரையினை நிகழ்த்தினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன எண்பேராய உறுப்பினர் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் முன்னிலை உரையும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் ந.அரணமுறுவல் வரவேற்புரையும் வழங்கினர். இப்பயிலரங்க ஒருங்கிணைப்பாளரும் தொல்லியல் துறைக் கல்வெட்டாய்வாளருமான இரா. சிவானந்தம் நன்றி நவின்றார்.

**2** பயிலரங்கு

## பண்டை இலக்கியப் பாத்திரங்கள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சிவகாசி ஸ்ரீகாளீசுவரி கல்லூரித் தமிழியல் துறையும் இணைந்து பண்டைய இலக்கியப் பாத்திரங்கள் என்ற தலைப்பில் 02.01.2010 முதல் 11.01.2010 வரை பயிலரங்கினைச் சிவகாசியில் நடத்தின. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் முனைவர் அன்னிதாமசும் காளீசுவரி கல்லூரித் தமிழியல் துறை விரிவுரையாளர் முனைவர் து. சங்கையாவும் ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்பட்டார்கள்.

02.01.2010 அன்று காலை 10 மணியளவில் நடந்த தொடக்க விழாவில், கல்லூரியின் முதல்வர் முனைவர் ச. கண்மணி வரவேற்புரை வழங்கினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி தன் தொடக்கவுரையில், மத்திய மாநில அரசுகளின் வழிகாட்டுதலில் மேற்கொண்டுவரும் பணிகளையும் ஆய்வுலகில் மாணவர்கள் ஆற்ற வேண்டிய பணிகளின் இன்றியமையாமையையும் விளக்கினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன எண்பேராய உறுப்பினர் முனைவர் மா. நன்னன் தன் சிறப்புரையில், தமிழ் மொழியின் சிறப்பு குறித்தும் அதைக் காப்பது மாணவர்களின் கடமையென்றும் அறிவுறுத்தினார். கல்லூரித் தமிழியல் துறைப் பொறுப்புத் தலைவர் முனைவர் ச. ஜெயஸ்ரீ அறிமுகவுரையாற்றினார். பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் து. சங்கையா நன்றிகூறினார்.

பல்கலைக்கழகங்களிலிருந்தும் கல்லூரிகளிலிருந்தும் வந்த 54 மாணவர்கள் இப்பயிலரங்கில் கலந்துகொண்டனர். இதில் 27 அமர்வுகளில் 26 ஆய்வறிஞர்கள் கலந்துகொண்டு பயிற்சியளித்தனர்.

முனைவர் **தூ. சேதுபாண்டியன்**
முனைவர் **இரா. மோகன்**
முனைவர் **தெ. ஞானசுந்தரம்**



CICTArchives






முனைவர் **நிர்மலா மோகன்**
முனைவர் **அன்னி தாமசு**
முனைவர் **சோ. முத்துத்தமிழ்ச்செல்வன்**
முனைவர் **ச. கண்மணி**
முனைவர் **ம.சா. அறிவுடைநம்பி**
பேராசிரியர் **பெ. மாதையன்**
முனைவர் **து. சங்கையா**
முனைவர் **யாழ் சு. சந்திரா**
புலவர் **இரா. இளங்குமரன்**
முனைவர் **இ.கி. இராமசாமி**
முனைவர் **ம. திருமலை**
முனைவர் **நா. கருணாமூர்த்தி**
முனைவர் **ஐ. பேச்சிமுத்து**
முனைவர் **அ. ஆலிஸ்**
முனைவர் **ச. ஜெயஸ்ரீ**
முனைவர் **செ. சாரதாம்பாள்**
முனைவர் **மலர்விழி**
முனைவர் **பலராமன்**
முனைவர் **அ. அறிவுநம்பி**
முனைவர் **அ. இராமசாமி**
முனைவர் **முத்துலட்சுமி**
முனைவர் **ந. தேவி**
முனைவர் **கதிர். மகாதேவன்**

இப்பயிலரங்கின் ஒன்பதாம் நாளன்று பிற்பகல் அமர்வில், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் சார்பில் முனைவர் ந. தேவி வினாடி வினா நிகழ்ச்சி நடத்தினார். பயிலரங்க மாணவர்கள் பயனுறும் வகையில், தங்காய் அத்திரேயன் வெண்கண்ணனார், தங்காய் பொற்கொல்லனார் ஆகியோர் வாழ்ந்த திருத்தலங்களில் உள்ள பாண்டியர் காலக் குகைக்கோவில், திருவில்லிபுத்தூரில் அமைந்துள்ள ஆண்டாள் திருத்தலம், சிவகாசியிலுள்ள காளி, சிவன் திருத்தலங்கள் ஆகிய இடங்களுக்குச் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டனர்.

11.01.2010 அன்று நடந்தேறிய நிறைவு விழாவில் கல்லூரித் தமிழியல் துறை விரிவுரையாளர் முனைவர் ச. செந்தில்நாதன் வரவேற்புரைவழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் ச. கண்மணி தலைமையேற்றார். மதுரை காமராசர் பல்கலைக்கழக முன்னைத் தமிழியற் புல ஒருங்கிணைப்பாளர் மூதறிஞர் தமிழண்ணல் சிறப்புரையாற்றினார். பயிலரங்குகளில் கலந்துகொண்ட இரு மாணவர்கள் தொகுப்புரைகளை வழங்கினர். மாணவர்களுக்குச் சான்றிதழ்களும் செம்மொழி நிறுவன நூல்களும் பரிசுப்பொருள்களும் வழங்கப்பட்டன. ஒருங்கிணைப்பாளர் முனைவர் து. சங்கையா நன்றி கூறினார்.

3 பயிலரங்கு

## தொல்காப்பியம் சங்க இலக்கியப் புத்தொளிப் பயிற்சி

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் தமிழகத் தமிழாசிரியர் கழகமும் இணைந்து தொல்காப்பியம் - சங்க இலக்கியம் என்ற தலைப்பில் 02.01.2010 முதல் 11.01.2010 வரை தமிழாசிரியர்களுக்கான பயிலரங்கம் ஒன்றை வளவனூரில் நடத்தின. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் முனைவர் ச. மனோகரனும் தமிழகத் தமிழாசிரியர் கழகத் தலைவர் முனைவர் க.வீ. தேவநாயகமும் ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்பட்டார்கள்

02.01.2010 அன்று காலை 10 மணியளவில் நடந்த தொடக்க விழாவில், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன எண்பேராய உறுப்பினர் கவிவேந்தர் கா. வேழவேந்தன் தலைமையேற்று உரை நிகழ்த்தினார். தமிழக அரசின் உயர்கல்வித் துறை அமைச்சர் மாண்புமிகு முனைவர் க. பொன்முடி சிறப்புரையாற்றினார். ஆய்வறிஞர் ச. மனோகரன் வரவேற்புரை வழங்கினார். முனைவர் க.வீ. வேதநாயகம் நன்றிகூறினார். விழுப்புரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு பொ. குப்புசாமி, தமிழகத் தமிழாசிரியர் கழகச் செயலர் புலவர் ஆ. ஆறுமுகம், மாநிலப் பொருளாளர் கவிஞர் த. இராமலிங்கம் மற்றும் பல தமிழ் ஆர்வலர்களும் கல்வியாளர்களும் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்படையச் செய்தனர்.

பயிலரங்கத்தின் பயிற்றுவிப்பாளர்களாகப் பின்வரும் 26 ஆய்வறிஞர்கள் கலந்துகொண்டனர்.

புலவர் **சு. நஞ்சப்பன்**
முனைவர் **க. நெடுஞ்செழியன்**
முனைவர் **சக்ண்பாய்**
முனைவர் **அருணா பொன்னுசாமி**
முனைவர் **தெ. ஞானசுந்தரம்**
முனைவர் **மே.து. ராசுகுமார்**
முனைவர் **மா. சற்குணம்**
முனைவர் **க. முத்துசாமி**
முதுமுனைவர் **இரா. இளங்குமரன்**
முனைவர் **தி. முருகரத்தனம்**
முனைவர் **மீனாட்சி முருகரத்தனம்**
முனைவர் **இராசவேலு**
முனைவர் **அர. பூங்குன்றன்**
முனைவர் **சீ. பக்தவத்சலபாரதி**

CICTArchives



முனைவர் **இரா. இலட்சாராமன்**
முனைவர் **சு. திருநாவுக்கரசு**
முனைவர் **கா. அரங்கசாமி**
முனைவர் **கு. திருமாறன்**
முனைவர் **கரு.அழ. குணசேகரன்**
பேராசிரியர் **கு. சிவமணி**
முனைவர் **இர. கார்த்திகேயன்**
முனைவர் **சு. துரை**
பேராசிரியர் **ப. மருதநாயகம்**
முனைவர் **மு. இளமுருகன்**
முனைவர் **க. அங்கயற்கண்ணி**
முனைவர் **ஆ. தனஞ்செயன்**

09.10.2010 அன்று மாலை விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் முனைவர் இரா. பழனிச்சாமி, உயர்நிலைப் பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் திரு பெருமாள்சாமி ஆகிய பெருமக்கள் பயிலரங்கில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

11.01.2010 அன்று பிற்பகலில் நடந்த நிறைவு விழாவில் விழுப்புரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு பெ. குப்புசாமி தலைமையேற்று உரையாற்றினார். முனைவர் கி.வீ. வேதநாயகம் வரவேற்புரை வழங்கினார். தமிழகத் தமிழாசிரியர் கழக மேனாள் தலைவர் திரு சு. நஞ்சப்பன் சிறப்புரை வழங்கினார். பயிலரங்கத்தில் கலந்துகொண்ட அனைத்துத் தமிழாசிரியர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

**4** பயிலரங்கு

## இலக்கண - இலக்கியவியல் நோக்கில் சங்க இலக்கியம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் தூத்துக்குடி ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரியும் இணைந்து, 'இலக்கண - இலக்கியவியல் நோக்கில் சங்க இலக்கியம்' எனும் தலைப்பில், 20.01.2010 முதல் 29.01.2010 வரை பயிலரங்கினைத் தூத்துக்குடியில் நடத்தின. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் முனைவர் ச. மனோகரனும் ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரித் தமிழ்த் துறைத்தலைவர் பேராசிரியர் சு. ருக்குமணியும் ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்பட்டார்கள்.

20.01.2010 அன்று காலை 11 மணியளவில் நடந்த தொடக்க விழாவில் கல்லூரித் தலைவர் திரு ஏ.பி.சி.வீ. சொக்கலிங்கம் தலைமையுரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஐம்பெருங் குழு உறுப்பினர் முனைவர் ஔவை. நடராசன் சிறப்புரை ஆற்றினார். பெருங்குளம் செங்கோல் ஆதீனம் சீர்வளர்சீர் கல்யாண சுந்தர சத்திய ஞான தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் வாழ்த்துரை வழங்கினார். முனைவர் ச. மனோகரன் பயிலரங்க அறிமுகவுரை அளித்தார். ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சோ. குருலட்சுமி வாழ்த்துரை வழங்கினார். பேராசிரியர் சு. ருக்குமணி விழாவில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றிநவின்றார்.

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக மாணவர்களும் பல்கலைக்கழகக் கல்லூரிகளின் மாணவர்களும் மதுரைப் பல்கலைக்கழக மாணவர்களுமாக மொத்தம் ஐம்பத்தைந்து பேர் பயிலரங்கில் கலந்துகொண்டனர். பயிலரங்கப் பயிற்றுவிப்பாளர்களாகக் கீழ்க்காணும் 31 ஆய்வறிஞர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

பேராசிரியர் **அ. சீனிவாசன்**
பேராசிரியர் **சு. ருக்குமணி**
முனைவர் **கே. இராமச்சந்திரன்**
முனைவர் **வி. சசிகலா**
முனைவர் **திருஞானசம்பந்தம்**
முனைவர் **உ. அனார்கலி**
முனைவர் **மா. செந்தில்செல்வக்குமரன்**
பேராசிரியர் **சு. அழகேசன்**
முனைவர் **வி. கட்டளை கைலாசம்**
முனைவர் **மு. பாண்டி**
முனைவர் **அ. அறிவுநம்பி**
முனைவர் **நீ. கந்தம்மாள்**
முனைவர் **எம். சரோஜா**
பேராசிரியர் **தொ. பரமசிவன்**
பேராசிரியர் **சதீஷ்**
முனைவர் **ஐ. நீலகண்டபிள்ளை**
பேராசிரியர் **வ. ஜெயா**
பேராசிரியர் **தயாளன்**
முனைவர் **எம். ஜோசப்**
முனைவர் **சு. பானுமதி**
முனைவர் **எஸ். ஸ்ரீகுமார்**
முனைவர் **அ. இராமசாமி**
பேராசிரியர் **ஆ. சிவசுப்பிரமணியன்**
முனைவர் **பா. ஆனந்தகுமார்**
முனைவர் **பெ. சுயம்பு**
பேராசிரியர் **பா. வேலம்மாள்**
பேராசிரியர் **பா. வல்சகுமார்**
பேராசிரியர் **சோ. குருலட்சுமி**
பேராசிரியர் **சி. கமலி**
முனைவர் **ச. பாரிஜாதம்**
பேராசிரியர் **மு. சுப்பம்மாள்**

பயிலரங்கில் நடத்தப்பட்ட தேர்வில் செல்வன் சங்கர நாராயணன் முதலிடமும் செல்வி சேர்மக்கனி இரண்டாம் இடமும் பெற்றனர். இவர்களுக்குச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் சார்பாகச் சிறப்புச் சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கப்பட்டன.

29.01.2010 அன்று மாலை 3.00 மணியளவில் நடந்த நிறைவு விழாவில் கல்லூரிச் செயலர் திருமதி சுப்புலட்சுமி சொக்கலிங்கம் முன்னிலையேற்றார். பேராசிரியை நீ.கந்தம்மாள் வரவேற்புரையாற்றினார்.

CICTArchives



ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் சு. ருக்குமணி பயிலரங்கத் தொகுப்புரையை அளித்தார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி தம் நிறைவுரையில், தமிழ் பயிலும் மாணவர்களுக்கு உரிய வேலைவாய்ப்புக்களைப் பெற மொழியறிவோடு பிறதுறை அறிவும் இக்காலத்தில் இன்றியமையாதது என்று எடுத்துரைத்தார். முனைவர் உ. அனார்கலி அனைவருக்கும் நன்றி கூறினார்.

5 பயிலரங்கு

## இலக்கியவியல் நோக்கில் சிலப்பதிகாரம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் எம்.ஜி.ஆர். கலை அறிவியல் கல்லூரியும் இணைந்து 'இலக்கியவியல் நோக்கில் சிலப்பதிகாரம்' என்னும் தலைப்பில் 20.01.2010 முதல் 29.01.2010 வரை பயிலரங்கம் ஒன்றை ஒசூரில் நடத்தின. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இணை ஆய்வறிஞர் முனைவர் கூ.மு. புவனேசுவரியும் எம்.ஜி.ஆர். கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் மு. செந்தில்குமாரும் ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்பட்டார்கள்.

20.01.2010 அன்று காலையில் நடைபெற்ற தொடக்க விழாவில் எம்.ஜி.ஆர். கலை அறிவியல் கல்லூரி முதல்வர் (பொறுப்பு) முனைவர் அ. முத்துமணி வரவேற்புரைவழங்கினார். பெரியார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் மு. தங்கராசு தலைமையேற்று உரை நிகழ்த்தினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன எண்பேராய உறுப்பினர் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் சிறப்புரைவழங்கினார். அதியமான் பொறியியல் கல்லூரி முதல்வர் முனைவர் ஜி. அரங்கநாத் வாழ்த்துரைவழங்கினார். ஒருங்கிணைப்பாளர் முனைவர் மு. செந்தில்குமார் நன்றிநவின்றார்.

பயிலரங்கத்தில் பல்வேறு பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளிலிருந்து 58 ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வு மாணவ மாணவியர் கலந்துகொண்டு பயிற்சிபெற்றனர். பயிற்சி வகுப்பில் அனைவருக்கும் சிலப்பதிகார நூல் வழங்கப்பட்டது. சிலப்பதிகாரத்தின் வரிப்பாடல்கள் சிலவற்றில் மாணவர்களுக்கு இசைப்பயிற்சியும் அளிக்கப்பட்டது. பின்வரும் 22 ஆய்வறிஞர்கள் மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தனர்.

முனைவர் **பிரேமா**
முனைவர் **நா. பழனிவேலு**
முனைவர் **அ. சீனிச்சாமி**
முனைவர் **சௌ. கீதா**
முனைவர் **பா. சம்பத்குமார்**
பேராசிரியர் **பெ. மாதையன்**
பேராசிரியர் **இரா. கோதண்டராமன்**
முனைவர் **ச. சிவகாமி**
முனைவர் **டி. இராசேசுவரி**
பேராசிரியர் **ப. மருதநாயகம்**
முனைவர் **பழனிவேல்**
முனைவர் **ய. மணிகண்டன்**
முனைவர் **மா. கிருபாகரன்**
முனைவர் **இரா. காசிராஜன்**
முனைவர் **நசீம்தீன்**
முனைவர் **ஜான் மனுவேல்**
முனைவர் **ச. இராதாகிருட்டிணன்**
முனைவர் **ச. திருஞானசம்பந்தம்**
முனைவர் **இரா. சாந்தி**
முனைவர் **அ. சீனிவாசன்**
முனைவர் **ச. அழகிரி**
முனைவர் **கி. நாச்சிமுத்து**

29.01.2010 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற்ற நிறைவு விழாவில் ஒருங்கிணைப்பாளர் முனைவர் கூ.மு. புவனேசுவரி வரவேற்புரை வழங்கினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன எண்பேராய உறுப்பினர் பேராசிரியர் மா. நன்னன் சிறப்புரையாற்றிப் பங்குபெற்றவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கினார். எம்.ஜி.ஆர். கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் த. கண்ணன் நன்றி நவின்றார்.





CICTArchives



6 பயிலரங்கு

## சங்க இலக்கிய ஆய்வில் நவீனக் கோட்பாட்டு அணுகுமுறைகள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழக இலக்கியத் துறையும் இணைந்து 'சங்க இலக்கிய ஆய்வில் நவீனக் கோட்பாட்டு அணுகுமுறைகள்' என்னும் தலைப்பில் 01.02.2010 முதல் 10.02.2010 வரை பயிலரங்கை நடத்தின. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இணை ஆய்வறிஞர் முனைவர் கூ.மு. புவனேசுவரியும் தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழக இலக்கியத் துறைப் பேராசிரியர் முனைவர் இரா. காமராசுவும் ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்பட்டார்கள்.

01.02.2010 அன்று முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்ற தொடக்க விழாவிற்குத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் தலைமையேற்றார். பயிலரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் இரா. காமராசு அறிமுகவுரையாற்றினார். மொழிப்புலத் தலைவர் முனைவர் ஆறு. இராமநாதன் வாழ்த்துரை வழங்கினார். ஆய்வறிஞர் கோவை ஞானி தொடக்கவுரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி சிறப்புரையாற்றினார். இலக்கியத்துறைப் பேராசிரியர் முனைவர் த.நா. ஈசுவரப்பிள்ளை நன்றிகூறினார்.

இப்பயிலரங்கில் மாணவர்கள் கலந்துகொண்டு பயன் அடைந்தனர். 20 ஆய்வறிஞர்கள் சிறப்பாகப் பயிற்றுவித்தார்கள். அவர்கள் பட்டியல் வருமாறு:

பேராசிரியர் **ஆ. சிவசுப்பிரமணியன்**
பேராசிரியர் **அ. குணசேகரன்**
பேராசிரியர் **தி.சு. நடராசன்**
கவிஞர் **பரிணாமன்**
முனைவர் **க. நெடுஞ்செழியன்**
பேராசிரியர் **பா. ஆனந்தகுமார்**
பேராசிரியர் **ந. முத்துமோகன்**
பேராசிரியர் **தி.கு. இரவிச்சந்திரன்**
பேராசிரியர் **அ. மங்கை**
பேராசிரியர் **வீ. அரசு**
பேராசிரியர் **நா. ஸ்டீபன்**
முனைவர் **ராஜ்கவுதமன்**
பேராசிரியர் **அ. இராமசாமி**
பேராசிரியர் **கா. இராஜா**
பேராசிரியர் **பா. மதிவாணன்**
பேராசிரியர் **ப. மருதநாயகம்**
பேராசிரியர் **க. பூரணசந்திரன்**
பேராசிரியர் **பிலவேந்திரன்**
பேராசிரியர் **ந. தெய்வசுந்தரம்**
முனைவர் **ந. ஞானதிரவியம்**

10.02.2010 அன்று பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்ற நிறைவு விழாவில், இலக்கியத் துறைப் பேராசிரியர் முனைவர் வ. குருநாதன் முன்னிலையில் பல்கலைக்கழகப் பதிவாளர் வாழ்த்துரை வழங்கினார். தமிழக அரசு மகளிர் திட்ட இயக்குநர் திரு த. உதயச்சந்திரன் இ.ஆ.ப. சிறப்புரை ஆற்றினார். பயிலரங்க மாணவர்களில் சிலர் தங்கள் பயனுரையில் சங்க இலக்கிய ஆய்வில் புதிய ஆய்வணுகுமுறைகளை அறிந்துகொள்வதற்கும் புதிய ஆய்வுக் களங்களை இனம் காண்பதற்கும் சங்க இலக்கிய ஆய்வை ஆழமாக நடத்துவதற்கும் இப்பயிலரங்கு ஆய்வாளர்களுக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்திருக்கின்றது என்று எடுத்துரைத்தனர். ஒருங்கிணைப்பாளர் முனைவர் கூ.மு. புவனேசுவரி நன்றிகூறினார்.

7 பயிலரங்கு

## சங்க இலக்கியத்தில் மானுட மதிப்புக்கள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் விருத்தாசலம் திரு கொளஞ்சியப்பர் கலைக் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து 'சங்க இலக்கியத்தில் மானுட மதிப்புக்கள்' என்னும் பொருளில் 8.2.2010 முதல் 17.2.2010 வரை விருத்தாசலத்தில் தேசியப் பயிலரங்கை நடத்தின. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இணை ஆய்வறிஞர் முனைவர் மு. இராமகிருஷ்ணனும் முனைவர் ஆர். கருணாநிதியும் ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்பட்டார்கள்.

பயிலரங்கத் தொடக்க விழா 08.02.2010 காலை 10 மணிக்கு எஸ்.தங்கதுரை தலைமையில் நடைபெற்றது. முனைவர் ஆர். கருணாநிதி வரவேற்புரைவழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் சி.என். காந்தி சிறப்புரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் கு.சிவமணி தொடக்கவுரை வழங்கிப் பயிலரங்கின் நோக்கத்தை விளக்கினார். சென்னைக் கல்லூரிக் கல்வி இயக்ககத் திட்டப் பணி, மேம்பாட்டுத் துறைத் துணை இயக்குநர் முனைவர் ஆ. பன்னீர்செல்வம் வாழ்த்துரைவழங்கினார். திருச்சிராப்பள்ளி உருமு தனலட்சுமி கல்லூரி முதல்வர் முனைவர் கே.சேகர் சங்க இலக்கியச் சிறப்புக்களை எடுத்துக் கூறினார். தமிழ்த் துறைப் பேராசிரியர் ப.முத்தழகன் நன்றிகூறினார்.

இப்பயிலரங்கில் தமிழ்நாடு, புதுச்சேரி மாநிலங்களைச் சேர்ந்த 50 மாணவர்கள் கலந்து பயன் பெற்றனர். கீழ்க்காணும் 33 அறிஞர்கள் தங்கள் ஆய்வுக் கருத்துக்களை வழங்கினர்.

முனைவர் **டி.வி. இராசேந்திரன்**
பேராசிரியர் **இரா. மனுவேல்**


முனைவர் **எஸ். ஈஸ்வரன்**
முனைவர் **மே.து. ராசுகுமார்**
முனைவர் **ஏ. அழகிரிசாமி**
முனைவர் **ஐ.ஆர். இரவிச்சந்திரன்**
பேராசிரியர் **இரா. மோகன்**
முனைவர் **நிர்மலா மோகன்**
முனைவர் **ஏ. தண்டபாணி**
முனைவர் **இரா. அறவேந்தன்**
பேராசிரியர் **வீ. அரசு**
முனைவர் **இளங்கோவன்**
பேராசிரியர் **க. நெடுஞ்செழியன்**
முனைவர் **இரா. சக்குபாய்**
முனைவர் **எம். கிருபாகரன்**
முனைவர் **ச. அமிர்தலிங்கம்**
முனைவர் **ய. மணிகண்டன்**
முனைவர் **சிவ. மாதவன்**
முனைவர் **எஸ். தங்கதுரை**
பேராசிரியர் **க. பஞ்சாங்கம்**
முனைவர் **எம். சற்குணம்**
முனைவர் **இரா. இலட்சாராமன்**
முனைவர் **எம். பழனியப்பன்**
திரு **பி. சிவநேசன்**
முனைவர் **சி. சத்தியசீலன்**
திரு **கே. துரையரசன்**
முனைவர் **எஸ். திருநாவுக்கரசு**
திரு **டி. கனகசபை**
பேராசிரியர் **அ. அறிவுநம்பி**
முனைவர் **மு. இராமகிருஷ்ணன்**
முனைவர் **ஆர். கருணாநிதி**
முனைவர் **அரங்க. பாரி**
பேராசிரியர் **தாயம்மாள்அறவாணன்**

நிறைவு விழா 17.02.2010 அன்று மாலை 2.30 மணி அளவில் நடந்தது. முனைவர் சி.என். காந்தி தலைமையேற்றார். முனைவர் எஸ். தங்கதுரை அனைவரையும் வரவேற்றார். விருத்தாசலத்திலுள்ள தமிழ்நூல் காப்பக நிறுவனர் திரு பல்லடம் மாணிக்கம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சங்க காலத்தில் காணப்படும் தமிழ் அடையாளங்கள்பற்றி விளக்கமாக உரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி நிறைவு உரையில் இளம் தமிழறிஞரின் வளர்ச்சிக்காகப் பல்வேறு விதங்களில் இந்நிறுவனம் எடுக்கும் முயற்சிகளைப்பற்றிப் பேசினார். பழந்தமிழின் தொன்மையையும் தனித்தன்மையையும் வெளிக்கொண்டுவர ஆர்வம் உள்ளவர்க்குக் கிடைக்கும் வசதிகளைப்பற்றிப் பட்டியல் இட்டார். திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் க.ப.அறவாணன் நிறைவுரையாற்றினார். புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழர்களின் தமிழ் அடையாளத் தேவையை அதில் வலியுறுத்தினார். 140 நாடுகளில் தமிழர்கள் வாழ்கிறார்கள். உலகப் பண்பாட்டைக் கட்டமைப்பதில் தவிர்க்க இயலாத பங்களிப்பைத் தமிழர்கள் செய்துள்ளனர் என்று எடுத்துக்கூறினார். இறுதியாக முனைவர் ஆர். கருணாநிதி நன்றிகூறினார்.

## இரு சங்க இலக்கிய நாடகங்கள்

மரப்பாச்சி அமைப்பு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதி நல்கையுடன் 08.04.2010 அன்று 'பல்சான்றீரே', 'யாது நம் ஊர்?' ஆகிய இரு நாடகங்களைச் சென்னை மயிலாப்பூரில் உள்ள சிவகாமி பெத்தாச்சி அரங்கில் நடத்தியது. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி முன்னிலை வகித்தார். முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் சிறப்புரை ஆற்றினார். கவிஞர் இன்குலாப் இந்நாடகங்களை எழுதியிருந்தார். முனைவர் அ. மங்கை இந்நாடகங்களை இயக்கினார்.







பேராலவாயர், கரவீரனார் போன்ற ஆண்பாற் புலவர்களின் பாடலில் கணவனை இழந்த மகளிர் குறித்து வெளிப்படும் தந்தையின் ஆதிக்கக் கருத்துக்களைச் சங்க இலக்கிய வெளியில் நின்று கொண்டே பரத்தை ஒருத்தி கேள்வி கேட்பதாகப் 'பல்சான்றீரே' என்னும் நாடகம் அமைந்திருந்தது. பாரிமகளிரின் அற்றைத் திங்கள் என்று தொடங்கும் பாடல் சொந்த மண்ணை இழந்து புலம்பெயர்ந்து வாழும் தமிழரின் அனுபவமாக மாறியுள்ளது. நாட்டார் பாடல்கள், சமகாலக் கவிதைகள் அனைத்திலும் எதிரொலிக்கும் குரலாக இப்பாடல் 'யாது நம் ஊர்?' என்னும் நாடகத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

CICTArchives



# தொல்காப்பியம் புதுமையும் மரபும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து 'தொல்காப்பியம் புதுமையும் மரபும்' என்னும் பொருண்மையில் 15.2.2010 முதல் 24.2.2010 முடிய 10 நாள்கள் பயிலரங்கை நடத்தின.

15.2.2010 அன்று முற்பகல் 11.30 மணியளவில் பச்சையப்பன் கல்லூரி முதல்வர் (பொறுப்பு) இராம. ருக்மணி முன்னிலையில் நடந்த தொடக்க விழாவில், பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் இராம. வேணுகோபால் வரவேற்புரை வழங்கினார். முனைவர் இராம. ருக்மணி பயிலரங்கம் பற்றிய கருத்துக்களையும் தொல்காப்பியத்தின் சிறப்பையும் எடுத்துரைத்தார். பச்சையப்பன் அறக்கட்டளைத் தலைவர் முனைவர் ஐசரி கணேஷ் தலைமையுரையில் பயிலரங்கம்குறித்தும் பச்சையப்பன் கல்லூரிபற்றியும் விளக்கமாகக் கூறினார். பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த் துறைப் பேராசிரியர் முனைவர் வா.மு.சே. ஆண்டவர் நோக்கவுரையை நல்கினார். தமிழக உயர்கல்வித் துறை அமைச்சர் மாண்புமிகு முனைவர் க.பொன்முடி பயிலரங்கத்தைத் தொடங்கிவைத்துத் தொல்காப்பியத்தின் சிறப்பை எடுத்துக்கூறினார். அண்ணாமலைப் பல்கலைக்கழக மேனாள் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் ஆறு. அழகப்பன், தமிழ்ப் பல்கலைக்கழக இலக்கியத் துறை மேனாள் தலைவர் முனைவர் சோ.ந. கந்தசாமி ஆகியோர் வாழ்த்துரைவழங்கினார்கள். கல்லூரி முனைவர் பட்ட ஆய்வாளர் கோ.வி. செழியன் தொகுப்புரைவழங்கினார். பயிலரங்க அறிமுகவுரையைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இணை ஆய்வறிஞர் முனைவர் கி. செயக்குமார் வழங்கினார். தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் பி. பிரகாசம் நன்றிநவின்றார்.

இப்பயிலரங்கத்தில் 60 ஆய்வு மாணவர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

முனைவர் **சு. இன்னாசி**
முனைவர் **சுதந்திரமுத்து**
முனைவர் **மோசஸ் மைக்கேல் பாரடே**
முனைவர் **இரகுராமன்**
பேராசிரியர் **சோ.ந. கந்தசாமி**
முனைவர் **சு. முருகையன்**
பேராசிரியர் **முருகரத்தனம்**
முனைவர் **டேவிட் பிரபாகரன்**
பேராசிரியர் **ப. மருதநாயகம்**
முனைவர் **இலட்சுமி நாராயணன்**
முனைவர் **சந்திரா**
பேராசிரியர் **ஆறு. அழகப்பன்**
முனைவர் **இரா. சீனிவாசன்**
முனைவர் **சு. அழகேசன்**
முனைவர் **இரா. இராசேந்திரன்**
முனைவர் **சேக் மீரான்**
முனைவர் **ய. மணிகண்டன்**
முனைவர் **இராம. குருநாதன்**
முனைவர் **ஜே.ஆர். லட்சுமி**
முனைவர் **இரா. குமரவேலன்**
முனைவர் **வா.மு.சே. ஆண்டவர்**
முனைவர் **எஸ். ஆரோக்கியநாதன்**
முனைவர் **பொ.நா. கமலா**
முனைவர் **இரா. மாயாண்டி**
முனைவர் **பரமசிவம்**
முனைவர் **சா. வளவன்**
முனைவர் **ப. மகாலிங்கம்**
முனைவர் **தெ. ஞானசுந்தரம்**
முனைவர் **ச. குருசாமி**
முனைவர் **ந. தெய்வசுந்தரம்**
பேராசிரியர் **செ.வை. சண்முகம்**

ஆகிய அறிஞர்கள் தங்கள் ஆய்வுக் கட்டுரைகளை வழங்கினர்.

24.2.2010 அன்று காலை 11.15 மணி அளவில் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் இராம. வேணுகோபால் முன்னிலையில் நடந்த நிறைவு விழாவில், பச்சையப்பன் கல்லூரி முதல்வர் (பொறுப்பு) முனைவர் இராம. ருக்மணி வரவேற்புரை வழங்கினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி தொடக்கவுரை நிகழ்த்தினார். பயிலரங்க மாணவர்கள் தங்கள் கருத்துரையை வழங்கினார்கள். தமிழகத் தொழிலாளர் - வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் மாண்புமிகு தா.மோ.அன்பரசன் பங்கேற்றவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கிச் சிறப்புரை நிகழ்த்தினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் எண்பேராய உறுப்பினர் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் நிறைவுரையாற்றினார். பயிலரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் வா.மு.சே. ஆண்டவர் நன்றிநவின்றார்.






CICTArchives



9 பயிலரங்கு

## சங்க இலக்கியப் பின்புலமும் மொழிக் கட்டமைப்பும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் அ.வா. வீரையா வாண்டையார் நினைவு திரு புட்பம் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து 'சங்க இலக்கியப் பின்புலமும் மொழிக் கட்டமைப்பும்' என்னும் பொருண்மையில் 15.02.2010 முதல் 24.02.2010 முடிய பத்து நாட்கள் பயிலரங்கம் ஒன்றை நடத்தின.

15.02.2010 திங்கள்கிழமை காலை 9.30 மணி அளவில் நடந்த தொடக்க விழாவில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றுத் தொடக்கவுரை நிகழ்த்தினார். அவர் தம் உரையில், நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்தும் பயிலரங்குகள் நடத்துவதன் நோக்கங்கள் குறித்தும் எடுத்துரைத்தார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் எண்பேராய உறுப்பினர் பேராசிரியர் மா. நன்னன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சங்க இலக்கிய விழுமியங்களை எடுத்துரைத்தார். திரு புட்பம் கல்லூரித் தாளாளர் திரு கி. துளசி ஐயா வாண்டையார் வாழ்த்துரையில் தமிழ்மொழிச் சிறப்புக்களை விளக்கினார். சங்க இலக்கியப் பயிலரங்கில் பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்குட்பட்ட பல்வேறு கல்லூரிகளைச் சார்ந்த கல்வியியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வு மாணவர்கள் 50 பேர் பங்கேற்றனர்.

இலக்கண இலக்கிய ஆராய்ச்சி அறிஞர்களும் தொல்லியல் வரலாற்று அறிஞர்களும் தங்கள் ஆய்வுக் கட்டுரைகளைப் படித்தனர். அவர்கள் பட்டியல் வருமாறு:

முனைவர் **எல். பூமி**
முனைவர் **மு. இளமுருகன்**
முனைவர் **அ. ஆலிஸ்**
முனைவர் **ச. திருஞானசம்பந்தம்**
முனைவர் **இராமையா**
முனைவர் **ர. ஞானசேகரன்**
முனைவர் **எ. செல்வராசு**
முனைவர் **ஜி. இராஜேந்திரன்**
பேராசிரியர் **வீ. அரசு**
முனைவர் **கே.வி. பாலசுப்பிரமணியம்**
பேராசிரியர் **பழனி அரங்கசாமி**
முனைவர் **அர. பூங்குன்றன்**
முனைவர் **மு. இளங்கோவன்**
புலவர் **செ. இராசு**
முனைவர் **பி. அருள்**
முனைவர் **அ. தட்சிணாமூர்த்தி**
முனைவர் **ச. சிவகாமி**
முனைவர் **என்.வி. கருப்பசாமி**
முனைவர் **சி. சுந்தரேசன்**
முனைவர் **ஆர். விஜயராணி**

பேராசிரியர்கள் நாள்தோறும் மொழிப்பயிற்சி அளித்ததால், பங்கேற்ற ஆய்வு மாணவர்கள் மொழியைச் செப்பமாகப் பயன்படுத்தும் நெறிமுறைகளைக் கற்றுத்தேர்ந்தனர்.

24.02.2010 அன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்ற நிறைவு விழாவில் பயிலரங்க ஒருங்கிணைப்பாளர் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் இரெ. குமரன் வரவேற்புரை நிகழ்த்தினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன முதுநிலை ஆய்வறிஞர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி பங்கேற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கி நிறைவுப் பேருரை நிகழ்த்தினார். பேராசிரியர் க. மனோகரன் நன்றிநவின்றார்.

10 பயிலரங்கு

## சிலப்பதிகாரத்தில் கலை, பண்பாட்டு நவிற்சி

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கோவை பாரதியார் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையும் இணைந்து 'சிலப்பதிகாரத்தில் கலை - பண்பாட்டு நவிற்சி' என்னும் தலைப்பில் 16.02.2010 முதல் 25.02.2010 வரை தேசியப் பயிலரங்கினைப் பல்கலைக்கழக வளாகத்தில் நடத்தின. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் ஆய்வறிஞர் முனைவர் கா. உமாராஜும் பாரதியார் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் சி.மா. இரவிச்சந்திரனும் ஒருங்கிணைப்பாளர்களாக விளங்கினார்கள்.

பயிலரங்கத் தொடக்க விழா 16.02.2010 அன்று காலை நடைபெற்றது. பாரதியார் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் ப. திருமாவளவன் தலைமையேற்று நடத்தினார். பல்கலைக்கழகத் தமிழ்த் துறைப் பேராசிரியர் முனைவர் வ.ஜெயா விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்று உரைநிகழ்த்தினார். தமிழறிஞர் முனைவர் மா.ரா.போ. குருசாமி தொடக்கவுரையில் தமிழ் மொழியின் தொன்மையையும் அதன் வரலாற்று வளர்ச்சியையும் எடுத்துக் கூறியதுடன் செம்மொழித் தமிழ் பிற செம்மொழிகளிலிருந்து தனித்து விளங்கும் பண்புகளையும் எடுத்துக்கூறினார்.

பேராசிரியர் சி.மா. இரவிச்சந்திரன் அறிமுகவுரையில் பயிலரங்க நோக்கங்களை விளக்கமாக எடுத்துரைத்தார். செம்மொழித் தமிழின் வளர்ச்சியும் மேம்பாடும் இளைய தலைமுறையினரிடம்தான் உள்ளன என்றும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் குறிக்கோள் தமிழியலில் ஆர்வமுள்ள இளம் அறிஞர்களுக்குப் பயிற்சி அளிப்பது என்றும் கூறினார். இறுதியாக முனைவர் டி. குணசேகரன் நன்றிநவின்றார்.

இப்பயிலரங்கில் 66 பேர் பங்குபெற்றனர். கீழ்க்காணும் அறிஞர்கள் அமர்வுகளின்போது தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

CICTArchives





முனைவர் **கே.எஸ். கமலேஸ்வரன்**
முனைவர் **பி.ஆர். சத்தியமூர்த்தி**
முனைவர் **வி.எம். ஷாஜகான்**
முனைவர் **நா. மம்மது**
முனைவர் **டி. தமிழரசி**
முனைவர் **பெருமாள் முருகன்**
முனைவர் **வ. ஜெயா**
முனைவர் **அமுதன்**
முனைவர் **அரிமளம் சு. பத்மநாபன்**
முனைவர் **எம். மனோன்மணி**
முனைவர் **டி.கே. இரவிச்சந்திரன்**
முனைவர் **ஐ.கே. சுப்பிரமணியன்**
முனைவர் **பி. குழந்தைசாமி**
பேராசிரியர் **ஓ. முத்தையா**
பேராசிரியர் **அ. அறிவுநம்பி**
முனைவர் **எஸ்.ஏ. இராஜராஜன்**
திரு **கோவை ஞானி**
முனைவர் **எம். வைத்தியலிங்கம்**
பேராசிரியர் **இரா. மோகன்**
முனைவர் **நிர்மலா மோகன்**
பேராசிரியர் **இராம. பெரியகருப்பன்**
பேராசிரியர் **பி. சுப்பிரமணியன்**
முனைவர் **அ. சீனிவாசன்**
பேராசிரியர் **ஏ. மருததுரை**
முனைவர் **மு. மணிவேல்**
முனைவர் **துரை. சீனிச்சாமி**
பேராசிரியர் **க. பஞ்சாங்கம்**
பேராசிரியர் **எஸ். இராதாகிருஷ்ணன்**
முனைவர் **ஏ. தனலட்சுமி**
முனைவர் **இரா. காசிராஜன்**
முனைவர் **ஆர். இராமலிங்கம்**

25.02.2010 அன்று மாலை நான்கு மணியளவில் நடைபெற்ற நிறைவு விழாவிற்கு முனைவர் ப. திருமாவளவன் தலைமையேற்றார். முனைவர் கா. உமாராஜ் வரவேற்புரைவழங்கினார். தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் ஔவை நடராசன் நிறைவுரையில் தமிழ்மொழியின் பல்வேறு கூறுகளையும் சிலப்பதிகாரத்தின் கவிதை, காப்பியப் பண்புகளையும் விளக்கமாக எடுத்துரைத்தார். சிலப்பதிகாரக் கலை - பண்பாட்டு விழுமியங்களை வெளிப்படுத்தித் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் இளைய தலைமுறையினர் பணியாற்ற வேண்டும் என்று கூறினார். இறுதியாகப் பாரதியார் பல்கலைக்கழகத் தமிழ்த் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் ஓ. பாலகிருஷ்ணன் நன்றிநவின்றார்.

**11** பயிலரங்கு

## பழம் ஓலைச்சுவடிப் பயிலரங்கம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் உ.வே.சாமிநாதையர் நூலகமும் இணைந்து பழம் ஓலைச்சுவடிப் பயிலரங்கத்தினை 01.03.2010 முதல் 11.03.2010 முடிய நடத்தின.

01.03.2010 அன்று காலை 10 மணியளவில் டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூலகக் குழுத் தலைவர் வா.செ.குழந்தைசாமி முன்னிலையில் தொடக்க விழா நடைபெற்றது. உ.வே.சா. நூலகக் காப்பாட்சியர் பேராசிரியர் வே. பசுபதி வழங்கிய வரவேற்புரையில் உ.வே.சா.வின் தளராத உழைப்பையும் தமிழ் இலக்கியங்களை மீட்டெடுக்க அவர் சந்தித்த இன்னல்களையும் விளக்கினார். தமிழக அரசின் மேனாள் நிதிச் செயலாளர் சு.மு. சுவாமிநாதன் விழாத் தலைமையேற்று, 2000க்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிகள் இந்நூலகத்தில் உள்ளனவென்றும் இன்னும் பதிப்பிக்காத நூற்சுவடிகளைக் கண்டு மீட்டெடுத்துப் பதிப்பிப்பதே இப்பயிலரங்கத்தின் நோக்கமென்றும் கூறினார். பொது நூலகத் துறையின் இயக்குநர் க. அறிவொளி தன் தொடக்கவுரையில் மெய்ப்புத் திருத்துவதற்கும் பிழையில்லாமல் எழுதுவதற்கும் பதிப்பிப்பதற்கும் ஒரு பயிலரங்கம் நடத்தப்பட வேண்டும் என்னும் கருத்தை முன்மொழிந்தார். தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி வழங்கிய உரையில் உ.வே.சா. நூலகம் ஒரு நூற்றாண்டு வரலாறு கொண்டது என்றும் அதன் வளர்ச்சிப் பணிகளைத் தான் கண்டு வருவதாகவும் கூறினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி, தினமலர் இணை ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி, அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்தைச் சார்ந்த திரு ஆவுடையப்பப்பிள்ளை, அமுதசுரபி ஆசிரியர் திருப்பூர் கிருஷ்ணன் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள். பேராசிரியர் வே. பசுபதி நன்றி கூறினார்.

இப்பயிலரங்கில் 33 ஆய்வு மாணவர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

பேராசிரியர் **தி. மகாலெட்சுமி**
முனைவர் **இரா. நாகசாமி**

CICTArchives



முனைவர் **ய. மணிகண்டன்**
பேராசிரியர் **ப. செயக்குமார்**
பேராசிரியர் **வ. செயதேவன்**
பேராசிரியர் **மு. இளமுருகன்**
முனைவர் **ஜி. சங்கரநாராயணன்**
முனைவர் **சு. சௌந்தரபாண்டியன்**
பேராசிரியர் **நிர்மலாதேவி**
புலவர் **மகாதேவன்**
திரு **கோ. உத்திராடம்**
திரு **சாய்ராம்**
திரு **இலட்சுமணக்கவிராயர்**
முனைவர் **த. இ. ராஜேஸ்வரி**
முனைவர் **ம.சா. அறிவுடைநம்பி**
திரு **பத்மநாபன்**
பேராசிரியர் **தாயம்மாள் அறவாணன்**
மகாவித்வான் **வே. சிவசுப்பிரமணியன்**
முனைவர் **இராம. கௌசல்யா**
பேராசிரியர் **வே. சீதாலட்சுமி**
பேராசிரியர் **வீ. அரசு**

ஆகிய அறிஞர்கள் கலந்துகொண்டு தங்கள் ஆய்வுக்கட்டுரைகளை வழங்கினார்கள்.

11.03.2010 அன்று பிற்பகல் 4.00 மணியளவில் நடைபெற்ற நிறைவு விழாவில் உ.வே.சா. நூலகக் காப்பாட்சியர் பேராசிரியர் வே. பசுபதி தலைமை ஏற்று உரைநிகழ்த்தினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத் துணைத்தலைவர் வா.செ. குழந்தைசாமி, உ.வே.சா. நூலக இயக்குநர் ஆர். இராமசாமி, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இயக்குநர் பேராசிரியர் க.மோகன், பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி ஆகிய அறிஞர்கள் உரையாற்றினார்கள். டாக்டர் உ.வே.சா. நூல் நிலையக் குழுத்தலைவர் டாக்டர் வா.செ. குழந்தைசாமி பங்கேற்றவர்களுக்குச் சான்றிதழ்களும் பரிசு நூல்களும் வழங்கி வாழ்த்தினார். திருமதி கலைவாணி நன்றி நவின்றார்.

12 பயிலரங்கு

## சிலப்பதிகாரம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கோயம்புத்தூர்க் கற்பகம் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையும் இணைந்து சிலப்பதிகாரம்பற்றிய தேசியப் பயிலரங்கத்தை 01.03.2010 முதல் 10.03.2010 வரை பல்கலைக்கழக வளாகத்தில் நடத்தின.

பயிலரங்கத் தொடக்க விழா பல்கலைக்கழகப் பாரதி அரங்கத்தில் 01.03.2010 அன்று காலை 10 மணிக்கு நடைபெற்றது. கற்பகம் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் ப. இலட்சுமணப் பெருமாள்சாமி வரவேற்புரை நிகழ்த்தினார். பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ஆர்.வசந்தகுமார் தலைமையுரையை வழங்கினார். பேராசிரியர் தமிழண்ணல் அறிமுகவுரை நிகழ்த்தினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி பயிலரங்கைத் தொடக்கிவைத்து உரையாற்றினார். கற்பகம் குழுமத்தின் முதன்மைச் செயலாட்சி அலுவலர் திரு கே.முருகையா வாழ்த்துரைவழங்கினார். சாகித்திய அகாதெமியின் தமிழ்த் துறை ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் சிற்பி பாலசுப்பிரமணியம் சிறப்புரையாற்றினார். பேராசிரியர் ப. தமிழரசி நன்றிநவின்றார்.

கீழ்க்காணும் அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

பேராசிரியர் **அ. காமாட்சி**
பேராசிரியர் **வி. சுப்பிரமணியன்**
பேராசிரியர் **சி. நம்மாழ்வார்**
பேராசிரியர் **வி.எம். நாகராஜன்**
முனைவர் **நிர்மலா மோகன்**
பேராசிரியர் **இரா. மோகன்**
முனைவர் **ஆ. மணி**
முனைவர் **கு. திருமாறன்**
முனைவர் **ஆர். சொக்கலிங்கம்**
பேராசிரியர் **மு. இளமுருகன்**
முனைவர் **மே.து. ராசுகுமார்**
பேராசிரியர் **டி. முருகசாமி**
முனைவர் **புனிதா ஏகாம்பரம்**
முனைவர் **இரா. காசிராஜன்**
முனைவர் **சு. சந்திரா**
முனைவர் **எம். வள்ளியம்மை**
முனைவர் **பெ. அர்த்தநாரீசுவரன்**
முனைவர் **அ. முத்தையா**
முனைவர் **திலிப்குமார்**
பேராசிரியர் **சரஸ்வதி இராமநாதன்**
பேராசிரியர் **அ. அறிவுநம்பி**
பேராசிரியர் **க. பஞ்சாங்கம்**
முனைவர் **துரை. சீனிச்சாமி**
முனைவர் **வேலாயுதனார்**
பேராசிரியர் **பெ. மாதையன்**
முனைவர் **மு. மணிவேல்**
முனைவர் **இரா. அறவேந்தன்**
முனைவர் **சு. திலகவதி**
முனைவர் **மஞ்சுளா கனகராஜ்**
முனைவர் **சிவ. மாதவன்**
பேராசிரியர் **வ. ஜெயா**

இப்பயிலரங்கத்தின் நிறைவு விழா 10.03.2010 அன்று பாரதி அரங்கத்தில் 2.30 மணிக்கு முனைவர் ஆர். வசந்தகுமார் தலைமையில் நடந்தது. பாரதியார் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் சி.மா. இரவிச்சந்திரன் வாழ்த்துரைவழங்கினார். செம்மொழி நிறுவன ஆய்வறிஞர் கு. சிவமணி நிகழ்ச்சியின் விளக்கமான மதிப்பீட்டு அறிக்கையை அளித்தார். மா.ரா.போ. குருசாமி நிறைவுரையாற்றினார். முனைவர் கே. நிர்மலா தேவி நன்றி நவின்றார்.

CICTArchives



13 பயிலரங்கு

# தொல்காப்பியக் கவிதையியலும் பிந்தைய இலக்கியங்களில் அதன் தாக்கமும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத் தமிழியல் துறையும் இணைந்து 01.03.2010 முதல் 10.03.2010 வரை 'தொல்காப்பியக் கவிதையியலும் பிந்தைய இலக்கியங்களில் அதன் தாக்கமும்' என்னும் தலைப்பில் பயிலரங்கைத் திருநெல்வேலியில் நடத்தின. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் முனைவர் இரெ. குமரனும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் தமிழியல் துறைத் தலைவர் பேராசிரியர் அ. இராமசாமியும் ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்பட்டார்கள்.

01.03.2010 அன்று காலை 10.30 மணியளவில் நடந்த தொடக்க விழாவில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் ச. மாணிக்கம் தலைமையில் பயிலரங்க ஒருங்கிணைப்பாளர் தமிழியல் துறைத் தலைவர் முனைவர் அ. இராமசாமி வரவேற்புரையும் பயிலரங்கத்தைப்பற்றிய அறிமுகவுரையும் வழங்கினார். பெங்களூர்ப் பல்கலைக்கழகத்தின் இந்திய மொழிகள் துறை மேனாள் பேராசிரியர் தமிழவன் சிறப்புரை அளித்தார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் முனைவர் இரெ. குமரன் வாழ்த்துரை வழங்கினார். மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் தமிழியல் துறைப் பேராசிரியர் பே.நடராசன் நன்றிகூறினார்.

பயிலரங்கில் பல்வேறு பல்கலைக் கழகங்களிலிருந்தும் கல்லூரிகளிலிருந்தும் வந்திருந்த 50 ஆய்வு மாணவர்கள் பங்கேற்றனர். இதற்குப் பயிற்றுவிப்பவர்களாகத் தொல்காப்பியத்தைச் சிறப்பாகவும் பொதுநிலையிலும் ஆய்வு செய்த பேராசிரியர்கள், ஆங்கிலத்திலும் சமற்கிருதத்திலும் உள்ள கவிதையியலைக் கற்றுத் துறைபோகிய பிறமொழிப் பேராசிரியர்கள், பண்டைய இலக்கியத்திலிருந்து இன்றைய கவிதைவரை வாசித்து விமர்சனம் செய்யக்கூடிய பேராசிரியர்கள், வல்லுநர்கள், கவிஞர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். அவர்களது பட்டியல் வருமாறு:

பேராசிரியர் **தமிழவன்**
முனைவர் **இரெ. குமரன்**
முனைவர் **தி.சு. நடராசன்**
கவிஞர் **மனுஷ்யபுத்திரன்**
பேராசிரியர் **து. சீனிச்சாமி**
முனைவர் **இரா. சம்பத்**
முனைவர் **ஆ. இருதயராஜ்**
கவிஞர் **சிபிச்செல்வன்**
முனைவர் **த. தர்மராஜ்**
முனைவர் **பெருமாள்முருகன்**
பேராசிரியர் **அ. ஆலீஸ்**
கவிஞர் **சுகுமாரன்**
பேராசிரியர் **க. பஞ்சாங்கம்**
பேராசிரியர் **அ.அ. மணவாளன்**
முனைவர் **மஞ்சுளா கனகராஜ்**
கவிஞர் **கலாப்பிரியா**
முனைவர் **இரா. செயராமன்**
முனைவர் **வெ. சாரதாம்பாள்**
முனைவர் **அ. குணசேகரன்**
கவிஞர் **எச்.ஜி. ரசூல்**
பேராசிரியர் **ப. மருதநாயகம்**
முனைவர் **ந. முருகேசபாண்டியன்**
முனைவர் **க. காசி மாரியப்பன்**
கவிஞர் **சுகிர்தராணி**
முனைவர் **கே. பழனிவேலு**
முனைவர் **இரா. அழகரசன்**
பேராசிரியர் **நா. சிவசு**
கவிஞர் **கரிகாலன்**
கவிஞர் **கல்யாண்ஜி**
முனைவர் **ச. அரங்கநாதன்**
முனைவர் **செ. நாகநாதன்**
முனைவர் **சு. ருக்மணி**
பேராசிரியர் **சு. வெங்கடராமன்**

10.03.2010 அன்று பிற்பகல் 2.30 மணியளவில்





CICTArchives



நடைபெற்ற நிறைவு விழாவில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக மொழித் துறைப் பேராசிரியர் முனைவர் சு. அழகேசன் வரவேற்புரை வழங்கினார். மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் இரா. தி. சபாபதி மோகன் தலைமையேற்று உரையாற்றிப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கினார். அத்துடன் வினாடி வினாப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன. கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியன் பங்கேற்பாளர்களுக்குச் செம்மொழி நிறுவனம் அளித்த நூல்களை வழங்கிச் சிறப்புரை நிகழ்த்தினார். மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் தமிழியல் துறைப் பேராசிரியர் முனைவர் பே. நடராசன் நன்றிகூறினார்.

14 பயிலரங்கு

## இலக்கணவியல், மொழியியல் பார்வையில் தொல்காப்பியம் எழுத்தும் சொல்லும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் நாகர்கோவில் தெ.தி. இந்துக் கல்லூரித் தமிழ்த்துறை ஆய்வு மையமும் இணைந்து 11.03.2010 முதல் 20.03.2010 வரை 'இலக்கணவியல், மொழியியல் பார்வையில் தொல்காப்பியம் - எழுத்தும் சொல்லும்' என்னும் பொருளில் பயிலரங்கினை நாகர்கோவிலில் நடத்தின. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இணை ஆய்வறிஞர் கி. செயக்குமாரும் தெ.தி. இந்துக் கல்லூரித் தமிழ்த்துறை ஆய்வு மையத் தலைவரும் இணைப் பேராசிரியருமான முனைவர் எஸ். ஸ்ரீகுமாரும் ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்பட்டார்கள்.

11.03.2010 அன்று காலை 10 மணியளவில் நடந்த தொடக்க விழாவில் பயிலரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் எஸ். ஸ்ரீகுமார் வரவேற்புரைவழங்கினார். தெ.தி. இந்துக் கல்லூரி ஆட்சிக் குழுத் தலைவர் பொறியாளர் பெ. ஆறுமுகம் பிள்ளை தலைமையேற்றார். தெ.தி. இந்துக் கல்லூரி முதல்வர் முனைவர் அ. மீனாட்சி சுந்தரராசன் முன்னிலை உரை நிகழ்த்தினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் முனைவர் கி. செயக்குமார் அறிமுகவுரையை அளித்தார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன எண்பேராய உறுப்பினர் முனைவர் கவிக்கோ அப்துல் ரகுமான் சிறப்புரையில் தமிழின் தொன்மையையும் சிறப்புக்களையும் சிறப்பாக விளக்கினார். தெ.தி. இந்துக் கல்லூரித் தமிழ்த் துறைப் பேராசிரியை முனைவர் மு.சாந்தாள் நன்றியுரைவழங்கினார்.

பயிலரங்கில், நாகர்கோவில் பகுதியைச் சேர்ந்த கல்லூரிகளிலிருந்து 55 மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

முனைவர் **இரா. தாமோதரன்**
முனைவர் **வீ. வேணுகுமார்**
முனைவர் **கி. அரங்கன்**
முனைவர் **எம். நயினார்**
முனைவர் **சு. ருக்குமணி**
முனைவர் **என். கிருஷ்ணன்**
முனைவர் **அ. ஆலிஸ்**
முனைவர் **ஹம்சா**
முனைவர் **வீ. பழனியப்பன்**
முனைவர் **இரா. மோகன்**
முனைவர் **நிர்மலா மோகன்**
முனைவர் **அ. சீனிவாசன்**
முனைவர் **இரா. கோதண்டராமன்**
முனைவர் **தி. முருகரத்தனம்**
முனைவர் **அ. அறிவுநம்பி**
முனைவர் **வி. கோபால்**
முனைவர் **வி. கட்டளை கைலாசம்**
முனைவர் **ஹம்சம் முஸ்தபா**
முனைவர் **வி. வல்சகுமார்**
முனைவர் **இன்பரோஸ் செல்வின்**
முனைவர் **சு. அழகேசன்**
முனைவர் **பெ. சுயம்பு**
முனைவர் **பி. பத்மநாபபிள்ளை**
முனைவர் **சி. சுப்பிரமணியபிள்ளை**
முனைவர் **காசிராஜன்**
முனைவர் **என். சண்முகம்**
முனைவர் **எஸ். ஸ்ரீகுமார்**
முனைவர் **அ. அனந்தகிருஷ்ணபிள்ளை**
முனைவர் **என். கிருஷ்ணன்**
முனைவர் **தூ. சேதுபாண்டியன்**
புலவர் **எம். காசுமான்**
முனைவர் **தெ.வே. ஜெகதீசன்**
முனைவர் **கே.ஜி. அனிதாகுமாரி**
முனைவர் **புனிதா**
முனைவர் **என். அய்யப்பன்**
பேராசிரியர் **வி. அம்பிகாதேவி**
முனைவர் **டி. நாகலட்சுமி**
முனைவர் **சி. ஜெசிரோஸ்**
முனைவர் **பி.எம். ஜெயகலா**

ஆகிய அறிஞர்கள் பயிலரங்கில் பங்குபெற்று ஆய்வுரை நிகழ்த்தினார்கள்.

பயிலரங்கில் பங்கேற்ற மாணவர்களுக்காக இலக்கணத்தில் வினாடி வினா நிகழ்ச்சியும் வழக்குச் சொற்கள் சேகரிக்கும் பணியும் நடைபெற்றன. சிறந்த முறையில் சேகரித்த தொல்காப்பியர் குழுவிற்குப் பரிசு வழங்கப்பட்டது. வினாடி வினா நிகழ்வில் முதலிடம் பெற்ற மூவருக்குப் பரிசு வழங்கப்பட்டது. இந்துக் கல்லூரியில் பயிலும் மாணவர் ஜெயராமின் 'முகவரி இல்லாத பூக்கள்' 'வசந்தத்தை நாடும் இலைகள்' ஆகிய மரபுக் கவிதை, புதுக்கவிதை நூல்களை முறையே

CICTArchives



கவிக்கோ அப்துல் ரகுமானும் நாவலாசிரியர் பொன்னீலனும் வெளியிட்டது சிறப்பிற்குரியதாகும்.

20.03.2010 அன்று மாலை 3 மணியளவில் நடைபெற்ற நிறைவு விழாவில் தெ.தி. இந்துக் கல்லூரி ஆட்சிக் குழுத் தலைவர் பொறியாளர் பெ. ஆறுமுகம் பிள்ளை தலைமையுரைவழங்கினார். தமிழ்த்துறைப் பேராசிரியை முனைவர் மு. சாந்தாள் வரவேற்புரைவழங்கினார். தெ.தி. இந்துக் கல்லூரி முதல்வர் முனைவர் அ. மீனாட்சிசுந்தரராசன் முன்னிலையில் சாகித்திய அகாதெமி தமிழ்மொழிக் குழு ஒருங்கிணைப்பாளர் கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் நிறைவுரை நிகழ்த்தினார். தெ.தி. இந்துக் கல்லூரி மேனாள் துணை முதல்வர் முனைவர் எஸ். சுப்பிரமணியன் வாழ்த்துரைவழங்கினார். புதின ஆசிரியர் பொன்னீலன் சிறப்புரையாற்றினார். பயிற்சியாளர் மூவர் தம் பட்டறிவுகளைப் பகிர்ந்துகொண்டனர். பயிலரங்கு ஒருங்கிணைப்பாளர் முனைவர் எஸ். ஸ்ரீகுமார் அனைவருக்கும் நன்றி கூறினார்.

**15** பயிலரங்கு

## சிலப்பதிகாரம் மக்கள் காப்பியம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் ஆரோவில் தமிழ் மரபு மையமும் இணைந்து 25.03.2010 முதல் 03.04.2010 வரை "சிலப்பதிகாரம் - மக்கள் காப்பியம்" எனும் பயிலரங்கு ஒன்றை ஆரோவில்லில் நடத்தின. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இணை ஆய்வறிஞர் முனைவர் மு. இராமகிருஷ்ணனும் ஆரோவில் தமிழ் மரபு மையத் தலைவர் கவிஞர் இரா.மீனாட்சியும் ஒருங்கிணைப்பாளர்களாக விளங்கினர்.

2010 மார்ச்சு 25ஆம் நாளன்று காலை 10.30 மணி அளவில் நடைபெற்ற தொடக்க விழாவில் ஒருங்கிணைப்பாளர் ஆரோவில் தமிழ் மரபு மையத் தலைவர் கவிஞர் இரா.மீனாட்சி வரவேற்புரை வழங்கினார். ஆரோவில் தமிழ்மரபு மைய அலுவலகத் தலைமையர் திரு. ச. மகாலிங்கம், திரு. நா.வரதராஜன் ஆகியோர் முன்னிலையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இயக்குநர் பேராசிரியர் க. மோகன் நோக்கவுரை அளித்தார். மூத்த எழுத்தாளர் கி.ராஜநாராயணன் தன் தலைமையுரையில் சிலம்பில் உள்ள புதினக் கூறுகள் பற்றிய கருத்துக்களை எடுத்தியம்பினார். ஆரோவில் தமிழ் மரபு மைய அலுவலகத் தலைமை திரு. ஆ. தில்லைகணபதி நன்றியுரை வழங்கினார்.

புதுவைப் பல்கலைக்கழகச் சுப்பிரமணிய பாரதியார் தமிழியற் புலம், காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையம், மயிலம் தவத்திரு சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை மற்றும் அறிவியல் கல்லூரி, புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றைச் சார்ந்த மாணவர்கள் 50 பேர் கலந்துகொண்டனர்.

முனைவர் **விஜயவேணுகோபால்**
முனைவர் **தெ. ஞானசுந்தரம்**
பேராசிரியர் **எஸ். ஆரோக்கியநாதன்**
முனைவர் **மு. பழனியப்பன்**
தமிழாகரர் **தெ. முருகசாமி**
முனைவர் **வி. அசோக்குமார்**
பேராசிரியர் **க. பஞ்சாங்கம்**
முனைவர் **இரா. குறிஞ்சிவேந்தன்**
முனைவர் **நா. இளங்கோ**
முனைவர் **வெ.மு. ஷாஜஹான் கனி**
முனைவர் **சரசுவதி இராமநாதன்**
தாமரைத்திரு **இந்திரா பார்த்தசாரதி**
முனைவர் **கு. ஞானசம்பந்தம்**
முனைவர் **இரா. இலட்சாராமன்**
முனைவர் **யாழ் சு. சந்திரா**
பேராசிரியர் **ம.இலெ. தங்கப்பா**
முனைவர் **மா. சற்குணம்**
முனைவர் **பழ. முத்தப்பன்**
முனைவர் **தி.சு. நடராசன்**
முனைவர் **சொ. சேதுபதி**
திரு **கே.பி. உமாபதி ஆச்சார்யா**
முனைவர் **இரா. காமராசு**
முனைவர் **சி. இரவீந்திரன்**
முனைவர் **காமாட்சி தரணி சங்கர்**
முனைவர் **அ. அறிவுநம்பி**
முனைவர் **தி. இராசகோபால்**
முனைவர் **நா. புகழேந்தி**
முனைவர் **அ. ஆலிஸ்**
முனைவர் **இரா. மோகன்**
முனைவர் **நிர்மலா மோகன்**
முனைவர் **சிவ. மாதவன்**
பேராசிரியர் **இராம. இராமநாதன்**
முனைவர் **மு. இராமகிருஷ்ணன்**
கவிஞர் **இரா. மீனாட்சி**
பேராசிரியர் **க. நெடுஞ்செழியன்**

ஆகிய ஆய்வறிஞர்கள் கலந்து கொண்டு தங்கள் ஆய்வுக்கட்டுரையை வழங்கிப் பயிலரங்கினைச் சிறப்படையச் செய்தனர். புதுவை மொழியியல் பண்பாட்டு நிறுவனம் சார்பில் கலந்துகொண்ட மூத்த புலவர் திரு. வேல்முருகன் பயிலரங்கிற்கு உறுதுணையாக இருந்தார். ஒவ்வொரு நாள் அன்றும் நிறைவு நிகழ்ச்சியாகக் குறும்படம், கதை சொல்லல், சிலப்பதிகார இசை நிகழ்ச்சி போன்ற பல சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பன்னாட்டு ஆரோவில் வாசகருக்காகச் சிலப்பதிகாரக் கதையைப் புதுவைச் செவாலியே மதன கல்யாணி பிரெஞ்சு மொழியில் சொன்னது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

2010 ஏப்ரல் 3ஆம் நாளன்று பிற்பகல் 2.30 மணி அளவில் நடைபெற்ற நிறைவு விழா செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி அனுப்பிய வாழ்த்துரையுடன் தொடங்கியது. முனைவர் சொ.சேதுபதி நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். பாவேந்தர் பாரதிதாசன் திருமகனார் தமிழ்மாமணி திரு மன்னர்மன்னன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, சிலம்பு இயற்றிய இளங்கோவடிகள் வழியமைத்துத் தந்த பெண்ணிய உயர்வைப் பாவேந்தர் பாரதிதாசன் உட்படப் பல படைப்பாளிகளைத் தொடர்ந்து தமிழின் இலக்கியப் பார்வையில் பதித்து வந்துள்ள செய்திகளைப் பகிர்ந்தும், சிலப்பதிகாரம் காலந்தோறும் படைப்பாளிகளை எவ்வகையிலெல்லாம் பாதித்துள்ளது என்பதைச் சித்திரித்துக் காட்டினார். ஆரோவில் நிர்வாகப் பன்னாட்டு ஆலோசனைக்குழு உறுப்பினர் ஐ.நா. சபை ஆலோசகர் செனகல் நாட்டு டாக்டர் டோடோடியன் வாழ்த்துரை வழங்கி, மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கினார். பயிற்சி பெற்றோர் சார்பில் 4 மாணவர்களும், பயிற்றுநர்கள் சார்பில் முனைவர் குறிஞ்சிவேந்தனும் அமைப்பாளர்கள் சார்பில் ஆரோவில் திரு தில்லை கணபதியும் தங்களது மதிப்பீடுகளைப் பகிர்ந்து கொண்டார்கள். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் இணை ஆய்வறிஞர் ஒருங்கிணைப்பாளர் முனைவர் மு. இராமகிருஷ்ணன் கருத்துரை வழங்கினார். பயிலரங்க ஒருங்கிணைப்பாளர் கவிஞர் இரா. மீனாட்சி நன்றியுரை வழங்கினார்.

# பட்டணம் அகழாய்வுகள்



பழங்காலத் துறைமுக நகரான முசிறியின் எச்சங்களாக விஞ்சி நிற்கும் கேரள மாநிலம் எர்ணாகுளம் மாவட்டத்தில் உள்ள பட்டணத்தில் அகழாய்வு மேற்கொண்டபோது 18 மர முளைகள் கிடைத்துள்ளன. கேரள வரலாற்று ஆய்வுப் பேரவை மேற்கொள்ளும் இவ்வகழாய்வின் தலைவர் பி.ஜே. செரியன், இந்தக் கூர்மையான முளைகள் 15 செ.மீ முதல் 20 செ.மீ நீளம் கொண்டவை, இவை 4 மீட்டர் ஆழத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்று கூறினார். மேலும் இவை 25 நூற்றாண்டுகளுக்கு முந்தையவையாக இருக்கலாம் என்றார்.



கேரள வரலாற்று ஆய்வுப் பேரவையும் இந்தியத் தொல்லியல் துறையின் திருச்சூர்க் கிளையும் இணைந்து நடத்திய நான்காம் கட்ட அகழாய்வில் சிறிய தங்கக் கோடரி ஒன்று 284 செ.மீ முதல் 292 செ.மீ வரையுள்ள ஆழத்தில் கிடைத்துள்ளது. இதன் எடை 1.89 கிராம். இந்தக் கோடரியின் கைப்பிடி நுனியில் ஒரு துளை உள்ளது. இது அக்காலத்தில் அணிகலனாகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

மேலும் பிராமி எழுத்துப் பொறிக்கப்பட்ட விளிம்பினை உடைய உடைந்த பானை ஓடு ஒன்று 138 செ.மீ ஆழத்தில் கிடைத்துள்ளது. இப்பானை ஓடு சுடுவதற்கு முன் எழுதப்பட்ட பானை ஓடு ஆகும்.



சேரமன்னர்களின் காசுகள் 140 செ.மீ முதல் 250 செ.மீ வரையுள்ள ஆழத்தில் கிடைத்துள்ளன. இக்காசுகளில் வில், அம்பு, யானைக் குறியீடுகள் காணப்படுகின்றன. இங்குக் கிடைத்த 40 காசுகளில் ஒன்று மட்டும் ஈயக்காசு. மற்றவை செப்புக்காசுகள்.

இவ்வகழாய்வுக் குழுவின் இணை இயக்குநர்களாக முனைவர் எம். நம்பிராஜன் (இந்தியத் தொல்லியல் துறை), முனைவர் வி. செல்வக்குமார் (தமிழ்ப் பல்கலைக் கழகம்), முனைவர் கா. இராஜன் (புதுவைப் பல்கலைக் கழகம்), முனைவர் கே.பி. ஷாஜன் (இங்கிலாந்து) ஆகியோர் செயல்பட்டனர். ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகம், டோர்வெர்கட்டா பல்கலைக்கழகம் (உரோம்), சோர்போன்னே பல்கலைக்கழகம் (பாரீசு), இலண்டன் பல்கலைக் கழகக் கல்லூரி ஆகிய பல்கலைக் கழகங்களில் பயிலும் மாணவர்களும் இந்தியப் பல்கலைக் கழகங்களில் பயிலும் மாணவர்களும் இவ்வகழாய்வில் பங்கேற்றுப் பயிற்சி பெற்றனர்.




**நன்றி: இந்து நாளிதழ், 19.06.2010**

http://www.hindu.com/2010/06/19/stories/2010061965032400.htm
http://www.thehindu.com/news/cities/Kochi/article419228.ece

CICTArchives

# பாட வேறுபாடுகள்

பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை

குறுந்தொகைப் பாடல்களை உரையாசிரியர்கள் மிகவும் அதிகமாக எடுத்து மேற்கோள் காட்டியுள்ளனர். இந்நூலின் மேற்கோளாட்சி குறித்து டாக்டர் ஐயரவர்கள் குறிப்பிடும்போது,

> ஏனைய தொகை நூல்களைக் காட்டிலும் குறுந்தொகையே மிகுதியாக எடுத்தாளப் படுகின்றது. இதனால் இத்தொகை நூற்செய்யுட்களில் உரையாசிரியர் கருத்துக்கள் பெரிதும் ஈடுபட்டிருந்தன என்று தெரிகின்றது. இந்நூலுள் இப்பொழுது தெரிந்தவரையில் 165 செய்யுட்களே பிற நூல்களில் மேற்கோளாகக் காட்டப்பெறாதவை

என்று எடுத்துரைத்துள்ளார்கள். எனவே, குறுந்தொகை பலராலும் விரும்பிக் கற்கப்பெற்றது என்பதும் அதனால் பாட வேறுபாடுகள் பல நிகழ்தற்கு இடமாயிற்று என்பதும் தெரியவரும்.

குறுந்தொகைச் சுவடிகளில் காணும் பாடங்களுக்கு வேறுபாடான பாடங்கள் பல உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டும் மேற்கோள்பகுதிகளிலும் காணப்பெறுகின்றன. குறுந்தொகையில் பாட வேறுபாடுகள் இந்நூற் சுவடிகளிலிருந்தும் உரையாசிரியர்களின் மேற்கோள் பகுதிகளிலிருந்தும் எடுக்கப்பெற்றன. குறுந்தொகைப் பதிப்பாசிரியர்கள் இவ்வாறான வழிகளை மேற்கொண்டு பாட வேறுபாடுகளைத் தொகுத்துத் தந்துள்ளனர்.

இந்தப் பதிப்பிற்கு இதற்கு முன் வந்த பதிப்புகள் எல்லாம் ஒப்பு நோக்கப்பெற்றன. இதற்கு முன் ஏனையோர் பயன்படுத்தாத சுவடிகள் சிலவும் கிட்டின. கிட்டியன எல்லாம் காகிதச் சுவடிகளே. அவற்றுள் ஒன்று இலண்டன் பிரிட்டிஷ் அருங்காட்சியகத்திலிருந்து வரவழைக்கப்பெற்றது. அது 118 பக்கம் கொண்டது. டாக்டர் பர்னல் துரையின் தூண்டுதலால் 1884ஆம் ஆண்டு எழுதப்பெற்று, அவருடைய தமிழாசிரியர் மதுரை முத்துப் பிள்ளையால் பார்வையிடப்பெற்றது. அதனைப் பர்னல் துரை இலண்டன் அருங்காட்சியகத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். இச் சுவடி மதுரைப் பகுதியில் கிட்டிய ஓர் ஏடு. இது பார்த்து எழுதப் பெற்றதாதல் வேண்டும்.

மற்றொரு சுவடி மகாவித்துவான் இரா.இராகவையங்காரால் பெயர்த்து எழுதப்பெற்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப் பெற்றதாகும். இக் காகிதச் சுவடி 1899ஆம் ஆண்டில் மகாவித்துவான் அவர்களால் எழுதப்பெற்றது என்பது அச்சுவடிக் குறிப்பினால் தெரியவருகிறது.

திரு அடிகளாசிரியர் வழிக் கிட்டிய குறுந்தொகைக் காகிதச் சுவடி 226 பாடல்கள் வரையுள்ள குறைச்சுவடியாகும். இஃது ஏட்டுச்சுவடியின் வடிவில் அமைக்கப்பெற்று, இரு பத்தியாகப் பாடல்கள் ஒவ்வொன்றும் முழுமையாய் அடிவரையறையுடன் அமையுமாறு எழுதப்பெற்றதாகும்.

இச் சுவடிகளேயன்றி இராமசாமிபுரம் மூவரையர் வண்ணம் பாடிய பூண்டியப்பப் புலவர் ஏடு பார்த்துப் பேராசிரியர் இரா. கந்தசாமியாரால் திருத்தப்பெற்ற முதற்பதிப்புப் படியைப் பார்த்துப் பாடவேறுபாடுகள் முற்றுமாய்க் குறிக்கப்பெற்றன. தம்மிடம் உள்ள இந்த அரிய புத்தகத்தை மதுரை இரா. இளங்குமரன் அவர்கள் தந்து உதவினார்கள்.

இலண்டன் காகிதப் படியுடன் டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்களின் குறுந்தொகை முதற்பதிப்பை வைத்து ஒப்பு நோக்கியபோது 24, 25, 26, 32, 355 ஆகிய ஐந்து பாடல்களுக்குரிய ஆசிரியர் பெயர்கள் தெரியவந்தன. பின்னர் ஐயர் அவர்களின் பதிப்பை ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்ததில் இந்தப் பாடல்களுக்குரிய ஆசிரியர் பெயர் அச்சிடுங்காலத்து எப்படியோ தவறவிடப்பட்டது என்பது தெரியவந்தது. முதற்பதிப்பில் உள்ள பாடினோர் பெயர் அகராதியில் இப் பாடல்களைப் பாடிய பரணர், கபிலர், வெள்ளிவீதியார், அள்ளூர் நன்முல்லை, கபிலர் என்னும் புலவர் பெயர்களை அடுத்து இப் பாடல் எண்களைத் தந்துள்ளார். ஐயரவர்களின் பிற்பதிப்பில் இப் பாடல்களுக்கும் ஆசிரியர் பெயர் இட்டு நிரப்பப்பெற்றமையும் தெரியவந்தது.

சுவடிகளுக்குள் புலவர் பெயர்களில் சிற்சில விகுதி வேறுபாடுகளால் பெயர் வேறுபடுதல் போலத் தோன்றும் இடங்கள் சில உள. ஆசிரியர் வரிசையில் பதிப்பிக்கப்பட்டுள்ள சங்க இலக்கியத் தொகுதியில் ஆசிரியர் பெயர்கள் ஒருவாறு வரையறை செய்யப்பட்டுள்ளன. ஆகவே சங்க இலக்கியத்தில் காண்கிறபடி ஆசிரியர் பெயர்கள் அமைத்துக் கொள்ளப்பெற்றன.

புதிதாகக் கிட்டிய நான்கு சுவடிகளையும் முந்தைய பதிப்புக்களையும் ஒப்புநோக்கிப் பாடவேறுபாடுகள் தொகுக்கப்பட்டுள்ளன. ஒப்புநோக்கி உண்மைப் பாடம் காண்பதற்குப் பயன்படும் வகையில் அவையெல்லாம் அட்டவணைப்படுத்தித் தரப்பெற்றுள்ளன...

### புதிய பாடங்கள்

இந்தப் புதிய பதிப்பில் பாடவேறுபாடுகளை யெல்லாம் ஆய்ந்து நோக்கிப் புதிய பாடங்களும் சிற்சில பாடல்களில் கொள்ளப்பெற்றன. அவை பாடலின்

CICTArchives



இசைப்போக்கு, பொருளின் பொருத்தம், இலக்கண அமைதி, உரையாசிரியர் மேற்கோளாட்சி, இலக்கிய ஆட்சி போன்ற ஏதுக்களை அடியாகக் கொண்டு திருத்தமான பாடங்களாகத் தேர்வுசெய்யப்பெற்றன. புதிய பாடங்களைத் தேர்ந்தமைக்கான ஏதுக்களை விளக்குமுகத்தான் சிற்சில எடுத்துக்காட்டுகளை ஈண்டு நோக்குவோம்.

கடவுள் வாழ்த்துப் பாடலில், 'அஞ்சுடர் நெடுவேல்' என்பது முந்தைய பாடம். இப்பொழுது தேர்ந்தெடுத்த பாடம் 'செஞ்சுடர் நெடுவேல்' என்பது. சேவடி, மேனி, உடுக்கை என்பன செந்நிறமாக வருணிக்கப்படுதலின் வேலும், 'செஞ்சுடர் நெடுவேல்' என்று கொள்வது பொருத்தம். 'குன்றின் நெஞ்சு பக எறிந்த வேல்' என்பதனானும், முதற்பாட்டில், 'செங்கோல் அம்பு' என முருகனது அம்பு குறிக்கப்படுதலினானும் இப் பாடமே ஏற்புடைத்து எனத் துணியப்பெற்றது.

பிற சங்க நூல்களுள் ஒன்றாகிய திருமுருகாற்றுப் படையில், 'செவ்வேற் சேஎய்' (61) என முருகன் சிறப்பிக்கப்பட்டுள்ளார். 'சூர் கொன்ற செவ்வேலாற் பாடி' என்பது கலித்தொகை (93:26). மன்னரின் வேலையும் 'செவ்வேல்' என்று குறிப்பிடும் மரபு சங்க நூல்களிற் காணப்படுகிறது: 'செவ்வேல் வயவன்' (நற். 260:6), 'செவ்வேல் முள்ளூர் மன்னன்' (அகம். 209:11-12). இவற்றையும் ஒப்புநோக்கின், மேற்கூறியதன் உண்மை புலனாம்.

'பறைபட' எனத் தொடங்கும் 15ஆம் பாடலின் 5ஆம் அடியில் உள்ள இருசீர்களும், 'செயலை வெள்வேல்', 'சேயிலை வெள்வேல்' என இரு வகையாகப் படித்தற்கியலும் வகையில் சுவடி நிலை உள்ளது. இது படிக்குங்கால் நேரும் குறில் நெடில் கொம்பு வேறுபாட்டால் நேர்வது. சேயிலை வெள்வேல் எனப் பாடங்கொண்டு இரண்டு அடைகளும் நிறம் பற்றியன என உரை கண்டனர் முற்பதிப்பாசிரியருட் சிலர். மேற்குறித்தபடி இருவகையாகப் படிக்கலாமாயினும், 'செயலை வெள்வேல்' என்பது அடுத்த அடி முதலில் வரும் 'தொகுவளை' என்பதற்கு ஏற்புடைய மோனைநயம் வாய்ந்த பாடமாம். செயலை என்பது அசோகு. இங்கே அசோகின் இலை போன்ற வடிவுடையது என்றாம். இப் பாடத்தால் முன் அடை வடிவத்தையும் பின் அடை வண்ணத்தையும் குறிப்பதாக அமைதல் காணலாம். 'புதுவது புனைந்த செயலை வெள்வேல்' என்னும் அகநானூற்றுத் தொடரும் (221:5) ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது.

24ஆம் பாடலில், 'எழுகுளிறு மிதித்த,' 'எழு குளிர் மிதித்த' எனப் பாடங் கொள்வாரும் உளர். குளிறு, குளிர் என்பன நண்டைக் குறிக்கும் சொற்களாம். நண்டுகள் பொருள்களைக் கால்களால் பற்றி உருட்டுமேயல்லது மிதித்தல் இல்லை. ஆகவே, 'நண்டு மிதித்த' என்பது மரபன்று. யானை முதலிய விலங்குகள் பொருள்களைக் காலால் நசுக்குவதை மிதித்தல் என்று கூறுவதே பெருவழக்கு. எழு களிறு என்பதற்கு ஏழு களிறு என்று பொருள் கொள்ளுதலும் பொருந்தாது. ஒரு களிறு மிதித்தாலே அத்திப் பழம் குழைந்துவிடும். ஆகவே இங்கு எழுகளிறு என்பதற்கு எழுந்து வருகின்ற ஆண்யானை என்று கொள்வதே பொருத்தமாகும். முதற் பதிப்பாசிரியர், 'எழுகின்ற களிறு' என்றும், கலா நிலைய உரைகாரரும் இப் பாடமே கொண்டு, 'ஆற்று நீராடி எழுந்த ஆண் யானை' என்றும் பொருள் தருகின்றனர். எனவே, 'எழுகளிறு மிதித்த' என்பதே இங்குச் சிறப்பான பாடமாகும்.

52ஆம் பாடலில், 'ஆர் களிறு மிதித்த நீர்திகழ் சிலம்பில்' என்பதற்கு 'யானை மிதித்தலால் ஏற்பட்ட பள்ளத்தில் தங்கிய நீர் விளங்கும் மலையிலே' என்று விளக்கம் தருகின்றனர். மலைமேல் யானை மிதித்ததனால் பெரும் பள்ளமாதல் என்பது இயற்கையன்று. 'ஆர்கலி மிதித்த' என்னும் பாடமே ஏற்புடைய பாடம் எனக் கருதத்தக்கது. 'ஆர்கலி' என்பது வெள்ளம் என்னும் பொருள்தருவதாகும். 'ஆர்கலி முனைஇய' என்னும் நெடுநல்வாடைத் தொடருக்கு (3) வெள்ளத்தை வெறுத்த என நச்சினார்க்கினியர் பொருள் தருகின்றார். எனவே, 'ஆர்கலி மிதித்த' என்றால், 'வெள்ளம் பாய்ந்தோடியதனால்' என்பது பொருளாகும்.

93ஆம் பாடலின் ஈற்றயலடியை, 'அன்னையும் அத்தனும் அல்லரோ' என முச்சீராகக் கொண்டனர் சிலர். ஆயின், ஏடுகளில், 'அன்னையும் அத்தனும் அல்லரோ தோழி' என நாற்சீர் கொண்ட பாடம் காணப்படுகிறது. சங்கப் பாடல்களில் நேரிசை யாசிரியப்பா மிகுந்து காணப்படுவதனால் முச்சீராகக் கொண்டனரோ என்று எண்ண இடமாகிறது. இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் 'அன்னையும் அத்தனும் அல்லரோ தோழி' என நாற்சீரடியாகவே கொண்டு மேற்கோள் காட்டியுள்ளனர். எனவே, இப் பதிப்பிலும் நாற்சீரடியாகவே கொள்ளப்பெற்றது.

244ஆம் பாடலின் மூன்றாம் அடி, 'கேளேம் அல்லேம் கேட்டனம் பெரும' என்று பதிப்புகளில் காணப்படுகிறது. இங்கே கேட்டனம் என்பதில் அம் என்பது தன்மைப் பன்மையைச் சுட்டுமாயினும், 'கேளேம் பெரும' என வருதற்கு ஒப்ப, 'கேட்டனெம்' என எம் விகுதி கொண்ட பாடம் ஏற்றுக்கொள்ளப்பெற்றது.

'பொத்து இல் காழ' எனத் தொடங்கும் 255ஆம் பாடலின் 6ஆம் அடித் தொடக்கத்தில், 'தம் கடன்' என்றும், 8ஆம் அடித் தொடக்கத்தில் 'நாம்வெம்' என்றும் பாடம் கொண்டுள்ளனர். இப்பாடலின் அமைப்பைக் கூர்ந்து நோக்குமிடத்து முழுமையும் இரண்டிரண்டடிகள் ஒத்த எதுகையவாய் வரும் தன்மை புலப்படுகிறது. எனவே, தம் கடன் என்பதற்கு மாற்றாகக் 'கடன் கடன்' என இரட்டித்து வரும் பாடம் கொள்ளப்பெற்றது; 'கடன் கடன்' என்றால் கடமை எல்லாவற்றையும் சுட்டும்.

CICTArchives



இப்பாடம் மேலடியில் வரும் 'தடமருப்பு' என்பதனோடு ஒத்த எதுகையுடைய பாடமும் ஆகும். அந்த அடியில்தானே 'இடந்தொறும்' எனவரும் 4ஆம் சீர்க்கு ஏற்புடைய எதுகை நயத்ததாகவும் அமைகிறது. ஈற்றடியில் 'நாமஎம்' என்னும் பாடம் தலைவன் சென்ற ஆற்றின் அருமையை வெளிப்படுத்தும் பொருட் சிறப்புடையதாயும், முன்னடியில் வரும் 'காமர்' என்பதற்கு ஏற்ற தொடையமைதி யுடையதாயும் அமைகிறது. இப் பாடங்களால் ஈரடி ஓர் எதுகை கொண்டு அமையும் இப் பாடலின் வடிவம் நிரம்புகிறது. தொடையமைதிக்கும் பொருள் தெளிவிற்கும் ஏற்புடையவை இவையேயாதலின் இப் பாடங்கள் எடுத்துக்கொள்ளப்பெற்றன.

287ஆம் பாட்டு முழுமையும் மேகத்தின் எழுச்சிபற்றிய சித்திரமாகும். அசைஇ, கொண்டு, புணரி, நோக்கி ஏர்தரும் பொழுது என்பது வினைமுடிபு ஆகும். இங்ஙனம், இருக்கவும் 'முந்நால் திங்கள்' எனப் பாடம் கொண்டு அசைஇ என்பதைச் சூல் மகளிர்க்கு ஏற்றி உரைப்பது சற்றும் பொருந்தாது. 'முந்நாள் திங்கள்' என்பது நீர்கொள்ளுமுன் காணும் வெண்ணிற மேகத்திற்கு ஒப்புக்கூறப் பெற்றதாம். ஏடுகளில் காணும் பாடமும் 'முந்நாள் திங்கள்' என்பதே. எனவே, இப் பாடமே இங்குப் பொருத்தமாகப் பாடற் பொருளுக்கு ஏற்புடையதாய் இருத்தலின் கொள்ளப்பெற்றது.

ஞெகிழ்தல் - நெகிழ்தல் என்றாற் போல ஞகர - நகர முதலெழுத்துச் சொற்கள் மாறிவருதலும், அமிழ்தம், அமிர்தம், அமுதம் என்னும் ஒருபொருட் சொற்களின் வடிவ மாற்றங்களும், முன்பனிக் காலத்தைக் குறிக்கும் அற்சிரம் - அச்சிரம் என்னும் வடிவங்களும், வெயிலின் வெம்மை மிக்க பொழுதினைக் குறித்து வரும் வேனில் - வேனல் என்பனவும் சுவடி மாறுபாடுகளாகப் பலவிடத்தும் வருகின்றன. இவற்றுள் பாடற்பகுதியின் ஓசையும் பொருளும் கருதி ஏற்புடைய வடிவங்கள் இடமறிந்து ஏற்றுக்கொள்ளப்பெற்றன.

இவ்வாறாகப் பற்பல பாடங்கள் பாடல்களின் அமைப்பு நோக்கியும், அவற்றின் பொருட் போக்கினை உட்கொண்டும், இலக்கிய இலக்கண மரபு கருதியும் ஏனைய பதிப்புகளில் இல்லாது இப் பதிப்பில் புதியனவாய்த் தேர்ந்துகொள்ளப்பெற்றன. இவற்றைத் தேர்ந்தெடுத்ததற்கான ஏதுக்களும் அங்கங்கே உரிய இடங்களில் சுட்டி விளக்கப்பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக மேலே சுட்டிய எட்டும் உளப்பட 131 புதிய பாடங்கள் இப்பதிப்பில் தேர்ந்துகொள்ளப்பெற்றன.

## அடி நிரம்புகை

குறுந்தொகை 266ஆம் பாடலிலும் 394ஆம் பாடலிலும் டாக்டர் உ.வே.சாமிநாதையர் பதிப்பில் விடுபட்டிருந்த அடிகள் இப் பதிப்பில் நிரப்பப்பெற்றன. முதற்பதிப்பாசிரியர் சௌரிப் பெருமாள் அரங்கன் 266ஆம் பாடலில் குறையுளது என்பது கண்டு, "இப் பாட்டு ஆறடியினதாதல் உணர ஒரு பிரதியில் 4, 5 அடிகளுக்கு இடம் விடப்பட்டிருக்கிறது'' என்று குறிப்பு எழுதியிருக்கிறார். அதற்குப் பின்வந்த பதிப்பாசிரியர்கள் இப்பாடலில் அவர் சுட்டிய குறைபற்றிய செய்தியைக் குறிப்பிடாது ஒருவகையாக உரை வரைந்தும் சென்றனர். பேராசிரியர் ச. வையாபுரிப் பிள்ளையவர்கள் குறுந்தொகையை ஆராய்ந்து வந்தபொழுது அப்பாடலில் ஓர் அடியே விடுபட்டிருந்தது என்னும் உண்மையைக் கண்டுகொண்டார்கள். அது, 'மறப்பரும் பணைத்தோள் மரீஇ' என வரும் 4ஆம் அடியாகும். இச் செய்தியை 1938ஆம் ஆண்டில் வெளிவந்த 'கரந்தைக் கட்டுரை' என்னும் தொகுதியில் குறுந்தொகைபற்றித் தாம் எழுதிய ஆய்வுரையில் குறிப்பிட்டிருந்தார்கள். இதன்பின் 1940இல் அவர்கள் பதிப்பித்த சங்க இலக்கியப் பதிப்பில் இந்த அடியுடன் 266ஆம் பாடலை 5 அடிப் பாடலாகத் தந்தார்கள். இப்பொழுது எமக்குக் கிடைத்த இரு பழம் சுவடிகளில் இவ்வடியுடனேயே பாடல் அமைந்திருக்கக் கண்டோம். அவர்கள் கொண்டவாறே 5 அடிப் பாடலாக இப்பதிப்பிலும் அமைத்துள்ளோம்.

394ஆம் பாடலின் 4ஆம் அடியாகக் 'கூரை முற்றும் சார னாடன்' என்பது சில சுவடிகளில் காணப்படவே முதற் பதிப்பாசிரியர் குறிப்பிட்டுள்ளார். டாக்டர் உ.வே. சாமிநாதையர் இந்த அடியை அடிக்குறிப்பில் சுட்டிக்காட்டியுள்ளார். பின்வரும் 'முன்நாள்' எனத் தொடங்கும் அடியை நோக்க இதனைக் 'கூரை முற்றும் சாரல் நாடன்' என்று படித்தல் வேண்டும் என்பது புலனாகும். அவ்வாறு கொள்ளும் போது அதில் குறிப்பிடப்பெறும் யானைக் கன்றின் செய்கை தொடர்புற அமைகிறது. ஏடுகள் பெரும்பாலானவற்றில் இவ்வடி உள்ளது. எனவே, இப்பதிப்பில் 4ஆம் அடியாக இஃது இணைத்துக்கொள்ளப்பெற்றது.

## பதிப்புகளிடையே பாடவேறுபாடு

டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்களுடைய குறுந்தொகைப் பதிப்பு அதற்கு முன்வந்த நான்கு பதிப்புகளை விடவும் திருத்தமுற அமைந்த பதிப்பு ஆகும். முந்திய பதிப்பாசிரியர்களும் சுவடிகள் நோக்கிப் பாடங்களைத் தேர்ந்துகொள்வதில் ஒருவர்க்கொருவர் மேம்பட்டுக் காணப்படுகின்றனர். ஐயரவர்கள் பாடபேதங்களைப் பெருமளவில் தந்துள்ளதோடு பாடத் தேர்விலும் முந்தையரினும் சிறப்புற அமைத்துள்ளார். விளக்கமான அகலவுரை வரைந்திருப்பது இவர் பதிப்பின் தனிச் சிறப்பு. இவர்கள் காட்டிய பாடவேறுபாடுகள் தவிர எமக்குக் கிடைத்த சுவடிகளில் மேலும் பல வேறுபாடுகள் காணப்பெற்றன. இங்ஙனமே சங்க இலக்கியப் பதிப்பிலும் சுவடிகளின் துணைக்கொண்டு வேறுபாடுகள் பலவற்றைக் கண்டனர். ஐயரவர்கள் பதிப்பிற்குப்பின் சுவடிகளின் அடிப்படையில் பாடவேறுபாடுகளைக் கூர்ந்து நோக்கி ஏற்புடைய பாடங்களைத் தேர்ந்தெடுத்து அமைத்துள்ள பதிப்பு சங்க இலக்கியப் பதிப்பு. இப்

CICTArchives



பதிப்புடன் ஐயரவர்கள் பதிப்பினை ஒப்பு நோக்கியபோது 234 இடங்களில் புதிய பாடங்களைப் பதிப்பாசிரியர் கொண்டிருப்பது தெரிய வந்தது. தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வழி வெளிவரும் இப் பதிப்பு டாக்டர் ஐயரவர்கள் பதிப்பிலிருந்து 260 இடங்களில் வேறுபட்டுப் புதிய பாடங்களைத் தருகின்றது. சங்க இலக்கியப் பதிப்பிற்கும் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்பிற்கும் 225 இடங்கள் வேறுபடுகின்றன. டாக்டர் ஐயர் அவர்கள் பதிப்பிலும் சங்க இலக்கியப் பதிப்பிலும் இடம் பெறாத 131 புதிய பாடங்கள் இப் பதிப்பில் இடம் பெற்றுள்ளன. இப் பாடங்களைத் தேர்ந்தமைக்கான ஏதுக்களை உரிய இடங்களில் விளக்கியிருத்தல் காணலாம்.

குறுந்தொகை இலக்கியத் தொடர்பான சில புள்ளி விவரங்கள் இறுதி இணைப்பாக வைக்கப்பட்டுள்ளன. புதிய ஏட்டுச் சுவடிகளும் முந்திய பதிப்பாசிரியர்களின் பதிப்புகளும் இவ்வகையில் புதிய பாடங்களை ஆய்ந்துகொள்வதற்குத் துணையாக அமைந்தன. இவற்றை உதவியவர்களுக்கு நன்றி பாராட்டும் கடப்பாடுடையேம்.

### புத்துரை அமைப்பு

“பழைய உரைகளினுடைய திட்பத்தைப் பாதுகாத்து இக் காலத்தார் எளிதில் அறியக்கூடிய நடையில் இந் நாளைய புத்துரை அமைதல் வேண்டும்” என்னும் ஒரு கருத்து சங்க இலக்கிய முதற்பதிப்பு முகவுரையில் காணப்படுகிறது. பாடலின் பொருள் செவ்விதின் புலப்படும் வகையில் விளக்கத்திற்கு இன்றியமையாத குறிப்புகள் இருந்தால் போதும் என்றும் சிலர் கருதிப் பண்டை இலக்கிய அரும்பதவுரைகளைச் சான்றாகக் காட்டுவர்.

குறுந்தொகைப் பாடல்களுக்குப் பழைய உரைகாரர்களின் போக்கினை அடியொற்றிப் பொழிப்புரையாக எழுதப்பெற்றிருக்கிறது. இப் புத்துரை பாடலின் பொருள்கோள் நிலை தழுவி அமைக்கப்பட்டுள்ளது. பாடலின் பொழிப்புத் திரட்டினை அடுத்து அதனால் வெளிப்படும் உயிர் நிலையான கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்பின் அருஞ்சொற்பொருள், இலக்கணக் குறிப்புகள் தரப்பட்டுள்ளன. பல இடங்களில் பாட வேறுபாட்டுக் குறிப்பு, தேர்ந்த பாடம் பற்றிய அமைவுரை முதலியனவும் காணலாகும். உள்ளுறை உவமம், இறைச்சிப் பொருள் அமைந்த பாடல்களில் அவ்வப் பொருள்கள் விளக்கமுறத் தரப்பட்டுள்ளன. தொல்காப்பிய உரைகாரர் முதலிய பண்டை உரைகாரர் இந் நூற் செய்யுட்களை மேற்கோளாக எடுத்துக்காட்டிய அகப்பொருள் துறை பற்றிய செய்திகளும் உரை இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளன.

### பின்-இணைப்புகள்

இவ்வுரை நூலின் பின்-இணைப்புகளாகப் பின்வருவன தரப்பட்டுள்ளன. குறுந்தொகைப் பாடவேறுபாடுகள் அனைத்தையும் ஒப்புநோக்கிக் காணும் வகையில் தரப்பட்டுள்ள குறுந்தொகைப் பாடவேறுபாடு - ஒப்புநோக்கு அட்டவணை ஒரு தனிச் சிறப்புப் பகுதியாகும். மேலும், செய்யுள் முதற்குறிப்பு அகராதி, பாடினோரும் பாடற்குறிப்பும், பாடலில் சுட்டப்பெற்றோர் விவரம், திணை பற்றிய குறிப்பு, கூற்றுவகை விளக்கம், சொல்லடைவு, தொடரடைவு என்பனவும் தரப்பட்டுள்ளன. இவற்றுள் சொல்லடைவில் நால்வகைச் சொற்களும் அவற்றின் ஆட்சியைப் புலப்படுத்தும் எண் குறிப்புடன் தரப்பெற்றுள்ளன.

### தொடரடைவின் அமைப்பும் பயனும்

தொடரடைவில் பாடல்களில் காணும் தொடர் அடைவு நிலைகள் பொருள் விளங்கும் வகையில் எடுத்துத் தரப்பட்டுள்ளன. தொடரடைவு இப் பதிப்பில் ஒரு புதுமையான இணைப்பாகும். சங்க இலக்கிய நடையை நன்கு அறிய அவற்றில் பயின்று வந்துள்ள தொடர்களின் அமைப்புகள் ஆராயப்பட வேண்டும். அகப்பொருள், புறப்பொருள் தொடர்பான துறைகளில் அமைந்துள்ள பாடல்களில் அவ்வத் துறைகளுக்கு இயைபான பல செய்திகளை விளக்கும் தொடர்கள் இடம்பெறுதல் இயல்பே. பொருள்களின் பண்பு, செயல்களை விளக்கும் அடைமொழித் தொடர்கள் பலவாகப் பாடல்களில் இடம்பெறுகின்றன. உலகியலை விளக்கும் உரைகள், அறவுரைகள், வாழ்க்கைச் சூழல்களை விளக்கும் பகுதிகள் என்று இன்னோரன்ன தொடர்கள் புதைந்துள்ளன. ஒரே வகையான கருத்து, வருணனைகள்கூடப் புலவர்களிடையே காணப்படுதலையும் இத்தொடர் ஆய்வு விளக்கவல்லது.

பெயர், வினை, இடை, உரி என்னும் நால்வகைச் சொற்களின் பயன்பாடுகளையும் தொடர் அடைவு வழி அறியலாகும். இத்தகைய இலக்கிய இலக்கண முறைமை விளங்கும் வகையில் ஒவ்வொரு பாடலிலும் உள்ள தொடர்கள் தனித்தனியே எடுத்துத் தரப்பட்டுள்ளன. கூடிய வரையிலும் அவை ஒரு கருத்தினை வெளிப்படுத்தும் அளவிலும் பிரித்து எடுக்கப்பெற்றன. சிற்சில தொடர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட அடிகளிலும் சென்று முடியும் நிலையினவாயும் உள்ளன. பெரும்பாலும் எல்லாத் தொடர்களும் கருத்து முடியும் வகையில் அமைக்கப்பெற்றுள்ளன.

சங்க இலக்கியச் சொற்பொருளாய்வுக்குத் தொடரமைவுக் கோவை பெரிதும் பயன்படும். ஒரு சொல்லுக்கு உரிய பல்வேறு பொருள்களையும் அவற்றின் ஆட்சி நிலைகளையும், காலமுறை வளர்ச்சிகளையும் கணக்கிட்டறியவும் தக்க மேற்கோள்களை எடுத்தாளவும் எளிதின் இயலும்.

குறுந்தொகைத் தொடரடைவுடன்-நற்றிணை முதலிய பிற சங்க இலக்கியத் தொடர்களையும் இவ்வாறு செய்து, இறுதியில் பாட்டுத் தொகைப் பாடல்களுக்கு முழுமையான தொடர் அடைவு உருவாக்க வேண்டும். அப்பொழுது சங்க இலக்கியத் தொடர்களின் சிறுதொடரமைப்பு, சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல், பொருள் பொதிந்த செறிவு, இனிய சொற்புணர்ப்பு போன்ற தனித்தன்மைகள் எல்லாம் நன்கு புலனாகும்.

### ஆய்வுப்பாட நுண்பதிப்பு

பழஞ்சுவடிகளைத் தேடித் தொகுத்துப் பாதுகாப்பதுடன் இதுவரை வெளிவராத நூல்களைப் பதிப்பித்தலையும் முதன்மை நோக்கமாகத் தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறை கொண்டுள்ளது. அதனோடு முன்பு பதிப்பிடப்பெற்றுள்ள சங்க நூல்கள், தொல்காப்பிய உரைகள் முதலியவற்றைக் கிட்டும் சுவடிகளுடனும் முற்பதிப்புக்களுடனும் ஒப்புநோக்கிச் சரியான பாடங்களை வரையறுத்து, இக்காலத்திற்கு ஏற்ற விளக்கங்களுடனும் நூற்பொருள்களை எளிதில் அறிவதற்கும் ஆராய்ச்சிகளுக்கு இன்றியமையாது வேண்டப்படும் குறிப்புகளைப் பெறுவதற்கும் ஏற்புடைய பல்வேறு வகையான அகராதிகளுடனும் பதிப்பிக்கத் திட்டமிட்டு இத் துறையில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஏற்கெனவே வெளிவந்த நூல்களை மீண்டும் பரிசோதித்துப் பதிப்பிக்க வேண்டுமா? குறுந்தொகையில் பல பதிப்புகள் வந்துள்ளனவே? மீண்டும் ஒரு குறுந்தொகைப் பதிப்பா? என்னும் எண்ணங்களும் வினாக்களும் பொதுவாக எழுவது இயல்பே. இப்பொழுது வெளியிடப்பெறும் பதிப்புப் போன்ற பதிப்புகள் வெளிவரவேண்டும் என்பது குறித்து மேற்படிப் பழம்பெரு நூல்களைப் பதிப்பித்துத் தமிழுலகுக்கு வழங்கிய பேராசிரியர் ச. வையாபுரிப் பிள்ளையவர்களே முப்பது ஆண்டுகளுக்கு முன் சுட்டிக்காட்டியுள்ளார்கள். 'திராவிட மொழிகளில் ஆராய்ச்சி' என்னும் அவர்களுடைய நூலுள் தெரிவித்துள்ள பின்வரும் செய்திகள் நாம் ஊன்றிக் கவனித்தற்குரியன. பேராசிரியர் அவர்களின் கருத்துரை வருமாறு:

''ஒரு துறையில் நாம் சிறந்து விளங்குகிறோம்; அது நூற் பதிப்புத்துறை. சிறந்த கல்வியாளர்கள் பலர் இத் துறையில் உழைத்திருக்கிறார்கள். வித்துவான் தாண்டவராய முதலியார், வேதகிரி முதலியார், சரவணப் பெருமாளையர், விசாகப் பெருமாளையர், ஆறுமுக நாவலர், ராவ்பகதூர் தாமோதரம் பிள்ளை, சுப்பராயச் செட்டியார், டாக்டர் உ.வே.சாமிநாதையர் முதலியவர்களை இங்கே குறிப்பிடலாம். இவர்கள் தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் முதலிய முக்கியமான நூல்களை அருமையாகப் பதிப்பித்து வெளியிட்டிருக்கிறார்கள். தமிழ் மக்கள் இவர்களை மிகவும் போற்றிவரக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இத்துறையிலுங் கூட இன்னும் செய்ய வேண்டுவன பல இருக்கின்றன. மேற்குறித்த நூல்களுக்கும் கம்பராமாயணம் முதலிய காவியங்களுக்கும் வரையறை செய்த பாடங்களுடன், தற்காலத்துக்குரிய ஆராய்ச்சியுபகரணங்களுடன் சிறந்த பதிப்புக்கள் இனிமேல்தான் வெளிவருதல் வேண்டும். அன்றியும் எண்ணற்ற நூல்கள் ஓலைச்சுவடிகளில் புதைந்து கிடக்கின்றன. இவ் ஓலைகள் எளிதில் அழியக் கூடியன. இங்ஙனம் அழிவுறுவதற்கு முன்பு இந் நூல்களையெல்லாம் பதிப்பித்து வெளியிடுதல் வேண்டும். திராவிட மொழிகள் பிறவற்றிலும் இங்ஙனமே பல நூல்கள் உள்ளன என்று தெரிகின்றேன். இப் பதிப்புத்துறையில் வல்ல கல்வியாளர்கள் பலர் ஒருங்கு சேர்ந்து நூற்பதிப்புக்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.'' (திராவிட மொழிகளில் ஆராய்ச்சி, பக். 19-20)

பேராசிரியர் அவர்கள் இங்குச் சுட்டிக்காட்டிய முறையில் குறுந்தொகை, நற்றிணை முதலிய சங்க நூல்களையும் தொல்காப்பியத்திற்குரிய முதல் உரையாகிய இளம்பூரணர் உரை முதலிய பண்டையுரைகளையும் பதிப்பிக்கும் பணியில் இத்துறை ஈடுபட்டு வளர்ந்து வருகிறது. இவ் வரிசையில் முதல் நூலாகக் குறுந்தொகை ஆய்வுப் பாட நுண் பதிப்பு இப்பொழுது வெளிவருகிறது


- **குறுந்தொகை** முகவுரை, 1985,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், பக். 21-31.



மத்திய மனித வள மேம்பாட்டுத் துறையின் மொழிகள் பிரிவு இயக்குநர் திரு ஆர்.பி. சிசோடியா அவர்கள் 11.02.2010 அன்று சென்னைப் பெரும்பாக்கத்தில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனக் கட்டடம் அமையவுள்ள இடத்தைப் பார்வையிட்டார்.

CICTArchives


# திறுவன வெளியீடுகள்




**A Dravidian Comparative Grammar-I**

P.S. Subrahamanyam


Price : Rs.350/-




**Dyanamics of Tamil Finite System**

R. Kothandaraman


Price : Rs.650/-




**Ancient Tamil Poetry and Poetics: New Perspectives**

P. Marudhanayagam


Price : Rs.450/-




**A Compendium of Tirukkural Translations in English-Vol. I (Arattuppaal)**

A.A. Manavalan

Price : Rs.800/-




**Muttollayiram**
**(Text, Transliteration and Translations in English Verse and Prose)**

P. Pandian

Price : Rs.325/-

CICTArchives

# கருத்தரங்குகள்

கருத்தரங்கு 1

## தமிழும் பிற இந்திய - உலக மொழிக் குடும்பங்களும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கரூர் வள்ளுவர் அறிவியல் மேலாண்மைக் கல்லூரியும் இணைந்து 'தமிழும் பிற இந்திய - உலக மொழிக் குடும்பங்களும்' என்னும் பொருளில் 16.01.2010 முதல் 19.01.2010 முடிய நான்கு நாட்கள் தேசியக் கருத்தரங்கத்தினை நடத்தின. இந்த நிகழ்ச்சிக்குச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் கு. சிவமணி, வள்ளுவர் அறிவியல் - மேலாண்மைக் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் வ. இராமதிலகம் ஆகிய இருவரும் ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்பட்டார்கள்.

இதன் தொடக்க விழா 16.01.2010 அன்று காலை 10 மணிக்குக் கரூரிலுள்ள வள்ளுவர் அரங்கத்தில் நடைபெற்றது. வள்ளுவர் நிறுவனங்களின் நிறுவனரும் தலைவருமான எல். கருப்பையா விழாவிற்குத் தலைமை ஏற்றார். வள்ளுவர் அறிவியல் - மேலாண்மைக் கல்லூரியின் தாளாளர் கே. செங்குட்டுவன் வரவேற்புரை வழங்கினார். தமிழறம் இதழின் ஆசிரியர் இளமாற அடிகள் தொடக்க உரையாற்றினார். பேராசிரியர் கு.சிவமணி அறிமுக உரையில், கருத்தரங்கின் நோக்கத்தை விளக்கிக் கூறினார். திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொன்னவைக்கோ தலைமையேற்றார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் முனைவர் ந. அரணமுறுவல், கரூர்த் தமிழ்ச் சங்கச் செயலர் முனைவர் கடவூர் மணிமாறன், திருக்குறள் சங்கத் தலைவர் மேலை பழனியப்பன், டாக்டர் ராஜசேகர், தங்கமணி ஆகியோர் வாழ்த்துரைவழங்கினார்கள். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி சிறப்புரை நிகழ்த்தினார். முனைவர் வ. இராமதிலகம் நன்றி நவின்றார்.

கருத்தரங்கில் கீழ்க்காணும் அறிஞர்கள் தங்கள் கருத்துரைகளை வழங்கினார்கள்.

முனைவர் **ந. அரணமுறுவல்**
திரு **ம.சோ. விக்டர்**
பேராசிரியர் **என். அதியமான்**
பேராசிரியர் **ப. மருதநாயகம்**
செல்வி **இ. தமிழ்ச்செல்வி**
செல்வி **கே. தனபாக்கியம்**
திரு **எம்.இ. செந்தில்குமார்**
பேராசிரியர் **தாமோதரன்**
திரு **இளமதி பாலசுப்ரமணி**
முனைவர் **மு. இளமுருகன்**
முனைவர் **பா. வளனரசு**
முனைவர் **அ. பூலோகரம்பை**
முதுமுனைவர் **இரா. இளங்குமரனார்**
முனைவர் **அ. பரிமளகாந்தம்**
திரு **ஆர். வேணுகோபால்**
பேராசிரியர் **ஜெயவாணிஸ்ரீ**
திரு **முத்தையா**
திரு **முத்துசாமி**
பேராசிரியர் **ஆர். சம்பத்**
முனைவர் **நடுவட்டம் கோபாலகிருஷ்ணன்**
முனைவர் **அ. சீனிவாசன்**
முனைவர் **கு. பூங்காவனம்**
முனைவர் **டி. முருகசாமி**
திரு **சாத்தூர் சேகரன்**
பேராசிரியர் **இரா. மதிவாணன்**
திரு **மா. பூங்குன்றன்**
முனைவர் **சு. அரங்கசாமி**
புலவர் **இறைக்குருவனார்**
பேராசிரியர் **முத்துராமலிங்கனார்**
திரு **அருளியார்**
புலவர் **அருணா பொன்னுசாமி**
முனைவர் **செ. இராசு**
முனைவர் **க. குழந்தைவேலன்**
பேராசிரியர் **கே.அ. திருஞானசம்பந்தம்**
முனைவர் **இரா.கு. ஆல்துரை**
முனைவர் **ம. பவானி**

19.01.2010 அன்று மாலை 3 மணிக்குக் கருத்தரங்க நிறைவு விழா நடந்தது. கரூர் வள்ளுவர் அறிவியல் - மேலாண்மைக் கல்லூரி முதல்வர் பேராசிரியர் வி.சிவசங்கரன் விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றார். திரு க. செங்குட்டுவன் தலைமையேற்று நிகழ்த்தினார். கரூர் மாவட்ட ஆட்சியர் முனைவர் ஜே. உமாமகேஸ்வரி இ.ஆ.ப. சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். அவர்தம் சிறப்புரையில் தமிழுக்கும் பிற இந்திய - உலக மொழிக் குடும்பங்களுக்கும் இடையே காணப்படும் தொடர்பின் சிறப்பை வெளிப்படுத்தினார். பேராசிரியர் கு. சிவமணி கருத்தரங்கம்பற்றிய விளக்கமான மதிப்பீட்டு அறிக்கையை அளித்தார். கொடைக்கானல் அன்னை தெரசா பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் தாயம்மாள் அறவாணன் சிறப்புரை நிகழ்த்தினார். திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் க.ப. அறவாணன் விழாவின் நிறைவு உரையை நிகழ்த்தினார். இறுதியில் இளமாற அடிகள் நன்றி நவின்றார்.

கருத்தரங்கு 2

# ஆதிச்சநல்லூர்ச் சிறப்பும் எதிர்காலத் திட்டங்களும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சென்னைப் பெரியார் ஈ.வெ.இராமசாமி - நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளையும் இணைந்து திருநெல்வேலி தமிழ் வளர்ச்சி-பண்பாட்டு மையத்தில் 22.01.2010 முதல் 24.01.2010 முடிய மூன்று நாட்கள் 'தமிழ்நாட்டுத் தொல்லியல் ஆய்வுகள்: ஆதிச்சநல்லூர்ச் சிறப்பும் எதிர்காலத் திட்டங்களும்' என்னும் தலைப்பில் கருத்தரங்கை நடத்தின. இக்கருத்தரங்கிற்கு அறக்கட்டளைத் தலைவர் வே. ஆனைமுத்துவும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் ந. அரணமுறுவலும் ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்பட்டார்கள்.

தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வந்த முந்நூறு பேர் கருத்தரங்கில் கலந்துகொண்டனர்.

22.01.2010ஆம் நாள் காலை 10.30 மணிக்குக் கருத்தரங்கின் தொடக்க விழா நடந்தது. அறக்கட்டளையின் தலைவர் வே. ஆனைமுத்து தலைமை தாங்கினார். ஒருங்கிணைப்பாளர் முனைவர் ந.அரணமுறுவல் அனைவரையும் வரவேற்றார்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் எண்பேராய உறுப்பினர் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் ஆதிச்சநல்லூர் அகழாய்வுக் கண்காட்சியைத் திறந்துவைத்து உரையாற்றினார். தமிழகத் தொல்லியல் துறை மேனாள் இயக்குநர் நடன. காசிநாதன் கருத்தரங்கைத் தொடங்கிவைத்து ஆதிச்சநல்லூர் நாகரிகமும் அரப்பா நாகரிகமும் பல வகைகளிலும் ஒத்திருக்கின்றன என்பதைச் சான்றுகளுடன் எடுத்து விளக்கினார்.

தமிழ்ப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர் பேராசிரியர் தொ. பரமசிவம் வாழத்துரை வழங்கினார். அறக்கட்டளை உறுப்பினர் க. முகிலன் நன்றி நவின்றார்.

எட்டு அமர்வுகளாக நடைபெற்ற இக் கருத்தரங்கில் பின்வரும் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினார்கள்.

முனைவர் **சொ. சாந்தலிங்கம்**
முனைவர் **வெ. வேதாசலம்**
திரு **மா. சந்திரமூர்த்தி**
முனைவர் **க. முத்தையா**
திரு **பி. இராமநாதன்**
திரு **கரிகாலன்**
முனைவர் **பா. அறவாழி**
திரு **சி. பாலசுப்பிரமணி**
முனைவர் **சோ. சந்திரவாணன்**
முனைவர் **மா. செந்தில்செல்வக்குமரன்**
முனைவர் **பா. செயக்குமார்**
முனைவர் **நா. மார்க்சியகாந்தி**
திரு அனந்தபுரம் **கோ. கிருட்டிணமூர்த்தி**
திரு **க. குழந்தைவேலன்**
முனைவர் **ப. வெங்கடேசன்**
திரு **ம. காந்தி**
திரு **ச. கிருட்டிணமூர்த்தி**
முனைவர் **சு. இராசவேலு**
முனைவர் **சி. மகேசுவரன்**
திரு **தியாக. சத்தியமூர்த்தி**
பேராசிரியர் **இரா. மதிவாணன்**
பேராசிரியர் **க. நெடுஞ்செழியன்**

கருத்தரங்கின் நிறைவு விழா 24.01.2010ஆம் நாள் காலை 10.30 மணிக்குத் தொடங்கியது. மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் இரா. ஆவுடையப்பன் தலைமையேற்றுப் பேசினார். வே. ஆனைமுத்து அனைவரையும் வரவேற்றார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி திட்டவுரை நிகழ்த்தினார். நிறுவன இயக்குநர் பேராசிரியர் ச.மோகன் வாழ்த்துரை வழங்கினார். மாண்புமிகு விளையாட்டுத் துறை அமைச்சர் தி.பீ.மு. மைதீன்கான் சிறப்புரையாற்றினார். வணக்கத்திற்குரிய திருநெல்வேலி மாநகரத் தந்தை அ. இலெ. சுப்பிரமணியன் வாழ்த்திப் பேசினார்.

மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் கருத்தரங்க நிறைவுப் பேருரையை நிகழ்த்தினார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தாம் மாணவராக இருந்தபோது (1941-44) நாவலர் இரா. நெடுஞ்செழியனுடன் இணைந்து ஈராசு பாதிரியாரை அழைத்துச் சிந்துவெளி நாகரிகம் திரவிட நாகரிகமே என்ற கருத்தரங்கை நடத்தியதை நினைவுகூர்ந்தார். ஒருங்கிணைப்பாளர் முனைவர் ந. அரணமுறுவல் நன்றி கூறினார்.





CICTArchives



கருத்தரங்கு 3

## சங்க இலக்கிய மகளிர் நிலையும் மாண்புகளும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் நாகர்கோவில் பெண்கள் கிறித்துவக் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து 'சங்க இலக்கிய மகளிர் நிலையும் மாண்புகளும்' என்னும் பொருளில் 28-01-2010 முதல் 30-01-2010 முடிய மூன்று நாள்கள் தேசிய கருத்தரங்கைக் கல்லூரி வளாகத்தில் நடத்தின. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் அன்னி தாமசும் பெண்கள் கிறித்துவக் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் இன்பரோஸ் செல்வினும் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்பட்டனர்.

28-01-2010 அன்று, காலை 10 மணியளவில் கருத்தரங்கத் தொடக்க விழா நடைபெற்றது. முனைவர் இன்பரோஸ் செல்வின் வரவேற்புரை வழங்கினார். பெண்கள் கிறித்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ. சிந்திகெயாள் கருத்தரங்கத் தலைமையேற்றுப் பெண்கள் கல்லூரி செம்மொழித் தமிழ் வளர்ச்சிக்கு ஆற்றிய பலவகைச் செயல்களை எடுத்து விளக்கியதுடன் கருத்தரங்கின் சிறப்புக்களையும் விளக்கமாக எடுத்துரைத்தார். பெண்கள் கிறித்துவக் கல்லூரித் தாளாளர், செயலாளர் முனைவர் ஜான் சகாயம் செல்லையாவும் பேராசிரியர் அன்னி தாமசும் வாழ்த்துரை வழங்கினார்கள். மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் முனைவர் க.ப. அறவாணன் தனது தொடக்கவுரையில் உலக நாடுகள் மகளிரின் நிலையை உயர்த்திப் பேசுகின்றன என்றும் சங்க காலத்தில் பெண்மை உயர்வாகப் போற்றப்பெற்றது என்றும் கூறினார். பெண்கள் கிறித்துவக் கல்லூரித் தமிழ்த் துறையைச் சார்ந்த முனைவர் டி.எச். பியூலா மெர்சி வில்சன் நன்றி நவின்றார்.

ஆறு அமர்வுகளாக நடைபெற்ற இக் கருத்தரங்கில் பின்வரும் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினார்கள்.

முனைவர் **இரா. பிரேமா**
முனைவர் **அமுதன்**
முனைவர் **எஸ். ஸ்ரீகுமார்**
முனைவர் **என். வேலம்மாள்**
முனைவர் **தாயம்மாள் அறவாணன்**
முனைவர் **இரா. பிரேமா**
முனைவர் **அரங்க. மல்லிகா**
முனைவர் **இன்பரோஸ் செல்வின்**
முனைவர் **பிரபாவதி தயாளன்**
முனைவர் **சாந்தினி**
திரு **எம். தாஸ்**
முனைவர் **ஆர். கலா ஞான செல்வம்**
முனைவர் **ஐ. ரூஸ்வெல்ட் டானிபாய்**
முனைவர் **ஜே. புனிதா**
முனைவர் **ப. வல்சகுமார்**
முனைவர் **ஜே. சிந்திகெயாள்**
முனைவர் **உ. அனார்கலி**
முனைவர் **டி. டெலோ கஸாபூல்**

கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகள் விழாவில் வெளியிடப்பட்டன.

30-01-2010 அன்று காலை இக்கருத்தரங்கத்தின் நிறைவு விழா நடந்தது. முனைவர் ஜே. சிந்திகெயாள் தலைமையுரை வழங்கினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன எண்பேராய உறுப்பினர் பேராசிரியர் சாலமன் பாப்பையா நிறைவு விழா உரையில் இக்காலச் சமுதாயத்தில் இருக்கும் பெண்கள் நிலையைச் சங்ககாலப் பெண்களோடு ஒப்பிட்டுப் பேசினார். பெண்கள் கிறித்துவக் கல்லூரித் தாளாளர், செயலர் முனைவர் ஜான் சகாயம் செல்லையா வாழ்த்துரை வழங்கினார். பெண்கள் கிறித்துவக் கல்லூரித் தமிழ்த் துறை மாணவிகள் தொடக்கத்தில் விழாவிற்கு வருகை புரிந்தவர்களை வரவேற்றார்கள். இறுதியில் நன்றி நவின்றார்கள்.






CICTArchives



கருத்தரங்கு 4

# தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களில் குடும்பக் கட்டமைப்பும் மனித உறவுகளும்







செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் தத்தனூர் மீனாட்சி இராமசாமி கலை - அறிவியல் கல்லூரியும் இணைந்து தத்தனூரில் 29.01.2010, 30.01.2010 ஆகிய நாட்களில், 'தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களில் குடும்பக் கட்டமைப்பும் மனித உறவுகளும்' என்ற தலைப்பில் கருத்தரங்கை நடத்தின. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இணை ஆய்வறிஞர் முனைவர் மு. இராமகிருஷ்ணனும் மீனாட்சி இராமசாமி கலை - அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவரும் ஒருங்கிணைப்பாளர்களாக விளங்கினர்.

29.01.2010 அன்று காலை 10 மணியளவில் நடைபெற்ற தொடக்க விழாவிற்கு மீனாட்சி எம்.ஆர். இரகுநாதன் தலைமை ஏற்றார். கல்லூரி முதல்வர் முனைவர் தங்க. பிச்சையப்பா வரவேற்புரை வழங்கினார். கல்வி நிறுவனத் தாளாளரும் இயக்குநருமான முனைவர் ஆர். இராசமாணிக்கம் கருத்தரங்கில் இடம்பெற்ற கட்டுரைகளைத் தொகுத்து நூலாக வெளியிட, சிறப்பு விருந்தினர் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன எண்பேராய உறுப்பினர் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் பெற்றுக்கொண்டார்.

ஒருங்கிணைப்பாளர் முனைவர் மு. இராமகிருஷ்ணனும் செம்மொழி நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் கு. சிவமணியும் திருச்சிராப்பள்ளி உருமு தனலட்சுமி கலை - அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் கி. சேகரும் தங்கள் வாழ்த்துரைகளை வழங்கினர். சிறப்பு விருந்தினர் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் தன் சிறப்புரையில் மொழிப்பற்றினைத் தம் வாழ்நாள் அனுபவங்களோடு இணைத்துஅளித்தார். கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் நன்றி நவின்றார்.

முனைவர் **தங்க. பிச்சையப்பா**
பேராசிரியர் **வ. குருநாதன்**
பேராசிரியர் **அ. சிவபெருமான்**
பேராசிரியர் **சாமி. திருமாவளவன்**
பேராசிரியர் **அ. செகதீசன்**
பேராசிரியர் **ப.சு. மூவேந்தன்**
பேராசிரியர் **ச. திருஞானசம்பந்தம்**
புலவர் **சி. பன்னீர்ச்செல்வம்**
முனைவர் **அ. அறிவுநம்பி**
முனைவர் **தி.க. சீனிவாசன்**
முனைவர் **அரங்க. பாரி**
முனைவர் **யாழ். சு. சந்திரா**
புலவர் **பூவை. செயராமன்**
முனைவர் **இரா. செய்சங்கர்**
முனைவர் **சி. சுந்தரேசன்**
பேராசிரியர் **இரா. பூங்கொடி**
கவிஞர் **ச. விநாயகமூர்த்தி**

ஆகியோர் கருத்தரங்கில் தங்கள் கட்டுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

30.01.2010 அன்று பிற்பகல் 3 மணியளவில் நிறைவு விழாவில் மீனாட்சி இராமசாமி கல்வியியல் கல்லூரி முதல்வர் முனைவர் தி.க. சீனிவாசன் வரவேற்புரை நிகழ்த்தினார். எம்.ஆர். கல்வி நிறுவனச் செயலாளர் தாளாளர் வழக்குரைஞர் எம்.ஆர். இரகுநாதன் தலைமையுரையாற்றினார். விழாவில் கலந்துகொண்ட சிறப்பு விருந்தினர்கள் ஆண்டிமடம் சட்டமன்ற உறுப்பினர் திரு எஸ். சிவசங்கர், சென்னைப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் பொற்கோ, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி ஆகியோர் செவ்வியல் இலக்கியங்களின் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் எடுத்துரைத்துக் கட்டுரையாளர்களை வாழ்த்தினர். மீனாட்சி இராமசாமி கல்லூரித் தமிழ்த்துறை விரிவுரையாளர் கு. வேல்முருகன் நன்றிநவின்றார்.

கருத்தரங்கு 5

## தொல்காப்பியம் - சங்க இலக்கியம்: பன்முக நோக்கில் ஒப்பீட்டாய்வு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சேலம் பெரியார் பல்கலைக்கழகமும் இணைந்து, 'தொல்காப்பியம் - சங்க இலக்கியம்: பன்முக நோக்கில் ஒப்பீட்டாய்வு' என்கின்ற தலைப்பில், 01.02.2010 முதல் 03.02.2010 முடிய 3 நாள்கள் தேசியக் கருத்தரங்கம் ஒன்றினை நடத்தின.

01.02.2010 காலையில் நடந்த தொடக்க விழாவிற்குச் சேலம் பெரியார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் மு. தங்கராசு தலைமையேற்றுத் தம் உரையில், இன்றைய தமிழ் மாணவர்களிடம் மூல நூலைப் படிக்கும் வழக்கம் இல்லை, இந்நிலை மாறவேண்டும் என்று கூறினார். சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொற்கோ தம் பேருரையில் நாம் சங்க இலக்கியத்தின் சிறப்பினை வெளிக்கொணர வேண்டும் என்று வலியுறுத்தினார். பெரியார் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் பெ.மாதையன் வரவேற்புரைவழங்க இணைப்பேராசிரியர் முனைவர் தி. பெரியசாமி நன்றியுரைவழங்கினார்.

முதல் நாள் முதல் அமர்விற்குப் பேராசிரியர் இரவிச்சந்திரன் தலைமை தாங்கி முதன்மையுரையினை அளித்தார். அவரைத் தொடர்ந்து தொல்காப்பியம், சங்க இலக்கியம் ஆகியவற்றின் பன்முக நோக்குகள் தொடர்பான கட்டுரைகளை 16 அறிஞர்கள், 5 அமர்வுகளில் வழங்கினர். அவர்களின் பட்டியல் வருமாறு:

பேராசிரியர் **சி.மா. இரவிச்சந்திரன்**
பேராசிரியர் **கி. நாச்சிமுத்து**
திரு **தேவபேரின்பன்**
முனைவர் **அர. பூங்குன்றன்**
முனைவர் **இரா. சம்பத்**
முனைவர் **இராம. சுந்தரம்**
முனைவர் **கார்வேந்தன்**
முனைவர் **க. பஞ்சாங்கம்**
முனைவர் **ராஜ்கௌதமன்**
முனைவர் **அ. இராமசாமி**
முனைவர் **இந்திரா மேனுவல்**
முனைவர் **பா. மதிவாணன்**
பேராசிரியர் **பெ. மாதையன்**
முனைவர் **மே.து. ராசுகுமார்**
பேராசிரியர் **இரா. கோதண்டராமன்**
முனைவர் **இரா. செயராமன்**

03.02.2010 மாலை 4 மணியளவில் நடைபெற்ற நிறைவு விழாவில் பெரியார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் மு. தங்கராசு தலைமையேற்று உரையாற்றினார். அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வு மைய மேனாள் இயக்குநர் பேராசிரியர் செ.வை. சண்முகம் சிறப்புரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் ஆய்வறிஞர் பேராசிரியர் இரா. கோதண்டராமன் கருத்துரைவழங்க, தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் மு. தமிழ்மாறன் நன்றியுரைவழங்கினார்.

கருத்தரங்கு 6

## சங்க இலக்கியத்தில் மனித உரிமைகள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் புதுவைப் பல்கலைக்கழக அரசியல் - பன்னாட்டு உறவியல் துறையும் இணைந்து 01.02.2010 முதல் 03.02.2010 வரை 'சங்க இலக்கியத்தில் மனித உரிமைகள்' என்னும் தலைப்பில் கருத்தரங்கைப் புதுவையில் நடத்தின. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் ப. மருதநாயகமும் புதுவைப் பல்கலைக்கழக அரசியல் - பன்னாட்டு உறவியல் துறைப் பேராசிரியர் பா. கிருஷ்ணமூர்த்தியும் ஒருங்கிணைப்பாளர்களாக விளங்கினர்.

01.02.2010 அன்று காலை 10 மணியளவில் நடைபெற்ற தொடக்க விழாவில் அரசியல் - பன்னாட்டு உறவியல் துறைத் தலைவர் பேராசிரியர் மோகன பாஸ்கரன் பிள்ளை வரவேற்புரை வழங்கினார். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் பா. கிருஷ்ணமூர்த்தி நோக்கவுரையை அளித்தார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் ப. மருதநாயகம் தன் தொடக்கவுரையில், சங்கப் புலவர்களின் சமூக உணர்வுகளையும் அரசர்கள் தவறிழைக்குங்கால் புலவர்கள் அவற்றைச் சுட்டிக்காட்டியமையையும் அரசர்களிடையே சங்கப் புலவர் ஔவையாருக்குக் கிடைத்த பெருமதிப்பையும் அதியமான் பெண்கள் முன்னேற்றத்திலும் அவர்கள் பாதுகாப்பிலும் கொண்ட அக்கறையையும் எடுத்துரைத்தார். புதுவைப் பல்கலைக்கழகச் சமூக அறிவியல் - பன்னாட்டு உறவியல் புலத்தின் புல முதன்மையர் பேராசிரியர் டி. சம்பந்தன்






வாழ்த்துரை வழங்கினார். புதுவைப் பல்கலைக்கழகச் சமூகப் பண்பாட்டுத் துறை இயக்குநர் பேராசிரியர் ஏ. பாலசுப்பிரமணியன் தலைமையுரையில் சங்க இலக்கியத்திலுள்ள மனித உரிமைகளை வரலாற்றுப் பார்வையில் எடுத்துரைத்தார். முனைவர் பா. கிருஷ்ணமூர்த்தி நன்றி நவின்றார்.

கலை, சமூக அறிவியல், தமிழ், வடமொழிப் புலங்களின் மாணவர்களும் பேராசிரியர்களும் கருத்தரங்கில் கலந்துகொண்டனர்.

பேராசிரியர் **என். கே. ஜா**
முனைவர் **பா. கிருஷ்ணமூர்த்தி**
பேராசிரியர் **அ. அறிவுநம்பி**
முனைவர் **ஆ. விஜயராணி**
பேராசிரியர் **க. பாண்டுரங்கன்**
முனைவர் **அ. இலட்சுமி தத்தை**
பேராசிரியர் **சுஜாதா விஜயராகவன்**
பேராசிரியர் **தரணீதரன்**
பேராசிரியர் **ப. மருதநாயகம்**
பேராசிரியர் **பூரணச்சந்திரன்**
முனைவர் **க. நெடுஞ்செழியன்**
பேராசிரியர் **தி. முருகரத்தனம்**
பேராசிரியர் **ஆ. திருநாகலிங்கம்**
பேராசிரியர் **எஸ். இராசாராம்**
முனைவர் **சந்திரிகா**
திரு **இராகவன்**
பேராசிரியர் **சி.எஸ். இராதாகிருஷ்ணன்**
பேராசிரியர் **தெ. ஞானசுந்தரம்**
பேராசிரியர் **க. பஞ்சாங்கம்**

ஆகிய அறிஞர்கள் தங்கள் ஆய்வுக் கட்டுரைகளை அளித்தனர்.

03.02.2010 அன்று பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெற்ற நிறைவு விழாவில் அரசியல் - பன்னாட்டு உறவியல் துறைத் தலைவர் பா. கிருஷ்ணமூர்த்தி வரவேற்புரைவழங்கினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன எண்பேராய உறுப்பினர் து. இரவிக்குமார் நிறைவுரையில் மனித உரிமைபற்றிய விழிப்புணர்வு தேவை என்று எடுத்துரைத்தார். முனைவர் பா. கிருஷ்ணமூர்த்தி நன்றிநவின்றார்.

கருத்தரங்கு 7

## நீதி இலக்கியங்கள் பதிப்புக்களும் வெளியீடுகளும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்த்துறையும் இணைந்து 'நீதி இலக்கியங்கள் பதிப்புக்களும் வெளியீடுகளும்' என்னும் பொருண்மையில் 03.02.2010 முதல் 05.02.2010 முடிய தேசியக் கருத்தரங்கினைப் பல்கலைக்கழக வளாகத்தில் நடத்தின. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் கு.சிவமணியும் அழகப்பா பல்கலைக்கழக இணைப் பேராசிரியர் இரா. தாமோதரனும் இக்கருத்தரங்கிற்கு ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்பட்டார்கள்.

03.02.2010 அன்று காலை 10 மணிக்குத் தொடக்க விழா தமிழ்த்துறையின் கருத்தரங்கு அறையில் நடைபெற்றது. அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியரும் கலைப்புலத் தலைவருமான முனைவர் மு.பாண்டி வரவேற்புரை வழங்கினார். பேராசிரியர் கு.சிவமணி விரிவான அறிமுக உரையில், கருத்தரங்கின் நோக்கத்தையும் குறிக்கோள்களையும் எடுத்துக் கூறினார். அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ப.இராமசாமி தலைமை ஏற்றுக் கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார். மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் க.ப. அறவாணன் உலக நீதி இலக்கியம்பற்றியும், தமிழ் நீதி இலக்கியம்பற்றியும் சொற்பொழிவாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன எண்பேராய உறுப்பினர் பேராசிரியர் மா. நன்னன் ''தமிழைத் தமிழாக்குவோம்'' என்னும் தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். பேராசிரியர் இரா. தாமோதரன் நன்றி நவின்றார்.

கீழ்க்காணும் அறிஞர்கள் ஆய்வுக்கட்டுரைகளை வழங்கினார்கள்.

பேராசிரியர் **பழ. முத்துவீரப்பன்**
பேராசிரியர் **ஆ. திருநாகலிங்கம்**
திரு **இளமாறன்**
பேராசிரியர் **தாயம்மாள் அறவாணன்**
பேராசிரியர் **இரா. மோகன்**
பேராசிரியர் **என். சண்முகம்**
பேராசிரியர் **எம். ரேணுகா**
பேராசிரியர் **டி. தாமரைச்செல்வி**
முனைவர் **ஆ. மணி**
முனைவர் **அ. செல்வராசு**
பேராசிரியர் **அ. அறிவுநம்பி**
பேராசிரியர் **எஸ். சிவகாமி**
பேராசிரியர் **ஆர். மாதவன்**
பேராசிரியர் **டி. செல்வம்**
பேராசிரியர் **எஸ். ராஜாராம்**

CICTArchives



பேராசிரியர் **எம். சுதா**
பேராசிரியர் **கா.கோ. வேங்கடராமன்**
பேராசிரியர் **ம. திருமலை**
பேராசிரியர் **க. பஞ்சாங்கம்**
பேராசிரியர் **ஆர். விவேகானந்தகோபால்**
பேராசிரியர் **அ. ஆலிஸ்**
பேராசிரியர் **பி. ஞானசேகரன்**
பேராசிரியர் **எல்.எ. உமாமகேஸ்வரி**
பேராசிரியர் **பெ. மாதையன்**
பேராசிரியர் **அ.அ. ராஜாராம்**
முனைவர் **ம. சரவணன்**
திரு **இரா. வெங்கடேசன்**
திரு **கோ. சதீஸ்**

05.02.2010 அன்று மாலை கருத்தரங்க நிறைவு விழா நடைபெற்றது. பேராசிரியர் மு.பாண்டி வரவேற்புரை வழங்கினார். பேராசிரியர் கு.சிவமணி கருத்தரங்கின் நடைமுறைகள்பற்றி விளக்கவுரை அளித்தார். பெரியார் மணியம்மை பல்கலைக்கழக ஆங்கிலத்துறைத் தலைவர் பேராசிரியர் பழனி அரங்கசாமி ''காலந்தோறும் நீதி இலக்கியம்'' என்னும் பொருளில் சிறப்புரை ஆற்றினார். அழகப்பா பல்கலைக்கழக இணைப் பேராசிரியர் முனைவர் எஸ். இராஜாராம் நன்றி நவின்றார்.

கருத்தரங்கு 8

## பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் கடமைகளும் உரிமைகளும்


செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கோவை பூ.சா.கோ.அர. கிருட்டிணம்மாள் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து 11.02.2010 முதல் 13.02.2010 வரை 'பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் கடமைகளும் உரிமைகளும்' என்கின்ற தலைப்பில் கருத்தரங்கம் ஒன்றைக் கோவையில் நடத்தின. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இணை ஆய்வறிஞர் முனைவர் கூ.மு. புவனேசுவரியும் பூ.சா.கோ.அர. கிருட்டிணம்மாள் மகளிர் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் கீ. சாந்தாமணியும் ஒருங்கிணைப்பாளர்களாக விளங்கினர்.

11.02.2010 அன்று காலை 10 மணியளவில் நடைபெற்ற தொடக்க விழாவில், பூ.சா.கோ.அர. கிருட்டிணம்மாள் மகளிர் கல்லூரி முதல்வர் முனைவர் நா. யசோதா தேவி வரவேற்புரை வழங்கினார். பேராசிரியர் தமிழண்ணல் தலைமையுரையில் தமிழ் உலகில் பண்டைய இலக்கிய நூல்களின் பெரும்பங்கினையும் சிறப்பினையும் விரிவாக விளக்கினார். மதுரை காமராசர் பல்கலைக்கழக ஒப்பிலக்கியத் துறைத் தலைவர் பேராசிரியர் இரா. மோகன் வாழ்த்துரை வழங்கினார். ஒருங்கிணைப்பாளர் முனைவர் கீ. சாந்தாமணி நன்றி நவின்றார்.

இக்கருத்தரங்கில் தில்லி, கௌகாத்தி, ஐதராபாத், ஆகிய இடங்களிலிருந்தும் பேராசிரியர்கள் வருகை புரிந்து தங்கள் ஆய்வுக் கட்டுரைகளை வழங்கினர். ஊட்டி, பொள்ளாச்சி, ஈரோடு, திருப்பூர், கோவை ஆகிய இடங்களிலிருந்து 150க்கும் மேற்பட்ட ஆய்வு மாணவர்கள் கருத்தரங்கில் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

கருத்தரங்கில் கலந்துகொண்ட ஆய்வறிஞர்கள் பட்டியல் பின்வருமாறு:

முனைவர் **ம. மனோன்மணி**
முனைவர் **அ. பூலோகரம்பை**
முனைவர் **கே. மகாலிங்கம்**
முனைவர் **அ. இராமசாமி**
திரு **க. செல்வக்குமார்**
திரு **அ. பரிமளகாந்தம்**
செல்வி **பொ. ராணி**
முனைவர் **வெ. சாவித்திரி**
முனைவர் **மு. வள்ளியம்மை**
முனைவர் **த. காசிராசன்**
செல்வி **ம. அனுராதா**
முனைவர் **மு. இளமுருகன்**
முனைவர் **ப. ஜெயகிருஷ்ணன்**
முனைவர் **தி. கமலி**
முனைவர் **இரா. விஜயன்**
முனைவர் **இராம. மலர்விழிமங்கையர்க்கரசி**
முனைவர் **த. முருகேசன்**
திரு **க. பரமசிவம்**
செல்வி **கோ. சுகன்யா**
முனைவர் **சி.மா. இரவிச்சந்திரன்**
முனைவர் **ஸ்ரீ. இராஜகோபால்**
செல்வி **வெ. நிர்மலா**
முனைவர் **அ. மணிமேகலை**
முனைவர் **தே. ஞானசேகரன்**
முனைவர் **தா. திருநாவுக்கரசு**
செல்வி **நளினப்பிரியா**
முனைவர் **இரா. ஜோதிமணி**
பேராசிரியர் **அ. அறிவுநம்பி**



விலை உரூ. 50/-



விலை உரூ. 50/-

CICTArchives



முனைவர் **ப. சரவணன்**
பேராசிரியர் **பெ. மாதையன்**
முனைவர் **சு. அமுதன்**
முனைவர் **கி.சா. பர்வீன் சுல்தானா**
முனைவர் **சு. துரை**
முனைவர் **ப. தமிழ்ச்செல்வன்**
முனைவர் **ச.பொ. சீனிவாசன்**

13.02.2010ஆம் நாள் பிற்பகல் 2 மணி அளவில் நடைபெற்ற நிறைவு விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் நா. யசோதா தேவி வரவேற்புரைவழங்கினார். மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் இரா. தி. சபாபதிமோகன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன எண்பேராய உறுப்பினர் கவிக்கோ அப்துல் ரகுமான் தலைமையுரை நிகழ்த்திக் கருத்தரங்கில் பங்கேற்றவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கினார். மதுரைத் தியாகராசர் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் கு. ஞானசம்பந்தன் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் கூ.மு. புவனேசுவரி நன்றி நவின்றார்.

கருத்தரங்கு 9

## தொல்காப்பியம் வீரசோழியம், நேமிநாதம் ஆகிய மரபு இலக்கணங்களிலுள்ள ஒலியனியல், உருபனியல் விளக்க விதிகள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வு மையமும் இணைந்து 'தொல்காப்பியம், வீரசோழியம், நேமிநாதம் ஆகிய மரபு இலக்கணங்களிலுள்ள ஒலியனியல், உருபனியல் விளக்க விதிகள்' என்னும் பொருளில் 11.02.2010 முதல் 13.02.2010 முடிய தேசியக் கருத்தரங்கைப் பல்கலைக்கழக வளாகத்தில் நடத்தின. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் முனைவர் க. உமாராஜும் அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வு மையப் பேராசிரியர் எம். கணேசனும் ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்பட்டார்கள்.

11.02.2010 அன்று கருத்தரங்கத் தொடக்க விழா நடைபெற்றது. பேராசிரியர் எம். கணேசன் வரவேற்புரை நிகழ்த்தினார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் எம். இராமநாதன் தன் தொடக்கவுரையில் 2004ஆம் ஆண்டு இந்திய அரசு தமிழைச் செம்மொழியாக அறிவித்ததுபற்றியும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் சென்னையில் நிறுவப்பட்டதுபற்றியும் நினைவுகூர்ந்தார். 2010ஆம் ஆண்டு சூன் மாதம் கோவையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடைபெறவிருக்கும் சூழலில் இக்கருத்தரங்கம் நடப்பது மிகப் பொருத்தமானதாகும். இப்படிப்பட்ட பணி நல்ல வரலாற்று முடிவுகளை எடுக்கவும் தமிழ் மரபு சார்ந்த தரமான இலக்கணம் படைக்கவும் துணைநிற்கும் என்றும் இலக்கண ஆய்வுக்கான வரலாற்று வளர்ச்சியானது ஒப்பாய்வு வளர்ச்சிக் கூறுகளை வெளிப்படுத்தும் என்றும் தெரிவித்தார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வு மைய முன்னாள் இயக்குநர் பேராசிரியர் செ.வை. சண்முகம் தமது வாழ்த்துரையில் தமிழின் இலக்கண மரபு தனித்தன்மை வாய்ந்தது என்றும் சமற்கிருத இலக்கணத்திலிருந்து வந்ததில்லை என்றும் கூறினார். அண்ணாமலைப் பல்கலைக்கழக இந்திய மொழிகள் புலத் தலைவர் பேராசிரியர் பி.எல். முத்து வீரப்பன் தன் வாழ்த்துரையில் மொழியியல் மையம் தமிழ் மொழிக்கும் மொழியியலுக்கும் செய்யும் பணிகளைப் பாராட்டினார். புதுவைப் பல்கலைக்கழகச் சுப்பிரமணியப் பாரதியார் தமிழியற் புலத் தலைவர் பேராசிரியர் எஸ். ஆரோக்கியநாதன் நிறைவுரையாற்றினார். அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வு மையப் பேராசிரியர் வி. திருவள்ளுவன் நன்றி நவின்றார்.

இக்கருத்தரங்கின் பத்து அமர்வுகளில் 66 அறிஞர்கள் தங்கள் ஆய்வுக் கட்டுரைகளை வழங்கினார்கள். அவை நூலாகத் தொகுக்கப்பட்டுக் கருத்தரங்கில் பங்கேற்ற அனைவருக்கும் வழங்கப்பட்டன. ஆய்வுக் கட்டுரைகள் வழங்கிய அறிஞர்களின் பட்டியல் வருமாறு:

முனைவர் **அ. சீனிவாசன்**
முனைவர் **ஏ. தனலட்சுமி**
முனைவர் **அ. காமாட்சி**
முனைவர் **ஆ.கோ. நடராஜன்**
முனைவர் **டேவிட் பிரபாகர்**
முனைவர் **க. இரவிசங்கர்**
முனைவர் **ஹெப்சி ரோஸ் மேரி**
முனைவர் **ஜெயராமன்**
முனைவர் **க. உமாராஜ்**
முனைவர் **எம். இராமசுந்தரி**
முனைவர் **எம். சிவசண்முகம்**
முனைவர் **மு. சுசீலா**
முனைவர் **மு. வள்ளியம்மை**
பேராசிரியர் **என். நடராஜப்பிள்ளை**
முனைவர் **பி. சந்திரமோகன்**
முனைவர் **பி. குழந்தைசாமி**
முனைவர் **பி. மாலினி**
முனைவர் **பி. முருகன்**
முனைவர் **பி. பத்மநாபப்பிள்ளை**
முனைவர் **பி. பாண்டியராஜா**
முனைவர் **பி. விஜயா**
முனைவர் **பி.எஸ். மூவேந்தன்**
முனைவர் **தி. நெடுஞ்செழியன்**
முனைவர் **இரா. அறவேந்தன்**

முனைவர் **அ. சிவபெருமான்**
முனைவர் **ச. இராஜேந்திரன்**
முனைவர் **எஸ். இராதாகிருஷ்ணன்**
முனைவர் **எஸ். சரண்யா**
முனைவர் **டி. செல்வம்**
முனைவர் **வி. சந்திரன்**
முனைவர் **வி. கீதா**
முனைவர் **வ.ஜெயா**
முனைவர் **வி. திருவள்ளுவன்**
முனைவர் **வா.மு.சே. முத்துராமலிங்க ஆண்டவர்**
முனைவர் **வே. வேணுகுமார்**
பேராசிரியர் **ஏ. வைத்தியலிங்கம்**
பேராசிரியர் **சி. சண்முகம்**
பேராசிரியர் **ந. தெய்வசுந்தரம்**
பேராசிரியர் **எச். சித்திரபுத்திரன்**
பேராசிரியர் **கி. அரங்கன்**
பேராசிரியர் **எம். கணேசன்**
பேராசிரியர் **பொன்.கோதண்டராமன்**
பேராசிரியர் **செ.வை. சண்முகம்**
பேராசிரியர் **வி. தயாளன்**
பேராசிரியர் **வீ. இரேணுகாதேவி**

13.02.2010 அன்று கருத்தரங்க நிறைவு விழா நடைபெற்றது. அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வு மைய இணைப் பேராசிரியர் வரவேற்புரை வழங்கினார். மொழியியல் உயராய்வு மைய இயக்குநர் முனைவர் அ.கோ. நடராஜன் தலைமை ஏற்று உரையாற்றினார். முனைவர் க. உமாராஜ் கருத்தரங்கம்பற்றிய விளக்கமான அறிக்கையை வழங்கினார். தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழக மொழியியல் துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் கி. அரங்கன் நிறைவுரை வழங்கினார். கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழக மொழியியல் துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் சி. சண்முகம் கருத்தரங்கம்பற்றிய கருத்துக்களைத் தொகுத்துக் கூறினார். அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வு மையத்தின் மூத்த விரிவுரையாளர் முனைவர் சி.பி. சந்திரமோகன் நன்றி நவின்றார்.

கருத்தரங்கு 10

## அண்மைக் காலத் தொல்லியல் ஆதாரங்கள் வழி இந்திய எழுத்துமுறை வரலாறு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல் - தொல்லியல் துறையும் இணைந்து 22.02.2010 முதல் 24..02.2010 வரை 'அண்மைக் காலத் தொல்லியல் ஆதாரங்கள் வழி இந்திய எழுத்துமுறை வரலாறு' என்னும் தலைப்பிலான கருத்தரங்கைத் தஞ்சாவூரில் நடத்தின. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இணை ஆய்வறிஞர் முனைவர் கூ.மு.புவனேசுவரியும் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல் - தொல்லியல் துறைத் தலைவர் முனைவர் பா. செயக்குமாரும் ஒருங்கிணைப்பாளர்களாக விளங்கினர்.

22.02.2010 அன்று காலை 10 மணியளவில் நடைபெற்ற தொடக்க விழாவில், தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல் - தொல்லியல் துறைத் தலைவர் முனைவர் பா. செயக்குமார் வரவேற்புரை வழங்கினார். தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ம. இராசேந்திரன் தமது தலைமையுரையில் தமிழ்மொழியின் தனித்தன்மையையும் தொன்மையையும் அதன் வரிவடிவத்திலிருந்து அறியமுடியும் என்றும் வரிவடிவம் இல்லா மொழிகள் வழக்கழிந்தன என்றும் எடுத்துரைத்தார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன எண்பேராய உறுப்பினரும் தமிழ்ப் பல்கலைக்கழக ஆட்சிக் குழு உறுப்பினருமான திரு து. இரவிக்குமார் சிறப்புரையில், போட்டி நிறைந்த உலகிற்கு ஏற்ற வகையில் கல்வித்திட்டத்தில் படைப்புத் திறனுக்கு முக்கியத்துவம் வழங்கவேண்டுமெனக் கூறினார். தமிழகத் தொல்லியல் துறையின் மேனாள் இயக்குநர் திரு நடன. காசிநாதன், தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல் - தொல்லியல் துறையின் மேனாள் தலைவர் பேராசிரியர் செ. இராசு, இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறைக் கல்வெட்டுப் பிரிவின் மேனாள் இயக்குநர் முனைவர் எம்.டி. சம்பத்


செம்மொழி

ஆங்கிலச் செய்தி மடல்கள்


செய்திமடல் 1
அக்டோபர் - திசம்பர் 2006


செய்திமடல் 2
சனவரி - மார்ச்சு 2007


செய்திமடல் 3
ஏப்ரல் - சூன் 2007


செய்திமடல் 4
சூலை - செப்டம்பர் 2007

ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ஒருங்கிணைப்பாளர் கூ.மு.புவனேசுவரி நன்றி நவின்றார்.

இக்கருத்தரங்கில் 22 பேராளர்கள் கலந்துகொண்டனர். 25 ஆய்வுக் கட்டுரைகள் அளிக்கப்பட்டன. சென்னை, திண்டுக்கல், அரியலூர், தஞ்சாவூர் ஆகிய இடங்களிலிருந்து 150க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.

முனைவர் **செ. இராசு**
முனைவர் **இராசு. பவுன்துரை**
திரு **நடன. காசிநாதன்**
முனைவர் **இரா. மதிவாணன்**
திரு **ம. சோ. விக்டர்**
திரு **ம. வெங்கடேசன்**
முனைவர் **அர. பூங்குன்றன்**
திரு **மா. சந்திரமூர்த்தி**
திரு **எஸ். எம். ராம்ஜி**
திரு **ஆறுமுக சீத்தாராமன்**
திரு **ஜெ. சௌந்தரராசன்**
திரு **ச. கிருஷ்ணமூர்த்தி**
முனைவர் **சி. இலட்சுமணன்**
முனைவர் **எம். டி. சம்பத்**
திரு **ஆர். சேகர்**
முனைவர் **வெ. வேதாசலம்**
முனைவர் **சு. இராசவேலு**
திரு **ப. சங்கரலிங்கம்**
முனைவர் **வீ. செல்வகுமார்**
முனைவர் **மா. பவானி**
முனைவர் **பா. செயக்குமார்**

24.02.2010 அன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்ற நிறைவு விழாவில் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் (பொ) பேராசிரியர் ஆ. கார்த்திகேயன் தலைமையேற்று உரையாற்றினார். தமிழ்ப் பல்கலைக்கழகச் சுவடிப்புலத் தலைவர் பேராசிரியர் வே. இரா. மாதவன் கருத்தரங்கில் கலந்துகொண்ட மாணவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கிச் சிறப்புரை ஆற்றினார். தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை மேனாள் துணை இயக்குநர் திரு மா. சந்திரமூர்த்தி, கல்வெட்டாய்வாளர் முனைவர் வெ. வேதாசலம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ஒருங்கிணைப்பாளர் முனைவர் கூ.மு. புவனேசுவரி நன்றி நவின்றார்.

கருத்தரங்கு 11

## சங்க இலக்கியம் காட்டும் சோழ நாட்டியல்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கும்பகோணம் அரசினர் கலைக் கல்லூரித் (தன்னாட்சி) தமிழ்த் துறையும் இணைந்து 22.02.2010 முதல் 24.02.2010 வரை 'சங்க இலக்கியம் காட்டும் சோழ நாட்டியல்' என்னும் கருத்தரங்கைக் கும்பகோணத்தில் நடத்தின. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் முனைவர் கு. சிவமணியும் கும்பகோணம் அரசினர் கலைக் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் அ.ம. சத்தியமூர்த்தியும் ஒருங்கிணைப்பாளர்களாக விளங்கினர்.

22.02.2010 அன்று காலை 9.30 மணியளவில் நடைபெற்ற தொடக்க விழாவிற்குக் கல்லூரி முதல்வர் பேராசிரியர் ச. கனகசுந்தரம் தலைமை ஏற்றார். தமிழ்த் துறைப் பேராசிரியர் முனைவர் தி. அரங்கநாதன் முன்னிலை ஏற்றார். தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் அ.ம. சத்தியமூர்த்தி வரவேற்புரை வழங்கினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் முனைவர் கு. சிவமணி அறிமுகவுரையில் சோழ நாட்டின் சிறப்புக்களைப் பட்டியலிட்டு மேலை நாடுகளோடு நம் நாட்டை ஒப்பிடும்போது நம் பண்பாடும் பாரம்பரியமும் பன்மடங்கு மேலானவை எனவும் வணிகமும் வேளாண்மையும் தொன்றுதொட்டு வழங்கி வருகின்றன எனவும் குறிப்பிட்டார். தஞ்சைப் பிரிஸ்ட் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன் தன் தொடக்கவுரையில் காவிரியாற்றின் வரலாறு, தமிழர் நாகரிகம், ஆய்வு வளர்ச்சி ஆகியன குறித்து விரிவாக விளக்கினார். முனைவர் த. துரையரசன் நன்றி நவின்றார்.



செய்திமடல் 5
அக்டோபர் – திசம்பர் 2007




செய்திமடல் 6
சனவரி – சூன் 2008



செய்திமடல் 7
சூலை – திசம்பர் 2008



செய்திமடல் 8
சனவரி – சூன் 2009



செய்திமடல் 9
சூலை – திசம்பர் 2009

CICTArchives



இக்கருத்தரங்கில் 9 அமர்வுகள் நிகழ்ந்தன. 26 கட்டுரைகளைப் பின்வரும் ஆய்வறிஞர்கள் அளித்தனர்.

முனைவர் **த. தியாகராசன்**
முனைவர் **தி. அரங்கநாதன்**
முனைவர் **பா. வீரப்பன்**
முனைவர் **நா. தியாகராசன்**
முனைவர் **மு. இளங்கோவன்**
முனைவர் **சு. இரவிச்சந்திரன்**
பேராசிரியர் **வெ. செயச்சந்திரன்**
பேராசிரியர் **க. நெடுஞ்செழியன்**
முனைவர் **அ. ஆறுமுகம்**
முனைவர் **அ.ம. சத்தியமூர்த்தி**
முனைவர் **பா. மதிவாணன்**
முனைவர் **அ. குணசேகரன்**
முனைவர் **சு. ஜான்பீட்டர்**
முனைவர் **நா. பழனிவேலு**
முனைவர் **தி. பூங்குன்றன்**
முனைவர் **ஆ. தனஞ்செயன்**
முனைவர் **ச. திருஞானசம்பந்தம்**
பேராசிரியர் **ப. செந்தில்வேலு**
முனைவர் **சு. தமிழ்வேலு**
முனைவர் **இரா. இலட்சுமண சிங்**
பேராசிரியர் **பெ. மாதையன்**
முனைவர் **செ. காளிமுத்து**
முனைவர் **சி. சத்தியசீலன்**
முனைவர் **சா. சிற்றரசு**
பேராசிரியர் **அரங்க. சுப்பையா**

24.02.2010 அன்று பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்ற நிறைவு விழாவில் முனைவர் அ. குணசேகரன் வரவேற்புரை வழங்கினார். கல்லூரி முதல்வர் பேராசிரியர் ச. கனகசுந்தரம், முனைவர் தி. அரங்கநாதன் ஆகியோர் முன்னிலையில் ஆய்வறிஞர் கு. சிவமணி தலைமையுரை ஆற்றினார். கவிவேந்தர் கா. வேழவேந்தன் கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்பை வெளியிடக் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்களான முனைவர் கு. சிவமணியும் முனைவர் அ.ம. சத்தியமூர்த்தியும் பெற்றுக்கொண்டனர். பங்கேற்ற 350க்கும் மேற்பட்ட மாணவர்களுக்குப் பங்கேற்புச் சான்றிதழ் வழங்கினார். பின் அவர் வழங்கிய நிறைவுப் பேருரையில் பழந்தமிழ் இலக்கியங்கள் கூறும் சோழ நாட்டின் சிறப்பினை எடுத்துரைத்தார். ஆசிரியர்கள் சார்பில் முனைவர் செ. காளிமுத்துவும், மாணவர்கள் சார்பில் ஆய்வு மாணவர் ந. அய்யம்பெருமாளும் வழங்கிய கருத்தரங்க மதிப்புரையில் சங்க இலக்கியம் காட்டும் சோழ நாட்டு வரலாற்றையும் பண்பாட்டுக் கூறுகளையும் தொகுத்துக் குறிப்பிட்டனர். முனைவர் அ.ம. சத்தியமூர்த்தி தம் தொகுப்புரையில் இக்கருத்தரங்கு இளைய தலைமுறையினருக்குச் சங்க இலக்கியம் காட்டும் சோழ நாட்டியலை அறிந்துகொள்ள உதவி புரிந்திருக்கிறது என்றார். குடந்தைக் கல்லூரிப் பேராசிரியர் முனைவர் வா. சிவநேசன் நன்றி நல்கினார்.

கருத்தரங்கு 12

## தமிழ்ச் செவ்வியல் இலக்கியம்: மார்க்சிய ஆய்வுகள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் உதகமண்டலம் அரசுக் கலைக் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து 25.02.2010 முதல் 26.02.2010 வரை 'தமிழ்ச் செவ்வியல் இலக்கியம்: மார்க்சிய ஆய்வுகள்' என்னும் தலைப்பில் கருத்தரங்கை நடத்தின. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் ப. மருதநாயகமும் உதகமண்டலம் அரசுக் கலைக் கல்லூரித் தமிழ்த் துறை இணைப் பேராசிரியர் முனைவர் சு. துரையும் ஒருங்கிணைப்பாளர்களாக விளங்கினர்.

25.02.2010 அன்று காலை 9.30 மணியளவில் நடைபெற்ற தொடக்க விழாவில் உதகமண்டலம் அரசுக் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் வெ. அழகர் இராமனுஜம் வரவேற்புரை வழங்கினார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் கரு. அழ. குணசேகரன் சிறப்புரை வழங்கினார். அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் பா.மாசிலாமணி வாழ்த்துரை நல்கினார். செம்மொழி நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் ப. மருதநாயகம், க. கைலாசபதியின் தமிழ் வீரயுகக் கவிதை பற்றிய ஆய்வுரையை அளித்தார். கல்லூரித் தமிழ்த் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் யோ. தர்மராஜ் நன்றியுரை நல்கினார்.

கருத்தரங்கின் நான்கு அமர்வுகளில்

திரு **பொ. வேல்சாமி**
முனைவர் **நா. இராமச்சந்திரன்**
பேராசிரியர் **வீ. அரசு**
முனைவர் **ந. முத்துமோகன்**
பேராசிரியர் **அ. மார்க்ஸ்**
பேராசிரியர் **ஆ. சிவசுப்பிரமணியன்**
பேராசிரியர் **க. பஞ்சாங்கம்**
திரு **கோவை ஞானி**
பேராசிரியர் **அருணன்**
முனைவர் **ஆ. பத்மாவதி**

ஆகியோர்

பேராசிரியர் **க. கைலாசபதி**



CICTArchives





பேராசிரியர் **கா. சிவத்தம்பி**
திரு **ப. ஜீவானந்தம்**
திரு **நா. வானமாமலை**
பேராசிரியர் **கோ. கேசவன்**
திரு **தொ.மு.சி. இரகுநாதன்**

ஆகியோரின் பணிகுறித்து விளக்கினர்.

திரு **கோவை ஞானி**
திரு **ராஜ்கௌதமன்**
திரு **கே. முத்தையா**
திரு **வெ. கிருஷ்ணமூர்த்தி**

ஆகியோர் மார்க்சியப் பங்களிப்புபற்றிய ஆய்வுகளை அளித்தனர்.

26.02.2010 அன்று மாலை 3.30 மணியளவில் நடைபெற்ற நிறைவு விழாவில் ஒருங்கிணைப்பாளர் முனைவர் சு. துரை வரவேற்புரை வழங்கினார். உதகமண்டலம் அரசுக் கல்லூரி முதல்வர் பேராசிரியர் செ. சின்னுசாமி தலைமையில், குப்பம் திராவிடப் பல்கலைக்கழக மேனாள் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் தமிழவன், கருத்தரங்க ஆய்வுரைகளின் மதிப்பீட்டுரையை அளித்தார். அரசுக் கல்லூரித் தமிழ் இணைப் பேராசிரியர் முனைவர் வ. ஆத்மஜோதி நன்றியுரை வழங்கினார்.

கருத்தரங்கு 13

## சங்கச் செவ்வியல் இலக்கியங்கள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் பாலக்காடு அரசு விக்டோரியா கல்லூரியும் இணைந்து 2010 பிப்ரவரி 25, 26 ஆகிய இரண்டு நாட்களில் 'சங்கச் செவ்வியல் இலக்கியங்கள்' என்னும் பொருளில் தேசியக் கருத்தரங்கை நடத்தின. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் கு. சிவமணியும் பாலக்காடு அரசு விக்டோரியா கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எம். சமுத்திரப்பாண்டியனும் இக் கருத்தரங்கத்திற்கு ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்பட்டார்கள்.

25-02-2010 அன்று காலை 10 மணியளவில் நடந்த தொடக்க விழாவில் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் டி. கவிதா வரவேற்புரை வழங்கினார். இக்கல்லூரியின் முன்னாள் தமிழ்த்துறைப் பேராசிரியர் கே.ஏ. இராஜாராம் தன்னுடைய தலைமையுரையில் தமிழ்ச் சமூகப் பண்பாட்டு விழுமியங்களை முழுமையாகப் புரிந்துகொள்ள உதவும் சங்க இலக்கியத்தின் முக்கியத்துவத்தை முன்னிலைப்படுத்திப் பேசினார். கோயம்புத்தூர் பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரியின் முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் ம.ரா.போ. குருசாமி தொடக்கவுரை ஆற்றினார். சென்னைப் பல்கலைக் கழக முன்னாள் தமிழ்த் துறைத்தலைவர் பேராசிரியர் அ.அ. மணவாளன் தன்னுடைய நோக்கவுரையில் செம்மொழித் தமிழ் மேம்பாட்டுக்கு மேற்கொள்ள வேண்டிய பல்வேறு பணிகளைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் கு. சிவமணி அறிமுக உரையில் செம்மொழித் தமிழ், பழந்தமிழ்ச் சமூகம் ஆகியவை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் மேற்கொள்ளும் பணிகளையும் கருத்தரங்கத்தின் நோக்கங்களையும் விரிவாக எடுத்துரைத்தார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன எண்பேராய உறுப்பினர் முனைவர் சிலம்பொலி செல்லப்பன் ஆற்றிய சிறப்புரையில் செம்மொழித் தமிழின் இயல்புகளையும் சிறப்புக் கூறுகளையும் எடுத்துக் கூறினார். மேலும் இந்திய அரசிடமிருந்து தமிழுக்குச் செம்மொழித் தகுதி கிடைக்கப்பெற்ற வரலாற்றுச் சாதனையை நினைவு கூர்ந்தார். பாலக்காடு வருமான வரித்துறைக் கூடுதல் ஆணையர் முனைவர் என். அரங்கராஜ், பாலக்காடு அரசு விக்டோரியா கல்லூரி முதல்வர் திருமிகு ஷீலா தாமஸ், மலையாள மனோரமா இதழின் உறைவிட ஆசிரியர் திரு ஜாய் சாஸ்தம்படிக்கல், சித்தூர் அரசுக் கல்லூரி முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் எஸ். ஞானப்பழம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இறுதியாக அரசு விக்டோரியா கல்லூரித் தமிழ் உதவிப் பேராசிரியர் முனைவர் எஸ். சாய் ஸ்ரீ ரேகா நன்றி நவின்றார்.

இந்தக் கருத்தரங்கில் பாலக்காட்டைச் சுற்றிலும் உள்ள பல்வேறு நிறுவனங்களில் பயிலும் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர். பின்வரும் அறிஞர்கள் தம் கட்டுரையை வாசித்தனர்.

முனைவர் **சண்முகசுந்தரம்**
முனைவர் **கே. திலகவதி**
முனைவர் **எஸ். ஜெகதீசன்**
முனைவர் **டி. ஞானகிராமன்**
முனைவர் **எம். நயினார்**
முனைவர் **வா.மு.சே. ஆண்டவர்**
முனைவர் **பி. இரத்தினசபாபதி**
முனைவர் **எஸ். கமலி**

CICTArchives



பின்வரும் அறிஞர்கள் அமர்வுத் தலைவர்களாக விளங்கினர்.

முனைவர் **பி. சம்பத்குமார்**
முனைவர் **ஏ. பாண்டுரங்கன்**
முனைவர் **என். ஞானப்பழம்**

26-02-2010 அன்று நடைபெற்ற நிறைவு விழாவில் டி. கவிதா அனைவரையும் வரவேற்றார். முனைவர் எம். சமுத்திரப் பாண்டியன் தலைமையுரை ஆற்றினார். திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் பி. ஜெயகிருஷ்ணன், உடுமலைப்பேட்டை அரசுக் கல்லூரி முன்னாள் தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் சி.பி. கோபால், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன எண்பேராய உறுப்பினர் கா. வேழவேந்தன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். பாலக்காடு அரசு விக்டோரியா கல்லூரி மலையாளத் துறைத் தலைவர் முனைவர் சுலேகா, சித்தூர் அரசுக் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் ஜி. முத்துலட்சுமி, சித்தூர் அரசுக் கல்லூரி உதவிப் பேராசிரியர்கள் திரு பி. முருகன், திரு கே. இரவி ஆகியோர் வாழ்த்திப் பேசினர். பாலக்காடு அரசு விக்டோரியா கல்லூரி முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் கே.ஏ. இராஜாராம் கருத்தரங்கம் பற்றிய கருத்துரை வழங்கினார். இறுதியாகச் சித்தூர் அரசுக் கல்லூரித் தமிழ் உதவிப் பேராசிரியர் முனைவர் ஏ. ஹெப்சி ரோஸ் மேரி நன்றி கூறினார்.

கருத்தரங்கு 14

## தமிழ் வரலாற்றிலக்கணம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் மதுரைக் காமராசர் பல்கலைக்கழக மொழியியல் துறையும் இணைந்து 03.03.2010 முதல் 05.03.2010 வரை 'தமிழ் வரலாற்றிலக்கணம்' என்னும் பொருளில் கருத்தரங்கினை நடத்தின. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் முனைவர் க. உமாராஜும் மதுரைக் காமராசர் பல்கலைக்கழக மொழியியல் துறைத் தலைவர் பேராசிரியர் ஏ. ஆதித்தனும் ஒருங்கிணைப்பாளர்களாக விளங்கினர்.

2010 மார்ச்சுத் திங்கள் 3ஆம் நாளன்று நடந்த தொடக்க விழாவில் சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவன முன்னாள் இயக்குநர் பேராசிரியர் ச.வே.சுப்பிரமணியன் தொடக்கவுரை ஆற்றினார். மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தர் இரா. கற்பகக் குமரவேல் தலைமை உரை நிகழ்த்தினார். கருத்தரங்க நெறியாளரும் தமிழியல் துறைத் தலைவருமாகிய பேராசிரியர் ஏ. ஆதித்தன் கருத்தரங்கப் பொருளின் நோக்கத்தினை விரித்தார்.





இக்கருத்தரங்கு ஆறு அமர்வுகளைக் கொண்டு சிறப்பாக அமைந்தது. இதில்,

பேராசிரியர் **என். நடராஜப்பிள்ளை**
பேராசிரியர் **அ. சீனிவாசன்**
பேராசிரியர் **இரா. காசிராஜன்**
பேராசிரியர் **க. உமாராஜ்**
பேராசிரியர் **அ. காமாட்சி**
பேராசிரியர் **அ. ஆலீஸ்**
பேராசிரியர் **பெ. மாதையன்**
பேராசிரியர் **தி. முருகரத்தனம்**
பேராசிரியர் **பெ. சுயம்பு**
பேராசிரியர் **தூ. சேதுபாண்டியன்**
பேராசிரியர் **இராம. சுந்தரம்**
பேராசிரியர் **எஸ்.ஏ. பரதராஜ்**
பேராசிரியர் **மீனாட்சி முருகரத்தனம்**
பேராசிரியர் **கணேஷ் அம்பேத்கார்**
பேராசிரியர் **பெர்னாட்ஷா**
பேராசிரியர் **டாக்டர் நசீம்தீன்**
பேராசிரியர் **வ. ஜெயா**
பேராசிரியர் **வே. தயாளன்**
பேராசிரியர் **அஞ்சலி அன்னாபாய்**
பேராசிரியர் **சு. அழகேசன்**
பேராசிரியர் **எ. ரோஸ் மேரி**
பேராசிரியர் **மு. கற்பகம்**
பேராசிரியர் **மைக்கேல் சரோஜினிபாய்**

பேராசிரியர் **ஆ. முனியன்**
பேராசிரியர் **சு. மகாலட்சுமி**
பேராசிரியர் **ஏ. ஆதித்தன்**

ஆகியோர் தங்கள் ஆய்வுக்கட்டுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

2010 மார்ச்சு திங்கள் 5ஆம் நாளன்று நடந்த நிறைவு விழாவில் சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் வ. செயதேவன் தலைமையேற்று உரை நிகழ்த்தினார். அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வு மைய இயக்குநர் ஆ.கோ. நடராசன் நிறைவுரை வழங்கினார்.

கருத்தரங்கு 15

## ச. அகத்தியலிங்கனார் நினைவுத் தேசியக் கருத்தரங்கம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழகமும் இணைந்து 25.3.2010 முதல் 27.03.2010 வரை தொல்காப்பியச் செம்மல் பேராசிரியர் முனைவர் ச.அகத்தியலிங்கனார் நினைவுத் தேசியக் கருத்தரங்கினை நடத்தின.

25.03.2010 அன்று காலை 10.15 மணியளவில் நடந்த தொடக்க விழாவில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் அறிவியல் தமிழ் வளர்ச்சித்துறைப் பேராசிரியர் முனைவர் கு. அண்ணாதுரை வரவேற்புரை வழங்கினார். தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக்குழு உறுப்பினர் முனைவர் எச். சித்திரபுத்திரன் அறிமுக உரை அளித்தார். தமிழக வணிகவரித் துறை அமைச்சர் மாண்புமிகு சி.நா.மீ. உபயதுல்லா நூலைப் பெற்றுக்கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் க.ப. அறவாணன், தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் முனைவர் கி. கருணாகரன், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க.இராமசாமி ஆகியோர் பேராசிரியர் ச. அகத்தியலிங்கனாரின் பணிகுறித்த தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டார்கள்.

பேராசிரியர் **செ.வை. சண்முகம்**
முனைவர் **இராம. சுந்தரம்**
முனைவர் **கி. அரங்கன்**
முனைவர் **சு. இராசாராம்**
முனைவர் **கி. நாச்சிமுத்து**
முனைவர் **ஆ.கோ. நடராசன்**
முனைவர் **க. இராமநாதன்**
முனைவர் **வே.இரா. மாதவன்**

ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். தமிழ்ப் பல்கலைக்கழக இந்திய மொழிகள் பள்ளியின் உதவிப் பேராசிரியர் முனைவர் இரா. முரளிதரன் நன்றிநவின்றார்.

27.3.2010 அன்று பிற்பகல் 3 மணியளவில் நடந்த நிறைவு விழாவில் தமிழ்ப் பல்கலைக்கழக அறிவியல் தமிழ் வளர்ச்சித்துறைப் பேராசிரியர் நே.ஜோசப் வரவேற்புரை வழங்கினார். தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் சா.வி. சரவணன் தலைமையேற்றார். பாரதிதாசன் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் முனைவர் ச. முத்துக்குமரன் சான்றிதழ்களை வழங்கிச் சிறப்புரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் இரெ.குமரன் நன்றிகூறினார். தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழக இந்திய மொழிகள் பள்ளியின் துறைத் தலைவர் பேராசிரியர் வே.சா. அருள்ராசு இக்கருத்தரங்க ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.


## மருங்கூரில் தமிழி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள்

கடலூர் மாவட்டம் வடலூர் அருகே உள்ள மருங்கூரில் தமிழி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட மூன்று முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

புதுவைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கா. இராஜன், புதுச்சேரிப் பிரெஞ்சிந்திய நிறுவன இந்தியவியல் துறைத் தலைவர் திரு ஒய். சுப்பராயலு, தமிழ்நாடு தொல்லியல் துறையின் ஓய்வுபெற்ற கல்வெட்டாய்வாளர் வி. வேதாச்சலம் ஆகியோர் இத் தாழிகள் கி.மு. முதலாம் நூற்றாண்டைச் சார்ந்தவை எனக் குறிப்பிட்டனர்.

முதலாவது பானை ஓட்டில் 'அதியகன்' என்னும் பெயர் தமிழி எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது பானை ஓட்டில் நான்கு எழுத்துக்கள் உள்ளன. முதல் இரண்டு எழுத்துக்கள் 'அம்' என்று தமிழியிலும் பின்னிரண்டு எழுத்துக்கள் சிந்து சமவெளி எழுத்துக்களைப் போன்று குறியீடுகளாகவும் காணப்படுகின்றன. மூன்றாவது பானை ஓட்டில் 'மலஅ' என்னும் மூன்று தமிழி எழுத்துக்கள் காணப்படுகின்றன.





**நன்றி: இந்து நாளிதழ், 05.03.2010.**
http://www.thehindu.com/2010/03/05/stories/2010030554922200.htm

CICTArchives



கருத்தரங்கு 16

# இலக்கண இலக்கியப் படைப்புக்களில் பழந்தமிழ்ப் புறப்பொருள் வளர்ச்சியின் வரலாறு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் மதுரை ஞாலத்தமிழ்ப் பண்பாட்டுக் கழகமும் இணைந்து 'இலக்கண இலக்கியப் படைப்புக்களில் பழந்தமிழ்ப் புறப்பொருள் வளர்ச்சியின் வரலாறு' என்னும் பொருளில் 26.03.2010 முதல் 28.03.2010 முடிய குற்றாலம் ஸ்ரீ பராசக்தி பெண்கள் கல்லூரியில் தேசியக் கருத்தரங்கத்தை நடத்தின. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் இரா. கோதண்டராமன், மதுரை ஞாலத்தமிழ்ப் பண்பாட்டுக் கழகப் பொதுச்செயலாளர் பேராசிரியர் தி. முருகரத்தனம் ஆகிய இரண்டு அறிஞர்களும் ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்பட்டார்கள்.

கருத்தரங்கத் தொடக்க விழா 26.03.2010 அன்று சுழற்கழக அரங்கில் நடைபெற்றது. பேராசிரியர் தி. முருகரத்தனம் வரவேற்புரை வழங்கினார். தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி தலைமை ஏற்று உரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் ப. மருதநாயகம் அறிமுக உரை நிகழ்த்தினார். திருநெல்வேலி இந்து அறநிலைய ஆட்சித்துறை நிர்வாகப் பிரிவின் இணை ஆணையரும் ஸ்ரீபராசக்தி கல்லூரியின் செயலாளருமான திரு எம். புகழேந்திரன் கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார். ஸ்ரீபராசக்தி பெண்கள் கல்லூரி முதல்வர் முனைவர் சி. இராஜேஸ்வரி வாழ்த்துரை வழங்கினார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவன மேனாள் இயக்குநர் பேராசிரியர் ச.வே.சுப்பிரமணியன் சிறப்புரை நிகழ்த்தினார். ஸ்ரீபராசக்தி பெண்கள் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர் எம்.சுப்புலட்சுமி நன்றி நவின்றார்.

கீழ்க்காணும் ஆய்வறிஞர்கள் தங்கள் ஆய்வுக் கட்டுரைகளை வழங்கிக் கருத்தரங்கினைச் சிறப்பித்தார்கள்.

பேராசிரியர் **இ. சுந்தரமூர்த்தி**
முனைவர் **சிலம்பொலி சு. செல்லப்பன்**
பேராசிரியர் **ப. மருதநாயகம்**
பேராசிரியர் **இரா. கோதண்டராமன்**
பேராசிரியர் **கா. செல்லப்பன்**
பேராசிரியர் **ச.வே. சுப்பிரமணியன்**
பேராசிரியர் **என்.கே. மங்களமுருகேசன்**
பேராசிரியர் **தி. முருகரத்தனம்**
பேராசிரியர் **அ. இராமசாமி**
பேராசிரியர் **க. நெடுஞ்செழியன்**
பேராசிரியர் **அன்னி தாமசு**
பேராசிரியர் **பொ.நா. கமலா**
பேராசிரியர் **எம். இ. மாணிக்கவாசகம்**
பேராசிரியர் **இரா. காசிராஜன்**
பேராசிரியர் **அ. பிச்சை**
முனைவர் **எம். சுப்புலட்சுமி**
பேராசிரியர் **செ. சாராதாம்பாள்**
முனைவர் **சிவகாமி**
முனைவர் **ச. குருசாமி**
பேராசிரியர் **க. பஞ்சாங்கம்**
முனைவர் **ப. குழந்தைசாமி**
முனைவர் **அ. பரிமளகாந்தம்**
முனைவர் **அ. பூலோகரம்பை**
முனைவர் **சிவ. மாதவன்**
முனைவர் **சு. அழகேசன்**
முனைவர் **ஞா. ஸ்டீபன்**
முனைவர் **எம். வேலம்மாள்**
முனைவர் **எஸ். பார்வதி**
பேராசிரியர் **அ. சீனிவாசன்**
பேராசிரியர் **கு. சிவமணி**

28.03.2010 அன்று மாலை 4 மணிக்கு ஸ்ரீபராசக்தி பெண்கள் கல்லூரியில் நிறைவு விழா நடைபெற்றது. முனைவர் இ. இராஜேஸ்வரி தலைமை தாங்கினார். முனைவர் எம். சுப்புலட்சுமி வரவேற்புரை வழங்கினார். ஸ்ரீபராசக்தி பெண்கள் கல்லூரி முன்னாள் முதல்வர் முனைவர் வ. சசிகலா சிறப்புரை ஆற்றிக் கருத்தரங்கில் பங்கேற்றவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கினார். இறுதியாகப் பேராசிரியர் தி.முருகரத்தனம் நன்றி நவின்றார்.






CICTArchives



கருத்தரங்கு 17

# பண்டைத் தமிழரின் நீர் மேலாண்மை

பண்டைத் தமிழரின் நீர் மேலாண்மை என்னும் பொருண்மையிலான கருத்தரங்கம் 23.03.2010ஆம் நாள் காலை 10.30 மணிக்குத் தாஜ் கொரமண்டல் அரங்கில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் தலைவரும் மாண்புமிகு தமிழக முதல்வருமான கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

தம் உரையில் பண்டைய தமிழ் இலக்கியங்களில் நீர் மேலாண்மை குறித்த பல்வேறு செய்திகள் இடம் பெற்றுள்ளமையை இலக்கியச் சான்றுகளுடன் மாண்புமிகு தமிழக முதல்வர் சிறப்புறக் குறிப்பிட்டார்.

விழாவிற்குத் தலைமை வகித்த பேராசிரியர் வா.செ. குழந்தைசாமி நீர் மேலாண்மை தொடர்பான பல்வேறு தொழில்நுட்பக் கூறுகளை எடுத்துரைத்தார்.

தலைமையுரையினைத் தொடர்ந்து வாழ்த்துரை வழங்கிய காவிரித் தொழில்நுட்பக் குழுமத்தின் தலைவர் பேராசிரியர் அ. மோகனகிருஷ்ணன், தொல்லியல் துறை மேனாள் இயக்குநர் திரு நடன. காசிநாதன், முனைவர் குமரி அனந்தன் ஆகியோர் பண்டைத் தமிழர்கள் நீர் மேலாண்மையில் திறம்பட விளங்கிய தன்மைகளைச் சங்க இலக்கியம் மூலமாகவும் கல்வெட்டு ஆதாரங்கள் வாயிலாகவும் விளக்கினர்.

தொடக்க விழாவில் நிறுவன இயக்குநர் பேராசிரியர் ச.மோகன் வரவேற்புரையும் பொறுப்பு அலுவலர் க. இராமசாமி நன்றியுரையும் வழங்கினர்.

கருத்தரங்க அமர்வுகள் 23.03.2010 பிற்பகல் முதல் சென்னைப் பல்கலைக் கழகப் பவள விழாக் கலையரங்கில் நடைபெற்றன. பண்டைத் தமிழரின் நீர் மேலாண்மை குறித்துப் பெறப்பட்ட 98 கட்டுரைகளில் துறைசார் வல்லுநர் குழுவால் 28 கட்டுரைகள் மட்டும் தேர்வு செய்யப்பட்டு அவற்றில் 26 கட்டுரைகள் ஒன்பது அமர்வுகளில் அறிஞர்களால் வழங்கப்பெற்றன. கட்டுரையாளர்கள் தவிர 60 நோக்கர்களும் அழைப்பாளர்களும் அமர்வுகளில் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

நீர்ப்பாசனம், நீர் வளம் - திட்டமிடுதல், தொழில்நுட்பக் கூறுகள், நீர்வளம், இலக்கியச் சான்றுகள், பொது, நீர்நிலைகள், வட்டார வழக்காற்றியலில் நீர் மேலாண்மை, வட்டார நீர் மேலாண்மை ஆகிய தலைப்புகளில் நடந்த அமர்வுகளுக்குப் பின்வரும் வல்லுநர்கள் தலைமை வகித்தனர்.

முனைவர் **மு. கார்மேகம்**
முனைவர் **ந. வரதராஜ்**
முனைவர் **அ. இளங்கோவன்**
பேராசிரியர் **ச. மோகன்**
முனைவர் **சா. கிருட்டிணமூர்த்தி**
பொறியாளர் **வெ. பாலுசாமி**
முனைவர் **க. சங்கரன்**
மரு. **செ. நெ. தெய்வநாயகம்**
முனைவர் **கு. வேணுகோபால்**

அமர்வுகளில் கட்டுரைகள் வழங்கியோர் வருமாறு:

முனைவர் **உலோ. செந்தமிழ்க்கோதை**
பொறியாளர் **கெ. இராமலிங்கம்**
பேராசிரியர் **கா. ராஜன்**
முனைவர் **கு. கதிரேசன்**
பொறியாளர் **இரா. வெங்கடசுப்பு**
முனைவர் **கி.இரா. சங்கரன்**
பொறியாளர் **ஜே.ஏ.எல். கணேசன்**
முனைவர் **மூ. கருணாநிதி**
பொறியாளர் **ஆர். ஜெயராமன்**
முனைவர் **ச. சிவகாமி**
பேராசிரியர் **கா. காளிதாஸ்**
திரு **ஞா. குருசாமி**
பொறியாளர் **க.அ. மாரியப்பன்**
திரு **ம. சோ. விக்டர்**
திரு **சி. சிதம்பரம்**
திரு **மா. சந்திரமூர்த்தி**
முனைவர் **கா.சத்தியபாமா**





பொறியாளர் **அ. வீரப்பன்**
முனைவர் **அ. ஆரோக்கியதாசு**
முனைவர் **சு. மாதவன்**
திரு **நடன. காசிநாதன்**
முனைவர் **ஆ. சீனிவாசன்**
முனைவர் **மு. பாண்டி**
திரு **எஸ். பாலசுப்பிரமணியன்**
முனைவர் **இரா. நிரஞ்சனாதேவி**

சங்க இலக்கியங்களின் மூலம் நாம் அறியக்கூடிய நீர் மேலாண்மை, வேளாண்மை குறித்த தரவுகள் பலவும் கட்டுரைகளில் பதிவு செய்யப்பட்டன. ஏரிகள் இயற்கையாக அமைந்திருந்தமை, மழைக்காலங்களில் கால்வாய்களின் மூலமாக நீர்வரத்து ஏற்பட்டமை, ஆறுகளின் பயன்பாடு, அவற்றின்மீது அணை கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட அறிவியல் தொழில்நுட்பக் கூறுகள், ஏரிகளைப் பராமரிக்க மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள், பராமரிப்புப் பணிகளுக்கு நிலங்கள் ஒதுக்கப்பட்டமை, நீரின் இருப்பிற்குத் தகுந்தவாறு மதகுகளைப் பயன்படுத்தும் வழிமுறைகள், நீரைப் பங்கிடுதலில் பின்பற்றப்பட்ட கட்டுப்பாடுகள், கிணறுகள் மற்றும் குளங்கள் பற்றிய பல்வேறு செய்திகள் வாசிக்கப்பட்டன. பொதுவாகத் தமிழர்களின் நீர்வளங்கள் மட்டுமின்றி ஒவ்வொரு தேசிய இனத்திற்குமான பண்டைய நீர்வளங்களும் பல்வகையிலும் அழிந்து கொண்டிருப்பதை எச்சரிக்கை உணர்வுடன் இந்தக் கருத்தரங்கக் கட்டுரைகள் சுட்டிக்காட்டின.

பண்டைய தமிழரின் நீர் மேலாண்மை குறித்த இக்கருத்தரங்கில் பல்துறை வல்லுநர்களும் கலந்துகொண்டு கட்டுரைகள் மீதான விவாதங்களில் ஆர்வமுடன் பங்கேற்றுச் சமூகத்திற்குத் தேவையான பயனுள்ள கருத்துக்களைப் பகிர்ந்துகொண்ட பாங்கு குறிப்பிடத்தக்க வகையில் அமைந்தது. நீரின் இன்றியமையாமை, நீரைப் பாதுகாத்துச் சேமிக்க வேண்டிய சமூகப்பொறுப்பு, வருங்காலத்திற்கான திட்டமிடல் ஆகியன பற்றி ஒவ்வோர் அமர்விலும் ஆழமான விவாதங்கள் இடம் பெற்றன.

கருத்தரங்க நிறைவுவிழா 30.03.2010 அன்று மாலை 4.00 மணிக்கு நடைபெற்றது. கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் அரிமளம் சு. பத்மநாபன் வரவேற்புரை வழங்கினார். 'சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவரி' என்று கம்பன் சொன்ன வரியைச் சுட்டிக்காட்டித் தமிழ்ப் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தரும் செம்மொழி நிறுவன முதுநிலை ஆய்வறிஞருமான பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி அவர்கள் தலைமை உரை வழங்கினார். மேலும், இன்றைய ஆற்றின் நீரோட்டமின்மைக்குக் காரணம் மனிதன் இயற்கையிலிருந்து விலகியதே எனத் தம் உரையில் குறிப்பிட்டார். 'நதியின் பிழையன்று நறும்புனலின்மை, அது நம் மதியின்பிழை' என நீர்வளம் குன்றியதற்கான காரணங்களை எடுத்துரைத்தார். நிறைவுப் பேருரையாற்றிய தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் கல்யாணி அன்புச்செல்வன் நிறுவனத்தின் இம்முயற்சியினை வெகுவாகப் பாராட்டியதுடன் காலந்தோறும் தமிழ் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட நீர் மேலாண்மைப் பணிகளைத் தக்க சான்றுகளுடன் விவரித்து, இனி மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்தும் விளக்கமாக எடுத்துரைத்தார். பங்கேற்பாளர்களின் சார்பாகத் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய மேலாளர் திருமதி ஞா. அன்னி ஜோஸ்பின், முனைவர் ம. கிருஷ்ணவேணி ஆகியோர் மூன்று நாள் நிகழ்வுகள் குறித்துக் கருத்துரை வழங்கினர். நிறுவனத்தின் முதன்மை ஆய்வு வளமையர் முனைவர் க. நர்மதா தொகுப்புரை வழங்கினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி அவர்களின் நன்றியுரையுடன் கருத்தரங்கு இனிதே நிறைவுற்றது.

## தமிழ்ச் செய்தி மடல்கள்




செய்தி மடல் 1
தி.ஆ. 2037 மாசி - 2039 சித்திரை




செய்தி மடல் 2
தி.ஆ. 2039 சித்திரை - மார்கழி




செய்தி மடல் 3
தி.ஆ. 2040 தை - ஆனி




செய்தி மடல் 4
தி.ஆ. 2040 ஆடி - மார்கழி

CICTArchives



கருத்தரங்கு 18

# திராவிட இலக்கிய ஒப்பாய்வு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் குப்பம் திராவிடப் பல்கலைக் கழகத் தமிழ் மற்றும் மொழிபெயர்ப்புத் துறையும் இணைந்து கருத்தரங்கை 31-03-2010 முதல் 03-04-2010 வரை நான்கு நாட்கள் பல்கலைக் கழக வளாகத்தில் நடத்தின. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் கு. சிவமணியும் திராவிடப் பல்கலைக் கழகத் தமிழ் மற்றும் மொழிபெயர்ப்புத் துறைத் தலைவர் முனைவர் ஆர். விவேகானந்தகோபாலும் ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்பட்டார்கள்.

31-03-2010 அன்று காலை 11 மணியளவில் கருத்தரங்கத் தொடக்கவிழா எமனோ இல்லத்தில் நடைபெற்றது. முனைவர் ஆர். விவேகானந்த கோபால் அனைவரையும் வரவேற்றார். பேராசிரியர் கு. சிவமணி தன் சிறப்புரையில் தென்னிந்தியாவில் வாழும் மக்களிடையே காணப்படும் மொழி, பண்பாட்டுத் தொடர்புகளை வெளிக்கொணர்வதே இக்கருத்தரங்கத்தின் நோக்கம் எனத் தெரிவித்தார். திராவிடப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என். கடப்பா இரமனையா தன் தலைமையுரையில் சங்ககாலச் சமூகத்தின் மொழி, பண்பாடு ஆகியவற்றின் உயர்வை எடுத்து இயம்பினார். மேலும் சங்ககால மரபுத் தொடர்ச்சியை இக்காலத் தலைமுறையினர் அனைவரும் கட்டாயம் படித்துப் புரிந்துகொண்டு எதிர்வரும் தலைமுறைக்கு அளிக்க வேண்டும் என்று கூறினார். செம்மொழித் தமிழாய்வு எண்பேராய உறுப்பினர் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் கருத்தரங்கைத் தொடங்கி வைத்து உரையாற்றுகையில் செம்மொழி நிறுவனம் தமிழ் மொழியைக் காப்பதற்கும் வளர்ப்பதற்கும் எடுத்துவரும் பல்வேறு செயல்பாடுகளைப் பட்டியலிட்டார். திராவிடப் பல்கலைக் கழகப் பதிவாளர் முனைவர் கே. இராமதாஸ், கல்வி உறவியல் புலத்தலைவர் பேராசிரியர் பி. சுப்பாச்சாரி, திராவிட இலக்கிய ஒப்பியல் மற்றும் மொழிபெயர்ப்புத் துறைப் புலத்தலைவர் பேராசிரியர் ஜி. உலோகநாத ரெட்டி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இறுதியாகத் திராவிடப் பல்கலைக் கழகத் தமிழ் மற்றும் மொழிபெயர்ப்புத் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் ஏ. பூலோகரம்பை நன்றி நல்கினார்.

இந்தக் கருத்தரங்கில் பின்வரும் அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

முனைவர் **சி. இராமசாமி**
முனைவர் **வா.மு. சேதுராமன்**
முனைவர் **டி.எஸ். கிரிபிரகாஷ்**
முனைவர் **எம். தட்சிணாமூர்த்தி**
முனைவர் **ஜா. மனுவேல்**
முனைவர் **பி. முனியசாமி**
முனைவர் **பி.எஸ். சிவக்குமார்**
முனைவர் **ஜெயவாணிஸ்ரீ**
முனைவர் **வி. பசவராஜு**
முனைவர் **எஸ்.எஸ். செல்வம்**
முனைவர் **அ. பூலோகரம்பை**
முனைவர் **ஆர். விவேகானந்த கோபால்**
பேராசிரியர் **உள்ளூர் பரமேஸ்வரன்**
பேராசிரியர் **கே. ஏ. இராஜாராம்**
முனைவர் **சி.எச். சாவித்திரி**
முனைவர் **எம். நயினார்**
முனைவர் **அ. பரிமளகாந்தம்**
முனைவர் **கே. வெற்றிவேல்**
முனைவர் **எஸ். அருள்மொழி**
செல்வி **எஸ். இராதா**
செல்வி **மு. வனிதா**
செல்வி **ஜி. இந்துப்பிரியா**
திரு **ஜி. மாரியப்பன்**
திரு **எம்.சி. கேசவமூர்த்தி**
திரு **பி.ஆர்.எம். சுப்பிரமணி**

03-04-2010 அன்று மாலை 3 மணியளவில் திராவிடப் பல்கலைக் கழக எமனோ இல்லத்தில் நடைபெற்ற நிறைவு விழாவில் துணைவேந்தர் என். கடப்பா இரமனையா தலைமை வகித்தார். திருப்பதி வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பி. சுப்பாச்சாரி நிறைவுரை ஆற்றினார். திரு கே. இராமதாஸ், பேராசிரியர் ஜி. உலோகநாத ரெட்டி ஆகியோர் வாழ்த்திப் பேசினர். பேராசிரியர் கு. சிவமணி கருத்தரங்கைப் பற்றிய விரிவான மதிப்புரை வழங்கினார். பல்கலைக் கழகத்திலிருந்தும் பிற நிறுவனங்களிலிருந்தும் வந்து கலந்துகொண்ட மாணவர்கள் தங்களின் கருத்துரைகளை வழங்கினர். இறுதியாகத் திராவிடப் பல்கலைக் கழகத் தமிழ் மற்றும் மொழிபெயர்ப்புத் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் டி. விஷ்ணுகுமாரன் நன்றி நவின்றார்.



கருத்தரங்கு 19

# தமிழ் மருத்துவத்தின் தொன்மையும் தனித்தன்மையும்




தமிழ் மருத்துவத்தின் தொன்மையும் தனித்தன்மையும் என்னும் பொருண்மையிலான கருத்தரங்கம் 02-04-2010 அன்று காலை 10 மணியளவில் சென்னைப் பல்கலைக் கழகப் பவளவிழாக் கலையரங்கில் மாண்புமிகு தமிழகத் துணைமுதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. தம் உரையில் சங்க இலக்கியங்களில் விரவி இருக்கும் தமிழ் மருத்துவம் தொடர்பான பல்வேறு செய்திகளையும் தக்க சான்றுகளுடன் அவருக்கே உரிய முறையில் ஆழமாகவும் நயமாகவும் எடுத்துரைத்தார்.

விழாவிற்குத் தலைமை வகித்த தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ம. இராசேந்திரன் மேற்குத் தொடர்ச்சி மலையின் தொன்மைச் சிறப்பினையும் அம்மலையில் நிறைந்துள்ள செடிகொடிகளின் மருத்துவக் குணங்களையும் எடுத்துரைத்த பாங்கு தமிழ் மருத்துவத்தின் தொன்மையைப் பறைசாற்றுவதாக அமைந்தது.

தலைமையுரையினைத் தொடர்ந்து வாழ்த்துரை வழங்கிய டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் மயில்வாகனன் நடராசன் கருத்தரங்கை நடத்தும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் முயற்சியைப் பாராட்டினார்.

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சபாபதி மோகன் தம் வாழ்த்துரையில் குறிஞ்சிப்பாட்டில் இடம்பெற்றுள்ள 99 வகை மலர்களையும் அவற்றின் மருத்துவப் பெயர்களையும் குறிப்பிட்டது ஆய்வாளர்களுக்குப் பயனுள்ள செய்தியாக அமைந்திருந்தது.

ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவப் பல்கலைக் கழக இதய அறுவை சிகிச்சை மையத்தின் இயக்குநர் மருத்துவர் தணிகாசலம் தமிழ் மருத்துவமும் ஆங்கில மருத்துவமும் இணைந்து செயல்பட்டால் சமூகம் பயன்பெறுவதுடன் தமிழ் மருத்துவமும் மென்மேலும் தழைத்தோங்கும் என்ற கருத்தினை வலியுறுத்தினார்.

நோக்கவுரை வழங்கிய நடுவண் அரசின் ஆயுர்வேத, சித்த மருத்துவ ஆராய்ச்சிக் குழுவின் தலைவர் பேராசிரியர் செயப்பிரகாசு நாராயணன் தமிழ் மருத்துவத்தின் தொன்மை குறித்து உரையாற்றினார்.

தொடக்கவிழாவில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இயக்குநர் பேராசிரியர் ச. மோகன் வரவேற்புரையும் பொறுப்பு அலுவலர் க. இராமசாமி நன்றியுரையும் வழங்கினர்.

கருத்தரங்க அமர்வுகள் 02-04-2010 பிற்பகல் முதல் தொடங்கின. தமிழ் மருத்துவத்தின் தொன்மையும் தனித்தன்மையும் குறித்துப் பெறப்பட்ட 124 கட்டுரைகளில் துறைசார் வல்லுநர் குழுவால் 41 கட்டுரைகள் மட்டும் தேர்வு செய்யப்பட்டு அவற்றில் 37 கட்டுரைகள் ஒன்பது அமர்வுகளில் அறிஞர்களால் வழங்கப்பெற்றன. கட்டுரையாளர்கள் தவிர 80 நோக்கர்களும் அழைப்பாளர்களும் அமர்வுகளில் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

தமிழ் மருத்துவத்தில் வேதியியல், நீடு வாழும் நெறி, வர்மம், பொது, உணவே மருந்து, நோய்க்கணிப்பு முறை, மூலிகை மருத்துவம், மருந்து, மருத்துவ வரலாறு ஆகிய தலைப்புகளில் நடந்த அமர்வுகளுக்குப் பின்வரும் வல்லுநர்கள் தலைமை வகித்தனர்.

மருத்துவர் **த. ஆனந்தன்**
மருத்துவர் **லோகமணியன்**
முனைவர் **கோ. அன்புகணபதி**
மருத்துவர் **சொர்ணமாரியம்மாள்**
முனைவர் **ஆனைவாரி ஆனந்தன்**
மருத்துவர் **ச. அரங்கராசன்**
மருத்துவர் **இராமலிங்கம்**
மருத்துவர் **செ.நெ. தெய்வநாயகம்**
முனைவர் **எஸ். பத்மநாபன்**

அமர்வுகளில் கட்டுரை வழங்கியோர் வருமாறு:

மருத்துவர் **செ. அய்யாசாமி**
திரு **இரா. சதீஷ்**
மருத்துவர் **க. அன்பரசு**
மருத்துவர் **ஆர்.எஸ். இராமசுவாமி**
மருத்துவர் **தி. லெட்சுமிகாந்தம்**
மருத்துவர் **மு. தணிகாசலம்**
மருத்துவர் **எஸ். கபீர்தாஸ்**
திரு **ஆ. இராஜேஸ்வரன்**
மருத்துவர் **சு.அ. இராசரெத்தின குமார்**
திரு **கி.ரெ. சதீஷ்பாபு**
மருத்துவர் **இரா. பவுன் துரை**
மருத்துவர் **கு. இராஜலட்சுமி**
மருத்துவர் **மா. இராஜசேகரன்**
மருத்துவர் **இரா.இரா. சக்திபாலா**
மருத்துவர் **லதாராணி**

CICTArchives



திரு **சை. ம. வாகிதாபீ**
முனைவர் **இரத்தின. புகழேந்தி**
மருத்துவர் **இரா. உமாமகேஸ்வரி**
முனைவர் **வா. ஹசீனாபேகம்**
முனைவர் **சு. தில்லைவனம்**
மருத்துவர் **இர. இரத்தினமாலா**
முனைவர் **மு. பாண்டி**
மருத்துவர் **செ. இளஞ்சேகரன்**
மருத்துவர் **ஜி.எஸ். சத்யா**
மருத்துவர் **ப. செல்வ சண்முகம்**
மருத்துவர் **கரு. கார்த்திகேயன்**
மருத்துவர் **கோ. சுபாஸ்சந்திரன்**
மருத்துவர் **கே. எஸ். உமா**
முனைவர் **அ. ஆரோக்கியதாசு**
மருத்துவர் **இ.மு. மணிகண்டன்**
முனைவர் **ச. பாலமுருகன்**
மருத்துவர் **செ. சுரேஷ்**
முனைவர் **வே.இரா. மாதவன்**
மருத்துவர் **தெ. வேலாயுதம்**
முனைவர் **ஆனைவாரி ஆனந்தன்**
முனைவர் **இரா. நிரஞ்சனா தேவி**
முனைவர் **இர. வாசுதேவன்**
திரு **பெ. பாலசுப்பிரமணியன்**

நீடு வாழும் நெறி என்னும் அமர்வில் நரை திரை மூப்பு நெருங்க விடாமல் நீடு வாழ்வதற்கு அட்டாங்க யோகம் சிறந்தது என்றும் மனிதனுக்கு நல்ல எண்ணங்களும் நல்ல செயல்களும்தான் காயகல்பம் என்றும் ஒழுக்கமே நீடு வாழ்வதற்கு உதவக்கூடிய நெறியென்றும் பல்வேறு கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டன.

தொடுவர்மத்தினால் நோயைக் குணப்படுத்த முடியும் என்பதும் வர்மப் புள்ளிகள் தூண்டப்படுவதன் மூலமும் நோயைக் குணப்படுத்தலாம் என்பதும் 2007இல் தண்டக வாதம் ஏற்பட்ட நோயாளிகளைக் குணப்படுத்திய செய்தியும் வர்மம் பற்றிய அமர்வில் விளக்கப்பட்டன.

வாதம், பித்தம், கபம் மிகுந்தாலும் நோய் வரும் என்பதும் உணவின் சிறப்பு பற்றியும் அவை உண்ணப்பட வேண்டிய முறை பற்றியும் உணவே மருந்து என்ற அமர்வில் விவாதிக்கப்பட்டன. சித்த மருத்துவர்கள் மக்களுக்கு அவரவரின் உடல் நிலைக்கேற்பப் புலால் உணவு உண்பதற்குப் பரிந்துரை செய்தாலும் மாட்டிறைச்சியினைத் தவிர்க்க வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது.

நாக்கின் தன்மை, ஒலிப்பு, நெய்குறி ஆகியவற்றின் வழி நோயினைக் கணித்தல், பிணியை அறியும் எட்டு வகைகள், நாடி பார்க்கும் முறைகள் ஆகியன குறித்து நோய்க் கணிப்பு முறையில் விவாதிக்கப்பட்டன.

மூலிகைகளின் சிறப்பு, மருத்துவத்தின் பயன், தமிழ் மருத்துவத்தின் தொன்மை வரலாறு என்பன குறித்த விவாதங்களும் கருத்தரங்கில் நிகழ்ந்தன.

ஒவ்வொரு கட்டுரையின் இறுதியிலும் ஆழமான, பயனுள்ள விவாதங்கள் இடம்பெற்றன. பரம்பரை மருத்துவர்கள், மருத்துவ வல்லுநர்கள், மருத்துவப் பட்ட மேற்படிப்பு மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் என்று பலரும் விவாதங்களில் பங்கேற்றனர். தமிழ் மருத்துவம் மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதே கலந்துரையாடலின் ஒட்டுமொத்தக் கருத்தாக இருந்தது.

பரம்பரை மருத்துவர்களின் பட்டறிவினைத் தமிழ் மருத்துவ உலகம் பகிர்ந்துகொள்ளவும் வெவ்வேறு தளங்களில் இயங்கிக் கொண்டிருக்கும் மருத்துவர்கள் பலரையும் ஒரே குடையின் கீழ்க் கொண்டுவரவும் இக்கருத்தரங்கம் பயன்பட்டது.

04-04-2010 அன்று மாலை நடந்த நிறைவு விழாவில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இயக்குநர் பேராசிரியர் ச. மோகன் வரவேற்புரை ஆற்றினார். மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் நிறைவுப் பேருரையாற்றினார். தம்முடைய உரையில் தமிழ்நாட்டின் மருத்துவ முறைகள், அவற்றின் தொன்மை, பரம்பரை மருத்துவர்களின் நோய்க்கணிப்பு முறைகள், மருந்து தயாரிக்கும் முறைகள் எனப் பல்வேறு கூறுகளையும் சிறப்புற விளக்கினார்.

நடுவண் சித்த மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் முன்னை இயக்குநர் ஜி. வேலுசாமி தலைமை உரையாற்றினார். தேசிய சித்த மருத்துவ நிறுவன இயக்குநர் பேராசிரியர் கு. மாணிக்கவாசகம், போகர் பழநி ஆதீனம் சிவானந்த புலிப்பாணி பாத்திர அடிகளார், தேசிய சித்த மருந்தியல் குழு உறுப்பினர் மருத்துவர் கு. சிவராமன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன முதன்மை ஆய்வு வளமையர் முனைவர் க. நர்மதா மூன்று நாள் நிகழ்வுகள் பற்றித் தொகுப்புரை வழங்கினார். ஆய்வறிஞர் பேராசிரியர் அரிமளம் சு. பத்மநாபன் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றினார். பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி அவர்களின் நன்றியுரையுடன் கருத்தரங்கம் இனிதே நிறைவு பெற்றது.



CICTArchives

# தொல்காப்பிய ஆராய்ச்சி வரலாறு

பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார்



## தொல்காப்பியப் பிரிவுகளும் உரைகளும்

தொல்காப்பியம் மூன்று பெரும் பிரிவுகளாக அமைந்துள்ளது. முதலாவது எழுத்ததிகாரம். இதனைப் பொதுவாகப் பேச்சொலி இயல் என்று கூறலாம். இரண்டாவது சொல்லதிகாரம். இது சொல்லுறுப்பு இயலும் சொற்றொடர் இயலுமாக அமைந்துள்ளது. மூன்றாவது பொருளதிகாரம். செய்யுள் அல்லது இலக்கியத்தில் வரும் பொருளைப்பற்றிக் கூறுவது இது; இலக்கிய இயலும் செய்யுள் இயலும் கொண்டது. பொதுவாகப் பலரும் ஏறக்குறைய மாறாது இருக்கும் இலக்கண அமைப்பை விளக்கும் சொல்லதிகாரத்தையே படித்து வந்திருக்கிறார்கள். பலரும் பல உரைகள் எழுதியுள்ளார்கள்.

## உரையாசிரியர்கள் போக்கு

இளம்பூரணருக்குப் பின்னும் பல உரையாசிரியர்கள் சொல்லதிகாரத்திற்கு உரை கண்டுள்ளார்கள். அவர்களுடைய கண்ணுக்கு எந்தக் காலத் தமிழ் அமைப்பும் தொல்காப்பிய வழக்கிற்குள்ளே அடங்கிவிடுவதாகவே தொல்காப்பியம் காட்சி அளிக்கிறது. சங்க காலத்திற்கு உள்ளாகவே தமிழ் அமைப்பு தொல்காப்பியர் காலத்திலிருந்து சிறிது மாறுதல் அடைந்துதான் இருந்தது. பிற்கால மாறுதல்களைத் தொல்காப்பியர் ''கடிசொல் இல்லை காலத்துப் படினே'' என்று கூறியதற்கு ஏற்பக் காலத்தின் போக்கால் பின் எழுந்த மாறுதல்கள் என்று உரையாசிரியர்கள் கொள்கின்றார்கள். என்றாலும் சங்ககால வழக்கென்று அவர்கள் கருதியவற்றைத் தொல்காப்பியர் வழக்கிற்கு உள்ளாகவே அடக்கிவிடுவதற்கு மிகமிக முயன்றார் என்றும் ஒருவாறு ஆராய்ந்து முடிவுசெய்ய இடம் உண்டு. தமிழ்மொழியின் வரலாற்றை எழுதுவதற்கு இந்த முறையில் இந்த உரையாசிரியர்கள் மிகப்பெரிதும் உதவுகிறார்கள். இங்கே கூறிவரும் முடிவுகளை விளக்க இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் குற்றியலுகரத்தைப்பற்றிக் கூறும் இருவேறு கொள்கைகளை எடுத்துக்காட்டலாம். குற்றியலுகரம் பெரும்பான்மையும் வாக்கிய முடிவிலேயே வரும் என்று கூறும் இளம்பூரணர் கொள்கை பழங்கால மொழியமைப்பை விளக்குவது. சொல்லின் ஈற்றிலும் குற்றியலுகரம் வழங்கும் என்று நச்சினார்க்கினியர் கூறுவது அவர் காலத்திற்கு உள்ளாக எழுந்த மாறுதலைக் குறிக்கிறது. நன்னூலையும் காண்க. இதற்கேற்ற பாடபேதமும் தொல்காப்பியப் பிரதிகளில் ஏற்பட்டுவிட்டது.

## உரையாசிரியர்கள்

இப்போது கிடைக்கும் உரைகளைக் கொண்டு உரையாசிரியர்கள் தங்கள் உரைகளை இன்ன ஆண்டில்தான் எழுதினார்கள் என்று வரையறுக்க முடியாமற்போனாலும் இவர்களை முன்பின்னாகவேனும் அவரவர்கள் வாழ்ந்த காலத்தையொட்டி வரிசைப்படுத்தலாம். இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் என்ற வரிசை இவர்கள் உரையிலே முன்னை உரையாசிரியர்களைக் குறிப்பதாலேயே விளங்கிவிடுகிறது. கல்லாடரும் தெய்வச்சிலையாரும் ஒருவர் பெயரையும் குறிப்பதில்லை. இருந்தாலும் இவர்கள் எழுதிய உரைகள் மேலே கூறிய உரையாசிரியர்களுக்குப் பிந்தியே எழுந்தன எனலாம்.

இன்றுவரை இந்த உரையாசிரியர்களுக்குப் பின்னே தொல்காப்பியத்திற்குத் தொடர்ந்து உரை எழுத யாரும் முயலவில்லை. இக்காலத்தில் எழுந்த விளக்க உரைகள், மொழிபெயர்ப்புகள் முதலியவற்றை இங்கே எடுத்துக் கொள்ளவில்லை. நம் காலத்துக்கு முன்னிருந்த இலக்கணப் புலவர்கள் தம்முடைய தொல்காப்பிய ஆராய்ச்சியின் முடிவுகளை மயிலைநாதர், சங்கரநமச்சிவாயர், இராமானுஜ கவிராயர் முதலியவர்களைப் போலத் தாங்கள் நன்னூலுக்கு எழுதிய உரையிலேயே விளக்கி வந்தார்கள். இதற்குக் காரணம் நன்னூலை எல்லோரும் விரும்பிப் படித்ததுதான். வேறு சிலர், இலக்கண விளக்கம், இலக்கணக்கொத்து, தொன்னூல், முத்துவீரியம், பிரயோக விவேகம் முதலிய புதிய இலக்கண நூல்களை எழுதினார்கள்; இவர்களில் பலர் பழைய மேற்கோள்களுடன் தாங்களே எழுதி அவற்றிற்குத் தாங்கள் எழுதிய உரைகளில் தங்கள் ஆராய்ச்சியை விளக்கினார்கள். சிவஞான சுவாமிகள் தொல்காப்பியப் பாயிரத்திற்கும் தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் உள்ள முதல் சூத்திரத்திற்கும் விரிவுரை எழுதுவதுபோலத் தொடங்கித் தாம் கண்ட ஆராய்ச்சி முடிவுகளை எல்லாம் அங்கே குறித்துவைத்துள்ளார். பதினெட்டாம் நூற்றாண்டின் முடிவிலே இந்திய நாட்டிலே பிறந்தவர்கள் நூல்களை அச்சடிக்கக் கூடாது என்று ஆங்கிலேயர்கள் தடுத்ததால்

CICTArchives



அந்தத் தடை பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் நீங்கும் வரை தமிழ்க் கல்விக்கும், தமிழ் ஆராய்ச்சிக்கும் முட்டுக்கட்டை போட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொல்காப்பியத்திற்குப் பல பதிப்புக்கள் தோன்றின. மகாலிங்கையர், தாமோதரம் பிள்ளை, ஆறுமுக நாவலர், சீனிவாசராகவர் முதலியோர் முயற்சியால் அவை வெளிவந்தன. தொல்காப்பியத்தைப் பற்றிய ஆராய்ச்சிகளும், மொழிபெயர்ப்புகளும், விளக்கங்களும், குறிப்புக்களும், பல பதிப்புக்களும் இருபதாம் நூற்றாண்டிலும் தொடர்ந்து வந்துகொண்டு இருக்கின்றன. அரசஞ்சண்முகனார், இலக்கணச்சாமிகள், மறைமலை அடிகள், பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரிகள், மன்னார்குடி சோமசுந்தரம் பிள்ளை, வெங்கடராஜலு ரெட்டியார், வேங்கடசாமி நாட்டார், சோமசுந்தர பாரதியார், வையாபுரிப் பிள்ளை, மகாவித்துவான் கணேசையர், இரா. இராகவையங்கார், மு. இராகவையங்கார் முதலிய பல ஆராய்ச்சியாளர்கள் இத்தகைய தொண்டில் ஈடுபடக் காண்கிறோம். தொல்காப்பியம், வித்துவான், புலவர் முதலிய பட்டங்களுக்கும் எம்.ஏ., முதலிய கல்வித்தர நிறைவுகளுக்கும் பாடமாக அமைந்துள்ளது. எனவே தொல்காப்பியப் படிப்பு இன்று மிகப் பரவியிருக்கின்றது என்றே கூறவேண்டும்.

- **தொல்காப்பியம் சொல்லதிகாரம்**
*கல்லாடனார் உரை. பக். 61-62.*


## இசைக் குறுவட்டுக்கள்




பத்துப்பாட்டு முற்றோதல் (5 தொகுதிகள்) விலை உரூ. 250/-




தொல்காப்பியம் முற்றோதல் (5 தொகுதிகள்) விலை உரூ. 250/-




பழந்தமிழ்ப் பாக்கள் மரபுவழிப் படித்தலும் பாடுதலும்
(தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு)
விலை உரூ. 50/-

CICTArchives

பணியரங்கு 1

# இலக்கண அடைவுக் குறியீட்டு உருவாக்கம்

செம்மொழித் தமிழ் நூல்களின் தரவக உருவாக்கம் என்பது செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் 10 முதன்மைத் திட்டப் பணிகளில் ஒன்றாகும். செவ்வியல் நூல்களின் மூலப்பாடத்திற்கான இலக்கண அடைவுக் குறியீட்டு உருவாக்கம் குறித்த பத்து நாள் பயிலரங்கம் 2010 மார்ச்சு 10ஆம் நாளிலிருந்து 19ஆம் நாள்வரை சென்னைப் பல்கலைக்கழகத்தில் நடந்தது. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் முனைவர் க. உமாராஜ் பணியரங்கை ஒருங்கிணைத்தார். கீழ்க்காணும் அறிஞர்கள் பணியரங்கில் வளமையராகக் கலந்துகொண்டார்கள்.

பேராசிரியர் **பா.ரா. சுப்பிரமணியம்**
பேராசிரியர் **வ. செயதேவன்**
பேராசிரியர் **பெ. மாதையன்**
பேராசிரியர் **செ.வை. சண்முகம்**
பேராசிரியர் **அ. சீனிவாசன்**
முனைவர் **கி. அரங்கன்**
பேராசிரியர் **ந. தெய்வசுந்தரம்**
பேராசிரியர் **இ. சண்முகம்**
பேராசிரியர் **நடராஜபிள்ளை**
பேராசிரியர் **என். கணேசன்**
பேராசிரியர் **இராசேந்திரன்**
பேராசிரியர் **பி. பத்மநாபப்பிள்ளை**
முனைவர் **காமாட்சி**
முனைவர் **எஸ். இராஜா**
முனைவர் **கோ. பழனிராஜன்**
முனைவர் **க. உமாராஜ்**
முனைவர் **க. காவேரி**
திரு **பெ. முத்துசாமி**
திரு **கோ. சீனிவாசன்**
திரு **இரா.வெங்கடேசன்**
திரு **கோ. சதீஸ்**
திரு **இரா. அகிலன்**
திரு **அ. சண்முகசுந்தரம்**

முதல் நிலையில் சொற்கள் பெயர், வினை, பெயரடை, வினையடை, பிற என ஐந்து வகையாகப் பகுக்கப்பட்டு அவற்றிற்கு இலக்கண அடைவுக் குறியீடுகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் உருவாக்கப்பட்டன.

இரண்டாம் நிலையில் பதிலிடு பெயர், பொதுப் பெயர், இயற்பெயர் எனப் பகுக்கப்பட்டு, அவற்றிற்கான இலக்கண அடைவுக் குறியீடு தமிழிலும் ஆங்கிலத்திலும் உருவாக்கப்பட்டது.

அடுத்த நிலையில் வினை எச்சம் முற்று எனப் பகுத்து, அதனை மேலும் தெரிநிலை, குறிப்பு எனப் பகுத்து அவற்றிற்கான இலக்கண அடைவுக் குறியீடு தமிழிலும் ஆங்கிலத்திலும் உருவாக்கப்பட்டது.

பிற என்னும் வகைப்பாட்டிற்குள் வேற்றுமை உருபு, சாரியை, ஒட்டுக்கள் ஆகியவைகுறித்து விரிவாக விளக்கப்பட்டது.

நற்றிணைப் பாடல்கள் சிலவற்றை எடுத்து அவற்றிற்கு மாதிரி இலக்கண அடைவுக் குறியீடுகளை அறிஞர்கள் பொருத்திக்காட்டினர்.

பயிற்சியாளர் ஒவ்வொருவருக்கும் நற்றிணைப் பாடல்களிலிருந்து ஒரு பாடல் எனும் அடிப்படையில் இலக்கண அடைவுக் குறியீடுகளை இடும் பயிற்சி வழங்கப்பட்டது. கணினியில் உள்ளீடு செய்து இலக்கண அடைவுக் குறியீடுகளை உருவாக்கும் நெறிமுறைகள் குறித்து விரிவாக விளக்கப்பட்டது.

தற்காலத் தமிழுக்கான இலக்கண அடைவுக் குறியீடுகளை உருவாக்கிய முறையில் சங்க இலக்கியங்களுக்கான இலக்கண அடைவுக் குறியீட்டைக் கணினியில் பதிவு செய்வதற்கு ஏற்றாற்போல் உருவாக்க முடிவு எடுக்கப்பட்டது.

இப்பணியரங்கில் உருவாக்கப்பட்ட இலக்கண அடைவுக் குறியீடுகளைப் பயன்படுத்திச் சங்க இலக்கியங்களுக்கான இலக்கண அடைவுக் குறியீடுகளை உருவாக்கும்போது ஏற்படும் சிக்கல்கள் குறித்தும் அதனை மேலும் வளர்த்தெடுக்கும் முறைகள் குறித்தும் அடுத்துவரும் பணியரங்கில் விவாதிக்கலாம் என முடிவு செய்யப்பட்டது.





## 2 இணையவழிச் செம்மொழித் தமிழ்க் கல்வி பணியரங்குகளின் தொகுப்பறிக்கை

அ) செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் முதன்மைத் திட்டங்களுள் ஒன்றான இணையவழிச் செம்மொழித் தமிழ்க் கல்வித் திட்டத்தின்கீழ் ஒரு மாதக் காலப் பணியரங்கு மூன்று பகுதிகளாகப் பிரித்து நடத்தப்பட்டது. பணியரங்கின் முதல் பகுதி 21.12.2009 முதல் 27.12.2009 முடிய ஏழு நாட்களும் இரண்டாம் பகுதி 18.1.2010 முதல் 30.1.2010 முடிய பதின்மூன்று நாட்களும் மூன்றாம் பகுதி 2.2.2010 முதல் 11.2.2010 முடிய பத்து நாட்களும் நாகர்கோவில் தெ.தி. இந்துக் கல்லூரியில் நடத்தப்பட்டன.

பேராசிரியர் சு. இராசாராம், முனைவர் எம். நயினார், பேராசிரியர் எஸ். சுப்பிரமணியம் ஆகிய மூன்று அறிஞர்களும் பணியரங்கில் கலந்துகொண்டார்கள். நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் அன்னி தாமசு ஒருங்கிணைப்பாளராகச் செயற்பட்டார். பணியரங்கில் நான்காம் அலகான காப்பியத்திற்கும் ஐந்தாம் அலகான இலக்கணத்திற்கும் உரிய பாடங்கள் முடிவு செய்யப்பட்டன.

ஆ) செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் இணைய வழிச் செம்மொழித் தமிழ்த் திட்டப் பணியரங்கு 10.3.2010 முதல் 24.3.2010 வரை நடைபெற்றது. பேராசிரியர் சு. இராஜாராம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் அன்னி தாமசு, முதுநிலை ஆய்வு வளமையர் முனைவர் ப.கண்ணதாசன், முனைவர் பட்ட மேலாய்வர் முனைவர் ந.தேவி, நிரலாளர் சு. கார்த்திகேயன் ஆகியோர் கலந்துகொண்டனர். திட்டப் பணியாளர்கள் உருவாக்கிய சிலப்பதிகாரம், மணிமேகலை பற்றிய அறிமுகக் குறிப்புக்களும் பிற பாடங்களும் அடங்கிய 3,4,5ஆம் அலகுகளுக்குரிய வலைத்தள வரைவுகளும் இப்பணியரங்கில் வரையறை செய்யப்பட்டன.

இ) 21-04-2010 முதல் 05-05-2010 வரை பதினைந்து நாட்கள் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் இணையவழிச் செம்மொழித் தமிழ்த் திட்டப் பணியரங்கு நடைபெற்றது. இதில் புறநிலை வல்லுநராகப் பேராசிரியர் சு. இராசாராம் கலந்துகொண்டார். இப்பணியரங்கில் இதுவரை நிறைவு செய்யப்பெற்ற இணையப் பாடம் தொடர்பான பணிகள் மதிப்பீடு செய்யப்பெற்றன. மேலும் கருத்தலகு ஒன்று (அகம்), கருத்தலகு இரண்டு (புறம்) ஆகியவற்றை வலைத்தளத்தில் வடிவமைப்பதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்பெற்றன.

ஈ) செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் இணையவழிச் செம்மொழித் தமிழ்த் திட்டப் பணியரங்கு 03-06-2010 முதல் 18-06-2010 வரை பதினாறு நாட்கள் நடைபெற்றது. கருத்தலகு ஒன்று (அகம்), கருத்தலகு இரண்டு (புறம்) ஆகியவற்றுக்கான காட்சிப் படங்களோடு கூடிய வலைத்தள வடிவமைப்பு புறநிலை வல்லுநரான பேராசிரியர் சு. இராசாராம் உதவியோடு உருவாக்கப்பட்டது. மேலும் இந்தப் பணியரங்கில் கோயம்புத்தூரில் சூன் 23 முதல் 27 வரை நடைபெறவுள்ள முதல் உலகச் செம்மொழித் தமிழ் மாநாட்டுக் கண்காட்சியில் செம்மொழித் தமிழ் இணையவழிக் கல்விப் பாடத்திட்ட வலைப் பக்கங்களைக் காட்சிப்படுத்துவதற்குத் தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

## 3 இறையனார் களவியல் செம்பதிப்பு

15-03-2010 முதல் 19-03-2010 முடிய ஐந்து நாட்கள் இறையனார் களவியல் செம்பதிப்புத் தொடர்பான பணியரங்கு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இதில் பின்வரும் அறிஞர்கள் கலந்துகொண்டனர்.

பேராசிரியர் **அ. தாமோதரன்**
பேராசிரியர் **இ. சுந்தரமூர்த்தி**
பேராசிரியர் **பா.ரா. சுப்பிரமணியம்**
முனைவர் **கி. செயக்குமார்**
முனைவர் **சு. சௌந்தரபாண்டியன்**
திரு **மொ. மருதமுத்து**
திரு **கோ. உத்திராடம்**
திரு **தி.ஞா. அருள் ஒளி**
திரு **அ. முருக சுவாமிநாதன்**
திரு **க. பத்மநாபன்**

இப்பணியரங்கில் இறையனார் களவியல் சுவடிகள் திரையிடப்பட்டுப் பாடவேறுபாடுகள் ஒப்பு நோக்கிப் பதிவு செய்யப்பட்டன. செம்பதிப்பில் பாடத்தேர்வு விளக்கம் இடம்பெறுவதன் தேவை குறித்து விவாதிக்கப்பட்டது



CICTArchives



# தமிழ் மருத்துவத்தின் தொன்மையும் தனித்தன்மையும்



**பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் ஆற்றிய நிறைவு விழாப் பேருரையின் தொகுப்பு**




அக்காலத்தில் குழந்தைகளைக் கடுமையான நோயிலிருந்து காக்கக்கூடிய பக்குவமான மருந்துகளாகக் கருணானந்தருடைய கோரோசனை மாத்திரையும் சஞ்சீவி மாத்திரையும் விளங்கின. மேலும் பழனி தண்டபாணி வைத்தியசாலை மருந்துகளும் தஞ்சை ஆபிரகாம் பண்டிதருடைய மருந்துகளும் மருத்துவர் மதுரத்தினுடைய மருந்துகளும் செல்வாக்குப் பெற்றிருந்தன. அந்த மருந்துகளை இரண்டு மூன்று ஆண்டுகள் வைத்திருந்தால் கூட எவ்விதமான பக்க விளைவுகளுமில்லாது பயன்பட்டன. அன்றைய சூழலில் பாரம்பரிய மருத்துவர்களே மருத்துவம் பார்த்து வந்தார்கள். மருத்துவத் தொழிலைச் செய்ய இயலாத நிலைமை ஏற்பட்டபோது வேறு தொழிலுக்கு மாறிவிட்டார்கள்.

கிராமத்தில் கைகால்களில் கட்டிகள் இருந்தால் பாரம்பரிய மருத்துவர்கள்தான் அந்தக் கட்டியை அறுவை சிகிச்சை செய்து குணப்படுத்துவர். கிராமங்களில் மிக ஆழமான பயிற்சிபெற்ற மருத்துவர்களும் உண்டு. கடுமையான நோயிலிருந்தும் காப்பாற்றுவார்கள். எவ்விதமான சாதனங்களுமற்ற ஒரு மருத்துவமாகச் சித்த மருத்துவம் திகழ்கிறது. சாதனங்கள் கிடையாது; மருந்து உண்டு. ஊசி போடமுடியாது; மருந்து உண்டு. ஸ்டெதஸ்கோப் கிடையாது; சில குறைகள் இருந்தாலும்கூடச் சித்த மருத்துவம் இன்றைக்கும் ஏழை எளிய மக்களுக்கு வீட்டு வைத்தியமாக மிகப்பெரிய அளவில் பயன்படுகிற ஒன்றாகத் திகழ்கிறது.

குழந்தைப் பிறப்பைக் கவனித்து வந்தவர்கள் முக்கால் பங்கு மருத்துவம் தெரிந்தவர்கள். அவர்களுக்குத் தெரிந்த மருத்துவம்தான் நம்முடைய தாய்மார்களைக் காப்பாற்றியது. அது பாரம்பரிய முறையிலே வருகிற வைத்தியமுறை. நினைத்தவர்களெல்லாம் அந்த மருத்துவம் பார்க்க முடியாது.

அப்படியொரு நீண்ட தொன்மையான பாரம்பரியத்தோடு வளர்ந்த மருத்துவத்தை மறுபடியும் நாம் நூல் அளவில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதை இழந்துவிடக்கூடாது. மெல்ல நாளுக்கு நாள் இழந்து வருகிறோம். கிராமத்து வைத்தியர்கள் ஒரு சின்னப் பெட்டியை வைத்திருப்பார்கள். அந்தப் பெட்டியைத் திறந்தால் அதில் பத்து விதமான மருந்துகள் இருக்கும். பட்டுத் துணி ஒன்றைக் கைக்குட்டை போல் வைத்திருப்பார்கள். அதை வைத்துத்தான் நாடி பார்ப்பார்கள். ஸ்டெதஸ்கோப் மூலமாகப் பார்த்து அறிவதைவிட நாடி பார்த்து இன்னும் திட்டவட்டமாக அறியக்கூடிய திறமை வாய்ந்தவர்கள் பலபேர் இருந்தார்கள்.

ஆயுள் அளவைக் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவிற்கு நாடி பார்ப்பதில் தேர்ச்சி பெற்றவர்கள் இருந்தார்கள். நம்மால் முடியுமென்ற அழுத்தமான நம்பிக்கையோடு மருத்துவம் செய்தார்கள்.

CICTArchives



மேலும், இதைவிடத் தொன்மையான மருத்துவம் வேறொன்றுமில்லை. இதற்குக் காரணம், இயற்கை மருத்துவமும் சித்த மருத்துவமும் ஏறத்தாழ மிக நெருக்கமான உறவு கொண்டுள்ளமையே.

அதேபோல் இயற்கையிலே உள்ள பொருட்கள் மிகப்பெரிய அளவில் பயனுள்ளதாக இருப்பதைத் தமிழர்கள் மிக நீண்ட காலம் முன்னதாகவே அறிந்துள்ளனர். உதாரணமாக, நீண்ட காலத் தேனைப் பல வகையில் கையாண்டு அதன் தன்மையை உணர்ந்தவர்கள் தமிழர்கள். தேன் மட்டுமல்ல; கள்ளுக்கும் மருத்துவத் தன்மை உண்டு. பனை மரத்துக் கள்ளுக்குக் கடுமையான மஞ்சள் காமாலை போன்ற நோயைத் தடுத்து நிறுத்துகிற ஆற்றல் உண்டு. இவ்விதமான இயற்கையோடு ஒட்டிய மருத்துவம் என்ற முறையில் சித்த மருத்துவம் மிக நீண்ட தொன்மையுடையது.

தமிழ் மொழி எவ்வளவு தொன்மையுடையதோ அவ்வளவு தொன்மையுடையது தமிழ் மருத்துவம். இந்த உடலை வைத்துத்தான் உலகத்து வாழ்க்கை. இவ்வுடம்புதான் உயிர்க்குக் கருவி. ஆகவே இவ்வுடம்பை ஓம்பத்தான் வேண்டும்.

சித்தர்கள் அனைவரும் சித்த மருத்துவர்கள் அல்லர். சித்த மருத்துவராக இருக்கக்கூடிய பல சித்தர்கள் இருந்தார்கள். அரபு நாடுகளிலும் மற்ற நாடுகளிலும் சூஃபி என்று சொல்லப்படுகிற இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் சித்தர்கள்தான். சித்தர்கள் மனத்தை வென்றவர்கள். தன்னுடைய மனம் போகிற போக்கில் போகாமல் தான் நினைக்கிற போக்கிலே போகிறவர்கள்.

மூலிகைகளுடைய தன்மைகளைச் சித்தர்கள் கண்டறிந்ததைப் போல இன்று வரை விஞ்ஞானிகள் கண்டறியவில்லை. மூலிகைகளுடைய சிறப்பு, மூலிகைச் சாறெடுத்துப் பயன்படுத்தும் முறை, அதன் வேர்களின் பயன் ஆகியன பற்றி ஏராளமான செய்திகளைக் கூறிப் பல நோய்களுக்கும் மருந்துகளைக் கண்டறிந்துள்ளனர். இன்று அவை முழுமையான அளவில் சித்த மருத்துவத்தில் கையாளப்படாமல் இருக்கின்றன. அவற்றை முழு அளவில் பயனுக்குக் கொண்டு வரவேண்டும். இன்றைக்குக் கொல்லி மலையில் ஏராளமான வேர்கள் இருக்கின்றன. அங்கே மூலிகைச் செடிகள் நிரம்ப வளர்ந்துள்ளன. ஆகவே அவற்றைக் கண்டறிந்து பட்டுப்போகாமல் தொடர்ந்து நிலைக்கச் செய்து பயன்படுத்துவதற்கு நம்மை நாமே முழு அளவில் ஒப்படைத்துக் கொள்ள வேண்டும்.


அப்பொழுதுதான் சமுதாயத்திற்கு முழுமையான பலன் கிடைக்கும். ஆனால் எந்த ஆராய்ச்சியும் ஒரு சிறு பகுதியை மட்டும் செய்கிறபோது நிறைவு கிடைப்பதில்லை.


ஆபிரகாம் பண்டிதர் தனக்குக் கிடைத்த மூலிகைகளைத் தொடர்ந்து ஆராய்ந்து பல மருந்துகளைக் கண்டுபிடித்த வரலாறு உள்ளது. மேலும் சித்த மருத்துவர்களுக்குச் சித்த மருத்துவத்தினுடைய தனித் தன்மையைக் காப்பாற்றப் பிற மருத்துவத்தின் உதவி தேவையில்லை என்று சொல்லக்கூடிய மனப்பான்மை வரவேண்டும்.


இந்திய மருத்துவக் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் சித்த மருத்துவத்தைத் தவிர வேறு எதையும் நாங்கள் கையால் தொடமாட்டோம் என்று உறுதி எடுத்துக் கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் அந்த மருத்துவம் வளரும்.

பழனி அறங்காவல் துறை பல்வேறு தலைப்புக்களில் மருந்துகளைப் பற்றி விளக்கத்துடன் பலர் எழுதிய நூல்களுக்கு நிதி ஒதுக்கி வெளியிட்டது. இப்பொழுதும் தொடர்ந்து அம்முயற்சி நடைபெறவேண்டும். எவ்வளவுக்கு எவ்வளவு அந்த நூல்கள் வெளிவருகின்றனவோ அவ்வளவுக்கு அவ்வளவு அந்த உண்மைகளை நாம் தெரிந்துகொள்வதற்கு வாய்ப்புகள் கிடைக்கும். இது மருத்துவர்களுக்கு மிகப்பெரிய உதவியாக இருக்கும்.

சித்த மருத்துவம் பற்றிய ஓலைச்சுவடிகள் நிறைய உள்ளன. அவற்றைப் பாதுகாத்து நூல்களாக வெளிக்கொணரச் செய்ய வேண்டும். சித்த மருத்துவர்கள் தங்களது மருத்துவத்திற்குப் பெருமை சேர்ப்பதற்கு முழுமையாக ஒப்படைத்துக்கொண்டு முனைப்புடன் பணியாற்ற வேண்டும். இவ்வாறு பணியாற்றுவதன் மூலம் நமது சமுதாயத்திற்கு மிகப்பெரிய நல்ல கடமைகளை ஆற்றலாம்.








செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள்

கலைஞர் மு. கருணாநிதி

(தமிழ், இந்தி, ஆங்கிலம்)

விலை உருபாய் 50/-

CICTArchives



## 1 குறுந்திட்டப் பணிகள் மதிப்பீட்டுக் குழுக் கூட்டம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் குறுகிய காலத் திட்டப் பணிகளை மேற்கொண்டவர்கள் அளித்த அறிக்கைகளை மதிப்பிடும் மதிப்பீட்டுக் குழுக் கூட்டம் 5 கட்டங்களாக வெவ்வேறு நாட்களில் நடந்தது. கீழ்க்காணும் உறுப்பினர்கள் அனைத்துக் கூட்டங்களிலும் கலந்துகொண்டார்கள்.

பேராசிரியர் **ச.மோகன்**, இயக்குநர்
பேராசிரியர் **ப. மருதநாயகம்**, ஆய்வறிஞர்
பேராசிரியர் **கு. சிவமணி**, ஆய்வறிஞர்
பேராசிரியர் **அன்னி தாமசு**, ஒருங்கிணைப்பாளர்
பேராசிரியர் **க. இராமசாமி**, பொறுப்பு அலுவலர், அமைப்பாளர்

கூட்டத்தில் மதிப்பிடப்பெற்ற திட்டப் பணி அறிக்கைகள் பற்றிய விவரங்கள் கீழ்வருமாறு:

**3.2.10** - தமிழ்த் திருக்குறளும் பிராகிருத வஜ்ஜாலக்கமும் - ஓர் ஒப்பாய்வு, முனைவர் அ. கார்த்திகேயன், இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

**3.2.10** - பழந்தமிழ் நூல்கள்: விலங்கினப் பெயர்ச் சிறப்பு அகரமுதலி, பேராசிரியர் எச். சித்திரபுத்திரன், தலைவர், அகராதித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

**4.2.10** - தமிழ் முனைவர் பட்ட ஆய்வுகளை (1948-2007) கணினி ஒருங்குறியீட்டில் அட்டவணைப்படுத்தல், முனைவர் தி. நெடுஞ்செழியன், இணைப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம், அ.வ.அ. கல்லூரி, மன்னம்பந்தல்.

**4.2.10** - இலக்கியத்தில் காலந்தோறும் அகப்பொருள் மரபு மாற்றம், முனைவர் சி.பி.கோபால், இணைப் பேராசிரியர் (ஓய்வு), அரசுக் கலைக் கல்லூரி, உடுமலைப்பேட்டை.

**4.2.10** - தமிழுக்கும் வடஇந்திய மொழிகளுக்குமான வேர்ச்சொல் - இலக்கண உறவுகளை ஆய்தல், முனைவர் கு. அரசேந்திரன், தமிழ் இணைப் பேராசிரியர், கிறித்துவக் கல்லூரி, சென்னை.

**10.3.10** - தமிழ் வினையடிகளின் வரலாற்று மொழியியல் ஆய்வு, முனைவர் ச. இராஜேந்திரன், இணைப்பேராசிரியர், மொழியியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

**10.3.10** - முற்காலப் பாண்டியரின் தொன்மை - பல்லவர்க்கு முற்பட்ட தமிழிலக்கியம் வெளிப்படுத்தும் தொன்மைச் சான்றுகள் - பன்னோக்கு ஒப்பாய்வு - முனைவர் ப. சதாசிவம், துணை முதல்வர் - ஓய்வு பெற்ற பேராசிரியர், வரலாற்று ஆய்வுத்துறை, என்.எம்.எஸ்.எஸ். வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, நாகமலை, மதுரை.

**10.3.10** - வரலாற்றியல் நோக்கில் குறுந்தொகை ஆய்வு இயல்புகள், முனைவர் இரா. தாமோதரன், தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.

**15.4.10** - பொருந்தல் தொல்லியல் அகழாய்வுகள், பேராசிரியர் கா. இராஜன், தலைவர், வரலாற்றுத் துறை, புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி.

**15.4.10** - திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்புகள் தொகுப்பு - பொருட்பால், முனைவர் அ.அ. மணவாளன், பேராசிரியர் - தலைவர் (ஓய்வு), சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

**15.4.10** - பழந்தமிழ் இலக்கிய இலக்கண ஓலைச்சுவடிகள் மின்னாக்கம், பேராசிரியர் வீ. அரசு, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.

**3.6.10** - இரட்டைக் காப்பியங்களில் பாலின ஆய்வு, முனைவர் சந்திரசேகரன், வரலாற்றுத் துறை, இராஜபாளையம் இராஜாக்கள் கல்லூரி, இராஜபாளையம்.

**3.6.10** - கலித்தொகையிலும் குறுந்தொகையிலும் சூழலியல் தாக்கமும் நாட்டுப்புற வாழ்வியலின் செல்வாக்கும் - உளவியல், சமூகவியல் பார்வை, முனைவர் ஆர். சீதா, தமிழ்த்துறை, புனித பிலோமினா கல்லூரி, மைசூர்.

**3.6.10** - கண்ணகி கதைகள் - ஏட்டிலும் நாட்டிலும் - திரட்டும் பண்பாட்டாய்வும், முனைவர் சு. சண்முக சுந்தரம், கோடம்பாக்கம், சென்னை.

## 2 பதிப்புப்பிரிவின் அறிவுரைக் குழுக் கூட்டம்

பதிப்புப் பிரிவின் அறிவுரைக் குழுக் கூட்டம் 05.02.2010 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. வெளியிடத் தகுதியான நூல்களை மதிப்பிடுவதற்காக இந்தக் கூட்டம் நடந்தது. பின்வரும் குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள்.

பேராசிரியர் **வா.செ. குழந்தைசாமி**
முனைவர் **சிலம்பொலி செல்லப்பன்**
பேராசிரியர் **ம.இராசேந்திரன்**
திரு **முத்துக்குமாரசாமி**
முனைவர் **தாமஸ் லெக்மன்**
பேராசிரியர் **இ. சுந்தரமூர்த்தி**
பேராசிரியர் **ப. மருதநாயகம்**

CICTArchives



பேராசிரியர் **ச. மோகன்**
பேராசிரியர் **க. இராமசாமி**
முனைவர் **ந. அரணமுறுவல்**

கீழ்க்காணும் நூல்கள் குழுவின் முன் மதிப்பிட வைக்கப்பட்டன.

1. திருக்குறள் தொகுப்பு - ஆங்கில மொழிபெயர்ப்பு (அறத்துப்பால்) - அ.அ.மணவாளன்.
2. திருக்குறள் - நேபாளி மொழிபெயர்ப்பு - சுனிதா சுரேஷ்
3. திருக்குறள் - தெலுங்கு மொழிபெயர்ப்பு- எஸ்.ஜெயப்பிரகாஷ்
4. திருக்குறள் - மணிப்புரி மொழிபெயர்ப்பு - சாய்பம் ரெபிகா தேவி
5. பழந்தமிழ்ப் பாடல்களும் பாவியலும் - புதியபார்வை - பேராசிரியர் ப.மருதநாயகம் (ஆங்கிலம்)
6. திராவிட வேர்ச்சொல் அகராதி - துணை நூல் - பி.எஸ்.சுப்ரமணியம் (ஆங்கிலம்)
7. தமிழில் வினைமுற்றின் செயற்பாடு - இரா.கோதண்டராமன் (ஆங்கிலம்)
8. நற்றிணை - ஆங்கில மொழிபெயர்ப்பு - பதிப்பாசிரியர் வி.முருகன்
9. குறுந்தொகை - ஆங்கில மொழிபெயர்ப்பு - பதிப்பாசிரியர் ஜெயந்தா ஸ்ரீபாலகிருஷ்ணன்
10. இன்னாநாற்பது - ஆங்கில மொழிபெயர்ப்பு - பி.ராஜா
11. இனியவை நாற்பது - ஆங்கில மொழிபெயர்ப்பு - பி.ராஜா
12. கார்நாற்பது - ஆங்கில மொழிபெயர்ப்பு - பி.ராஜா
13. களவழி நாற்பது - ஆங்கில மொழிபெயர்ப்பு - பி.ராஜா
14. பழமொழி நானூறு - ஆங்கில மொழிபெயர்ப்பு -எம்.டி.ஜெயபாலன்
15. சிலப்பதிகாரம் - ஆங்கில மொழிபெயர்ப்பு - கா.செல்லப்பன்
16. முத்தொள்ளாயிரம் - ஆங்கில மொழிபெயர்ப்பு - பி. பாண்டியன்
17. வள்ளுவம் - ஆங்கில மொழிபெயர்ப்பு - வ.சுப. மாணிக்கம்
18. பழந்தமிழ்க் கல்வெட்டுக்கள் - ஐராவதம் மகாதேவன்
19. திருக்குறள் மேற்கோள் அடைவு - அ. தாமோதரன்
20. சங்க இலக்கிய மரபும் திறமையும் - இராம. பெரியகருப்பன்.

## 3 பண்பாட்டுச் சொற்களஞ்சியம், உரோமானிய எழுத்துப்பெயர்ப்பு அறிவுரைக்குழுக் கூட்டம்

செவ்வியல் தமிழ்ப் பனுவல்களின் மொழிபெயர்ப்புக்கான பண்பாட்டுக் கலைச்சொற் களஞ்சியத்தையும் தமிழ்ப் பெயர்ச் சொற்களுக்கு ஏற்ற தரமான உரோமானிய எழுத்துப் பெயர்ப்பையும் உருவாக்குவதற்கான அறிவுரைக் குழுக்கூட்டம் 06.02.2010 அன்று காலை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இதில் பின்வரும் உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.

பேராசிரியர் **வா.செ. குழந்தைசாமி** - தலைவர்
முனைவர் **அவ்வை நடராசன்** - உறுப்பினர்
முனைவர் **ஐராவதம் மகாதேவன்** - உறுப்பினர்
பேராசிரியர் **ப.ரா. சுப்பிரமணியன்** - உறுப்பினர்
முனைவர் **வ. முருகன்** - உறுப்பினர்
பேராசிரியர் **இ. சுந்தரமூர்த்தி** - உறுப்பினர்
பேராசிரியர் **ப. மருதநாயகம்** - உறுப்பினர்
பேராசிரியர் **க. இராமசாமி** - ஒருங்கிணைப்பாளர்
பேராசிரியர் **ச. மோகன்** - உறுப்பினர், அமைப்பாளர்

இக்கூட்டத்திற்கு வருகை புரிந்த அனைவரையும் பேராசிரியர் ப. மருதநாயகம் வரவேற்றார். பேராசிரியர் வா.செ. குழந்தைசாமி கூட்டப் பொருண்மைபற்றிப் ''பழமை வாய்ந்த தமிழ்ப் பனுவல்களான 41 செவ்வியல் நூல்களை நிறுவனம் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கிறது. அறம், பொருள், இன்பம், சால்பு போன்ற தமிழ்ப் பண்பாட்டுச் சொற்களுக்குத் தனிச் சொற்களஞ்சியம் தேவைப்படுகிறது. அவற்றுக்கு இணையான ஆங்கிலச் சொற்கள் இல்லை. தமிழரல்லாத வாசகர்களுக்காக இச்சொற்களை எழுத்துப் பெயர்ப்புச் செய்து கொடுப்பதுடன் முழுமையான விளக்கமும் தரவேண்டும். அடுத்துத் தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கில எழுத்துப்பெயர்ப்பைத் தரப்படுத்த வேண்டும். தமிழின் பெயர்ச்சொற்களை எழுத்துப் பெயர்ப்புச் செய்யும்போது சீர்மையில்லாமல் உள்ளது. தமிழ்ப் பேரகராதியின் எழுத்துப்பெயர்ப்பு முறை பெரும்பாலான தமிழர்களுக்கு மிகக் கடினமானதாயுள்ளது. இதை எளிமையாக்க வேண்டும்'' என்று தலைமையுரையில் எடுத்துக்கூறினார்.

இரண்டு பொருள் பற்றியும் கூட்டத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் ஆழ்ந்து விவாதித்துத் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

- 41 பழந்தமிழ்ப் பனுவல்களிலிருந்தும் பண்பாட்டுச் சொற்களை அடையாளம் கண்டு விளக்கக் குறிப்புக்களை

CICTArchives



எழுதிப்பண்பாட்டுச் சொற்களஞ்சியத்தை உருவாக்கத் தகுந்த வல்லுநர்களைக் கொண்ட குழு அமைத்தல்

- தமிழ்ப் பெயர்ச் சொற்களுக்கு எழுத்துப்பெயர்ப்புச் செய்ய எளிய முறையை அறிமுகப்படுத்தி அதைப் பெரும்பான்மையான பொதுமக்கள் பயன்படுத்தும்படி நடைமுறைப்படுத்தல்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் இரண்டையும் ஏற்றுக் கொண்டது. தலைவரின் நன்றிகூறலுடன் கூட்டம் நிறைவடைந்தது.

## 4 கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது தேர்வுக் குழுக் கூட்டம்

2009ஆம் ஆண்டுக்கான கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுக்கான அறிவிப்பு 05.01.2010 அன்று வெளியிடப்பட்டது. இதைத் தொடர்ந்து இந்த விருதைத் தேர்வு செய்வதற்காக ஐந்து பேர் கொண்ட குழு ஒன்று 23.02.2010 அன்று உருவாக்கப்பட்டது.

கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுக்கான தேர்வுக் குழுக் கூட்டம் 03.04.2010 அன்று மாலை மாண்புமிகு தமிழக முதல்வரும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத் தலைவருமான கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பின்வரும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

பேராசிரியர் **வா.செ. குழந்தைசாமி**
துணைத் தலைவர்
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்.

திரு **எஸ். மோகன்**
மேனாள் நீதியரசர்
உச்ச நீதிமன்றம்.

பேராசிரியர் **ஜரோஸ்லவ் வாசெக்**
செக் குடியரசு.

முனைவர் **ஐராவதம் மகாதேவன்**
கல்வெட்டியல் அறிஞர்.

கவிக்கோ **அப்துல் ரகுமான்**
எண்பேராய உறுப்பினர்,
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்.

இந்த விருதுக்காக ஆஸ்திரேலியா, பின்லாந்து, இந்தியா, இலங்கை, இங்கிலாந்து, அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 131 பேர் விண்ணப்பித்தனர். தேர்வுக்குழுவினர் மிகுந்த கவனத்துடன் இவ்விண்ணப்பங்களைப் பரிசீலித்த பின்னர் 2009ஆம் ஆண்டுக்கான கலைஞர் செம்மொழித் தமிழ் விருதைப் பின்லாந்து அறிஞர் பேராசிரியர் அஸ்கோ பர்ப்போலா அவர்களுக்கு வழங்க ஒருமனதாக முடிவுசெய்தனர். சிந்துவெளி எழுத்துக்களைக் கண்டறிதல்பற்றி உலக அளவில் ஏற்றுக்கொள்ளப்பெற்ற மிகச்சிறந்த ஆராய்ச்சிப் பங்களிப்புக்காக இவ்விருது வழங்கப்படுகிறது. இவ்விருது சூன் 23 முதல் 27 வரை கோயம்புத்தூரில் நடைபெறவுள்ள உலகச் செம்மொழித் தமிழ் மாநாட்டில் தமிழக அரசால் வழங்கப்படும்.

## 5 கட்டட வல்லுநரைத் தேர்வு செய்யும் கூட்டம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனக் கட்டடத்தைச் சென்னைப் பெரும்பாக்கத்தில் உள்ள 17 ஏக்கர் நிலத்தில் கட்டும் பொறுப்பு மத்தியப் பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது.

தகுதியும் அனுபவமும் உடைய கட்டடம் கட்டும் 42 நிறுவனங்கள் இப்பணியை மேற்கொள்ள விருப்பம் தெரிவித்தன. மத்தியப் பொதுப்பணித்துறை கட்டடம் கட்டும் நிறுவனங்களுக்குத் தொழில்நுட்பம், ஏலத்தொகை ஆகியவற்றை அனுப்புமாறு அறிக்கை அனுப்பியது. நிறுவனத்தின் பல்வேறு தேவைகளை விளக்குவதற்கு 28.11.2009 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இயக்குநர் அலுவலகத்தில் முன் ஏலக் கூட்டம் நடத்தப்பட்டது. 31.12.2009 அன்று எட்டு நிறுவனங்கள் மட்டுமே தங்கள் தொழில் நுட்பம், ஏலத்தொகை பற்றிய விவரங்களை அளித்தன.

தொழில் நுட்பம், ஏலத்தொகை பற்றிய விவரங்களை அளித்த நிறுவனங்கள் பின்வருமாறு:

1. கிரியேட்டிவ் ஆர்க்கிடெக்ட்ஸ் - இண்டீரியர்ஸ், சென்னை.
2. ஜேசுடியன் ஆர்க்கிடெக்ட்ஸ், சென்னை.
3. இந்திரப்பிரஸ்தா கன்சல்டண்ட்ஸ், ஐதராபாத்.
4. லா மெடோ, ஐதராபாத்.
5. இராஜேந்திரன் அசோசியேட்ஸ், சென்னை.
6. ஜி.ஏ. ஆர்க்கிடெக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.
7. டி. சுபாஸ் - அசோசியேட்ஸ், கொல்கத்தா.
8. சங்கரநாராயணன் கன்சல்டன்சி சர்வீசஸ், பெங்களூர்.

CICTArchives



தேசியத் தொழில்நுட்ப நிறுவனம் வகுத்துள்ள மதிப்பீட்டு முறைகளான கட்டட வரைபடக் கருத்துருவும் வழங்கல்முறையும், கட்டட நிறுவனத்தின் அனுபவ ஆண்டுகள், அந்நிறுவனம் அதே பணியில் பெற்றுள்ள கடந்தகால அனுபவங்கள், கடந்த ஐந்து ஆண்டுகளில் அந்நிறுவனத்தால் முடிக்கப்பட்டுள்ள திட்டங்கள், கட்டட வல்லுநரின் பணி அனுபவமும் பொருளாதார ஆற்றலும் ஆகியவற்றின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட எட்டு நிறுவனங்களில் பின்வரும் மூன்று நிறுவனங்கள் மட்டுமே தேர்வுசெய்யப் பெற்றன.

1. இராஜேந்திரன் அசோசியேட்ஸ், சென்னை.
2. கிரியேட்டிவ் ஆர்க்கிடெக்ட்ஸ் - இண்டீரியர்ஸ், சென்னை.
3. சங்கரநாராயணன் கன்சல்டன்சி சர்வீசஸ், பெங்களூர்.

25.02.2010 அன்று சென்னையிலுள்ள மத்தியப் பொதுப்பணித் துறைத் தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் மேற்கண்ட மூன்று நிறுவனங்களின் கட்டட வரைபடக் கருத்துருவை வழங்க அழைக்கப்பட்டனர். தலைமைப் பொறியாளர் தலைமையில் பின்வரும் அலுவலர்களும் கட்டட நிறுவனப் பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

1. பேராசிரியர் ச. மோகன் - இயக்குநர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை.
2. பேராசிரியர் க. இராமசாமி - பொறுப்பு அலுவலர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை.
3. திரு எஸ். இரத்தினவேல் - கன்சல்டண்ட், மதுரை.
4. திரு பி.ஆர். தயாநிதி - சங்கரநாராயணன் கன்சல்டன்சி சர்வீசஸ், பெங்களூர்.
5. திருமிகு வர்ஷா ஜெயின் - கிரியேட்டிவ் ஆர்க்கிடெக்ட்ஸ் - இண்டீரியர்ஸ், சென்னை.
6. திருமிகு ரூப்மதி ஆனந்து - இராஜேந்திரன் அசோசியேட்ஸ், சென்னை.

மேற்கண்ட மூன்று கட்டட நிறுவனங்களிலிருந்து வந்த வல்லுநர்கள் தாங்கள் தயாரித்து வைத்திருந்த கட்டட வரைபடக் கருத்துருவின் பல்வேறு கூறுகளைப்பற்றி விளக்கமாக எடுத்துரைத்தனர். இவர்களில் இராஜேந்திரன் அசோசியேட்ஸ், கிரியேட்டிவ் ஆர்க்கிடெக்ட்ஸ் - இண்டீரியர்ஸ் ஆகிய இரண்டு நிறுவனங்களைக் கூட்டம் தெரிவு செய்தது.

03.04.2010 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்கண்ட இரு நிறுவனங்களில் கிரியேட்டிவ் ஆர்க்கிடெக்ட்ஸ் - இண்டீரியர்ஸ் நிறுவனம் அளித்த கட்டட வரைபடக் கருத்துரு இறுதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. இதில் பின்வரும் அலுவலர்களும் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

1. பேராசிரியர் **வா.செ. குழந்தைசாமி** - துணைத்தலைவர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை
2. பேராசிரியர் **ச. மோகன்** - இயக்குநர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை.
3. பேராசிரியர் **க. இராமசாமி** - பொறுப்பு அலுவலர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை.
4. திரு **பி.பி. சீனிவாசன்** - கண்காணிப்புப் பொறியாளர், சென்னை மத்திய வட்டம் 1, மத்திய பொதுப்பணித் துறை, சென்னை.

## 6 வரலாற்றுமுறைத் தமிழ் இலக்கணத் திட்ட அறிவுரைக் குழுக் கூட்டம்

வரலாற்றுமுறைத் தமிழ் இலக்கணத் திட்ட அறிவுரைக் குழுக் கூட்டம் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 16.04.2010 அன்று பேராசிரியர் ச. மோகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் பின்வரும் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

பேராசிரியர் **ச. மோகன்** - உறுப்பினர்
பேராசிரியர் **மா. நன்னன்** - உறுப்பினர்
பேராசிரியர் **செ.வை. சண்முகம்** - உறுப்பினர்
பேராசிரியர் **கே. பாலசுப்பிரமணியன்** - உறுப்பினர்
பேராசிரியர் **பொன். கோதண்டராமன்** - உறுப்பினர்
பேராசிரியர் **கி. அரங்கன்** - உறுப்பினர்
பேராசிரியர் **அ. சீனிவாசன்** - உறுப்பினர்
பேராசிரியர் **இரா. கோதண்டராமன்** - ஒருங்கிணைப்பாளர்
பேராசிரியர் **க. இராமசாமி** - அமைப்பாளர்

இக் கூட்டத்தில் பின்வரும் முடிவுகள் உறுப்பினர்களால் எடுக்கப்பட்டன.

1. வரலாற்று முறைத் தமிழ் இலக்கணம் என்னும் இத்திட்டத்தின் பெயரை வரலாற்று அடிப்படையில் தமிழ் இலக்கணம் என்று மாற்றுதல்.
2. பேராசிரியர் கே. பாலசுப்பிரமணியன் அவர்களின் வரலாற்று ஒலியியல், புணரியல், பேராசிரியர் செ.வை. சண்முகம் அவர்களின் வரலாற்றுப் பெயரியல், பேராசிரியர் எம். இஸ்ரேல் அவர்களின் வரலாற்று முறையில் தமிழ்ப் பெயரடைகளையும்

CICTArchives



வினையடைகளையும் ஆய்தல் ஆகிய திட்டங்களுக்கு ஆறு மாதக் காலம் நீட்டிப்பு வழங்குதல்

3. இத்திட்டத்தினை முதற்கட்டமாக ஐந்து ஆண்டுகள் மேற்கொள்ளல்.

4. சங்க இலக்கியம், தொல்காப்பியம் ஆகியவற்றில் வரலாற்று முறையிலும் சமகால முறையிலும் ஆய்வு மேற்கொள்ளல்.

5. இத்திட்டத்திற்கான மூலத் தரவுகளைப் பின்வருவனவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளல்.

   அ) தொல்காப்பியமும் செவ்வியல் தமிழ் இலக்கியங்களும்

   ஆ) இடைக்கால இலக்கியங்களான காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள், இலக்கணங்கள், இலக்கண இலக்கிய உரைகள், கல்வெட்டுக்கள், சிற்றிலக்கியங்கள்

   இ) சிறுகதை, புதினம், நாடகம், கவிதை ஆகிய இக்கால இலக்கிய வகைமைகள்

6. மேற்கண்ட இலக்கியப் படைப்புகளில் சொல்லடைவு இல்லாதவற்றுக்குச் சொல்லடைவு உருவாக்குதல்.

7. வரலாற்று முறைத் தமிழ் இலக்கணத் திட்டத்தில் பல்வேறு நிலைகளில் பணியாற்றும் ஆய்வாளர்களுக்கு மேம்பட்ட பயிற்சி அளித்தல்.

8. வரலாற்று மொழியியல், ஒப்பீட்டு மொழியியல் ஆகியவற்றுக்குப் பாடநூல் உருவாக்குதல். அதில் தமிழ் அறிஞர்களின் மொழியியல் அறிவை மேம்படுத்தத் தமிழில் உள்ள எடுத்துக்காட்டுக்களையும் பயிற்சிகளையும் ஒவ்வொரு இயலின் இறுதியில் தருதல்.

9. மொழியியலில் இடம்பெறும் அகமீட்டுருவாக்கம், புற மீட்டுருவாக்கம் தொடர்பான கொள்கைகளை ஆய்வாளர்களுக்குப் பயிற்றுவித்தல்.

10. வரலாற்றுமுறை, விளக்கமுறைத் தமிழ் இலக்கணத்திற்கு நூலடைவு உருவாக்குதல்.

11. சங்க இலக்கியத்திலோ மொழியியல் அறிவோடு மரபிலக்கணத்திலோ திறன் வாய்ந்த ஆய்வாளர்களை வரலாற்றுமுறைத் தமிழ் இலக்கணத் திட்டத்தில் பணியமர்த்துதல்.



## 7 தமிழ் ஐந்திறம் - கலந்தாய்வுக் கூட்டங்களின் தொகுப்பறிக்கை

தமிழ் ஐந்திறம் (பஞ்சாங்கம்) ஒன்றினை உருவாக்குவது தொடர்பாக வல்லுநர்களின் கலந்தாய்வுக் கூட்டங்கள் 26.04.2010, 28.05.2010 ஆகிய நாட்களில் பேராசிரியர் பொன். கோதண்டராமன் அவர்கள் தலைமையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றன. இக் கூட்டங்களில் கலந்துகொண்ட வல்லுநர்கள் வருமாறு:

பேராசிரியர் **பொன். கோதண்டராமன்**
முனைவர் **சோ.ந. கந்தசாமி**
திரு **வை. கணபதி ஸ்தபதி**
முனைவர் **இரா. நாகசாமி**
பெருங்கவிக்கோ **வா.மு. சேதுராமன்**
புலவர் **இறைக்குருவனார்**
பேராசிரியர் **மா. வயித்தியலிங்கன்**
திரு **மு.பெ. சத்தியவேல் முருகன்**
முனைவர் **அ. சிவபெருமான்**
திரு **பொ. இராஜசேகரன்**
பேராசிரியர் **இ. சுந்தரமூர்த்தி**
பேராசிரியர் **ச. மோகன்**
பேராசிரியர் **க. இராமசாமி**
முனைவர் **அரிமளம் சு. பத்மநாபன்**

தை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு என்பதை அடிப்படையாகக் கொண்டு நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2041க்கான ஐந்திறம் வரைவு ஒன்றை உருவாக்கும் பணி புலவர் இறைக்குருவனார், திரு மு.பெ. சத்தியவேல் முருகனார், முனைவர் அ. சிவபெருமான், திரு பொ. இராஜசேகரன் ஆகியோர் கொண்ட நால்வர் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. இவ்வரைவில் இடம்பெற வேண்டியவை பற்றி வல்லுநர்களிடையே நிகழ்ந்த நீண்ட கலந்துரையாடலுக்குப் பின்னர் மேற்கொண்ட முடிவுகள் வருமாறு:

1. பஞ்சாங்கத்தில் இடம்பெற்றுள்ள அனைத்துத் தகவல்களையும் உள்ளடக்கியதாகத் தமிழ் ஐந்திறம் இருக்க வேண்டும்.
2. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் பயன்படுத்தப்பட வேண்டும்.
3. சொல்லாக்கத்திற்கு ஒரே மாதிரியான நடைமுறையைப் பின்பற்ற வேண்டும்.
4. மாதம் என்பதற்குத் திங்கள் என்ற சொல்லையே பயன்படுத்தலாம்.
5. கலைச்சொற்கள் பட்டியல் பிற்சேர்க்கையாகத் தரப்பட வேண்டும்.

CICTArchives



6. பிரபவ முதலான 60 ஆண்டுகளுக்குச் சரியான தமிழ்ப் பெயர்களை உருவாக்கிப் பின்னர்ச் சேர்த்துக் கொள்ளலாம்.

மேற்கண்ட முடிவுகளின்படி 03.05.2010 முதல் 14.05.2010 வரையிலான 12 நாட்கள் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடந்த பணியரங்கில் நால்வர் குழு தமிழ் ஐந்திற வரைவினை உருவாக்கியது. 01.06.2010 முதல் 04.06.2010 முடிய 4 நாட்கள் நடந்த பணியரங்கில் தமிழ் ஐந்திற வரைவில் திருத்தங்களை மேற்கொண்டு நிறைவுசெய்தது.

## 8 தமிழ் வழக்காற்றாய்வுத் திட்ட நூல்களின் மதிப்பீட்டுக் குழுக் கூட்டங்கள்

அ) தமிழ் வழக்காற்றாய்வுத் திட்டத்தின்கீழ்த் தொகுக்கப்பட்ட **பேச்சுத் தமிழ் ஆய்வுகளின் நூலடைவு** என்னும் நூலுக்கான மதிப்பீட்டுக் குழுக் கூட்டம் 2010 சூன் 7, 8 ஆகிய நாள்களில் நடைபெற்றது. இந்நூலைப் பின்வரும் வல்லுநர்கள் மதிப்பிட்டனர்.

பேராசிரியர் **கோ. சீனிவாச வர்மா**
முன்னாள் இயக்குநர்
மொழியியல் உயராய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

பேராசிரியர் **பா.ரா. சுப்பிரமணியன்**
மொழி அறக்கட்டளை
சென்னை.

பேராசிரியர் **வ. ஞானசுந்தரம்**
முன்னாள் துணை இயக்குநர்
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்
மைசூர்.

தமிழ் வழக்காற்றாய்வுத் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ச. மனோகரன் அவர்கள் இந்நூலில் உள்ள ஆய்வு விவரங்களை வல்லுநர்களிடம் எடுத்துரைத்தார். வல்லுநர்கள் இந்நூலினை ஆய்வு செய்து தேவையான கருத்துக்களைக் கூறினர். அவை ஏற்றுக் கொள்ளப்பெற்று நூலில் மாற்றங்கள் செய்யப்பட்டன.

ஆ) தமிழ் வழக்காற்றாய்வுத் திட்டத்தின்கீழ்த் **தொழில்சார் சொற்கள் - ஆடுமாடுகள் வளர்த்தல்** என்னும் நூல் தொகுக்கப்பட்டுள்ளது. 2010 சூன் 14, 15 ஆகிய நாள்களில் இந்நூலுக்கான மதிப்பீட்டுக் குழுக் கூட்டம் நடைபெற்றது. கீழ்க்காணும் வல்லுநர்கள் இந்நூலை மதிப்பிட்டனர்.

பேராசிரியர் **பி. மதியழகன்**
கால்நடை மருத்துவக் கல்லூரி
சென்னை.

டாக்டர் **குஞ்சு**
துணைப் பொதுமேலாளர்
தேசியப் பால் பண்ணை வளர்ச்சி வாரியம்
புதுச்சேரி.

டாக்டர் **டி. எஸ். சரவணன்**
துணை ஆய்வு அலுவலர்
கால்நடை நோய்த்தடுப்பு மருந்து நிலையம்
இராணிப்பேட்டை.

திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ச. மனோகரன் இத்தொகுப்பில் சொற்கள் திரட்டப்பட்ட முறையினை வல்லுநர்களிடம் விளக்கினார். வல்லுநர்கள் இந்நூலினை ஆய்வு செய்து தேவையான கருத்துக்களை எடுத்துக் கூறினர். மேலும் ஆடுமாடுகள், நோய்கள் ஆகியவற்றுக்கான அறிவியல் சொற்களைப் பட்டியலிட்டு உரிய இடத்தில் பயன்படுத்தப் பரிந்துரைத்தனர். அவர்களின் கருத்துக்கள் ஏற்கப்பெற்று நூலில் சேர்க்கப்பட்டன.

இ) **வேளாண்மைச் சொற்கள்: தமிழரின் நெல் வகைகள்** என்னும் தமிழ் வழக்காற்றாய்வுத் திட்டத்தின் கீழ்த் தொகுக்கப்பட்ட நூலுக்கான மதிப்பீட்டுக் குழுக் கூட்டம் 2010 சூன் 16, 17 ஆகிய நாள்களில் மதிப்பிடப்பட்டது. இம்மதிப்பீட்டுக் குழுவில் இடம்பெற்ற வல்லுநர்கள் வருமாறு:

பேராசிரியர் **ஐ. சுந்தரம்**
நெல் ஆராய்ச்சி நிலையம்
அம்பாசமுத்திரம்.

பேராசிரியர் **ஜி.வி. இராமசுப்பிரமணியன்**
வேளாண் நெல் ஆராய்ச்சி நிலையம்
திரூர், திருவள்ளூர் மாவட்டம்.

பேராசிரியர் **தங்கவேல்**
வேளாண் கல்லூரி
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ச. மனோகரன் இத்தொகுப்பில் உள்ள சொற்கள் திரட்டப்பட்ட முறையை வல்லுநர்களிடம் விளக்கிக் கூறினார். நூலினை ஆய்வு செய்த வல்லுநர்கள் எடுத்துக் கூறிய கருத்துக்கள் நூலில் சேர்க்கப்பட்டன.

கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது, பொற்பதக்கம், ஐம்பொன்னாலான திருவள்ளுவரின் சிலை மற்றும் பாராட்டிதழ் ஆகியவற்றை அறக்கட்டளை நிறுவுநரும் தமிழக முதல்வருமான கலைஞர் மு. கருணாநிதி பார்வையிடல்



CICTArchives



# கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு 2010 சூன் திங்கள் 23ஆம் நாளன்று கோயம்புத்தூரில் உள்ள கொடீசியா வளாகத்தில் தொடங்கியது. இத் தொடக்க விழாவில் மாண்புமிகு தமிழகத் துணை முதல்வர் திரு மு.க. ஸ்டாலின் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். தமிழக ஆளுநர் மேதகு சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் விழாச் சிறப்பு மலரை வெளியிட அதனை மேதகு குடியரசுத் தலைவர் திருமதி பிரதிபா தேவிசிங் பாட்டீல் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

2009 ஆண்டுக்கான கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதினை மேதகு குடியரசுத் தலைவர் திருமதி பிரதிபா தேவிசிங் பாட்டீல் அவர்கள் ஃபின்லாந்து நாட்டு ஹெல்சின்கி பல்கலைக் கழகப் பேராசிரியர் திரு அஸ்கோ பர்ப்போலா அவர்களுக்கு வழங்கினார். அவருக்கு உருபாய் 10 இலட்சம் பரிசுத்தொகை, பாராட்டுச் சான்றிதழ், நினைவுப்பரிசாக ஐம்பொன்னாலான திருவள்ளுவர் சிலை ஆகியவை வழங்கப்பெற்றன.

நிதியமைச்சர் க. அன்பழகன் அவர்கள் தகுதியுரை நிகழ்த்தினார். அதில் கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுபெறும் அஸ்கோ பர்ப்போலாவின் சிறப்புக்களை எடுத்துரைத்தார்.

பிறகு அஸ்கோ பர்ப்போலா அவர்கள் ஏற்புரை நிகழ்த்தினார். அவ்வுரையில் இந்திய அரசு தமிழைச் செவ்வியல் மொழியாகச் சரியாக அங்கீகரித்துள்ளது. இத்தகுதியைப் பெறத் தமிழானது முழுத் தகுதியும் உடையது. ஏனெனில் அதன் தொன்மையும் உயரிய இலக்கியமும் தரத்தாலும் அளவாலும் உலகின் பிற செவ்வியல் மரபுகளுடன் பொருந்துகின்றன. தமிழ் தொல்திராவிடக் காலம் முதல் வழக்கிலிருக்கிறது. கி.மு. 2600 முதல் கி.மு 1700 வரை சிந்துவெளி எழுத்தில் எழுதப்பட்ட ஆயிரக்கணக்கான சிறு வாசகங்களின் மொழியாகத் தமிழை அடையாளம் காணமுடியும் என்பது என் கருத்து. உண்மையில் பல கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் திறனாய்வாளர்கள் பலர்

கி. மு ஆயிரத்தில் தொகுக்கப்பட்ட இருக்கு வேதத்திலும் சில திராவிடக் கடன் சொற்கள் உள்ளன என்பதை ஒப்புக் கொள்கின்றனர் என்று கூறினார்.



ஆய்வரங்க அறிவுரைக் குழு உறுப்பினரும் அமெரிக்கப் பேராசிரியருமான ஜார்ஜ் எல். ஹார்ட், பேராசிரியர் வா.செ. குழந்தைசாமி, ஆய்வரங்க அமைப்புக் குழுத் தலைவரும் இலங்கைத் தமிழறிஞருமான கா. சிவத்தம்பி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இதன் பின்னர் மாண்புமிகு தமிழக முதல்வர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையுரை ஆற்றினார். அவ்வுரையில் தமிழ் உலக மொழி மட்டுமல்ல. மூலத் தாய்மொழிச் சொற்கள் உலக மொழிகளில் சொல்வடிவில் உருத்திரிந்து பொருள் அளவில் உருத்திரியாமல் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக உலக மொழிகளில் உள்ள அம்மா, அப்பா எனும் உறவுப் பெயர்கள், நான், நீ, அவன் எனும் மூவிடப் பெயர்கள், நீர், நெருப்பு, காற்றுப் போன்ற இயற்கைப் பெயர்கள் தமிழோடு மிகவும் நெருக்கம் கொண்டவையாக உள்ளன. தமிழோடு தொடர்பில்லாத அடிப்படைச் சொற்கள் எவையும் உலகமொழிகளில் இல்லாததால் தமிழே உலக முதல் தாய்மொழி எனும் தகுதியைப் பெறுகிறது.

இன்று கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது பெறும் ஃபின்லாந்து நாட்டுப் பேராசிரியர் அஸ்கோ பர்ப்போலா சிந்துவெளிப் பண்பாடும் அதன் எழுத்தும் திராவிடக் குடும்பத்தைச் சார்ந்தவை என்னும் கருதுகோளை ஆய்வுச் சான்றுகளோடு முன்வைத்து அத்துறையில் தொடர்ந்து அரும்பணியாற்றி வருகிறார். சிந்துவெளியினர் திராவிடமொழி பேசுபவர்களே என்பதற்கான தகுந்த ஆதாரங்களை அவர் விரிவாகக் கூறியுள்ளார். அகநானூறு, புறநானூறு போன்ற கடைச் சங்க இலக்கியங்கள் கிடைத்ததன் பயனாக ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ் நமக்குக் கிடைத்தது; தொல்காப்பியம் கிடைத்ததால் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ் நமக்குக் கிடைத்தது. சிந்துவெளி எழுத்துச் சான்றுகளின் பயனாக ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ் கண்டறியப்பட்டுள்ளது.

ஒரு மொழி செம்மொழியாகக் கூறப்படுவதற்கு இன்னின்ன தகுதிகள் வேண்டுமென்று வரையறுக்கப்பட்டுள்ளன. தொன்மை, தனித்தன்மை, பொதுமைப் பண்பு, நடுவுநிலைமை, தாய்மைத் தன்மை, மொழிக் கோட்பாடு, இலக்கியவளம், உயர்சிந்தனை, பண்பாடு, கலை, பட்டறிவு வெளிப்பாடு ஆகிய பதினோரு தகுதிகளை ஒரு மொழி பெற்றிருந்தால்தான் அது செம்மொழியாகும். இந்தப் பதினோரு தகுதிகளை மட்டுமல்ல; இந்தத் தகுதிகளுக்கெல்லாம் மேலான மேன்மையான தகுதிகளைப் பெற்றமொழிதான் தமிழ்மொழி என்பதைத் தமிழகத்திலே உள்ள தமிழறிஞர்கள் மட்டுமல்ல, இந்தியாவிலே பிறமாநிலங்களிலே உள்ள தமிழறிஞர்கள் மட்டுமல்ல, தமிழைக் கற்றுத் தேர்ந்த உலக அறிஞர்கள் எல்லாம் ஒருமனதாக ஒப்புக் கொண்டுள்ளார்கள் என்று குறிப்பிட்டார்.

இதன் பின்னர்க் குடியரசுத் தலைவர் திருமதி பிரதிபா தேவிசிங் பாட்டீல் அவர்கள் முறைப்படி உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டைத் தொடக்கி வைத்து விழாப் பேருரையாற்றினார். அவ்வுரையில் தமிழ்மக்கள் இந்தியக் கூட்டு மரபைச் சிறப்பாகச் செழுமையாக்கி உள்ளனர். உலகப் பண்பாட்டு வளப்பத்தை உயர்த்தியுள்ளனர்.

தமிழ் இனப் பண்பானது பன்மைத்துவம், சகிப்புத் தன்மை, மனிதநேய அணுகுமுறை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பண்டைக் காலம் முதல் இன்று வரை பங்காற்றியுள்ளது. கலை, இசை, கட்டடக்கலை, இலக்கியம் ஆகியவற்றின் மூலம் நாட்டு முன்னேற்றத்திற்குப் பல்வேறு வழிகளில் இந்தியாவின் அடையாளத்தை ஒரு நாடாக வடிவமைக்கத் துணைபுரிந்துள்ளது.

உயிரோட்டமும் செழுமையும் மிக்க தமிழ் மொழி இந்தியாவைப் பெருமைக்குரிய பன்மொழிச் சமூகமாக உருவாக்கியுள்ளது என்று குறிப்பிட்டார்.

இறுதியாகத் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் கே.எஸ். ஸ்ரீபதி நன்றி கூறினார். இவ்விழாவில் ஏராளமான பொதுமக்கள், தமிழ் அறிஞர்கள் கலந்துகொண்டனர்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனக்

# கண்காட்சி அரங்கில்.....


















CICTArchives

## செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனக்

# கண்காட்சி அரங்கில்......

















CICTArchives

# உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கண்காட்சி அரங்கம்

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கோவையில் 2010ஆம் ஆண்டு சூன் திங்கள் 23 முதல் 27 வரை நடைபெற்றது. மாநாட்டில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனக் கண்காட்சி அரங்கம் கலை வல்லுநர்களைக் கொண்டு தமிழ்மொழியின் தொன்மைச் சிறப்பை விளக்கும் வகையில் அமைக்கப்பட்டது.

மாநாட்டிற்கு வருகைபுரிந்த பன்னாட்டு அறிஞர்களும் பார்வையாளர்களும் இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்து வந்திருந்த அறிஞர்களும் ஆர்வலர்களும் கண்காட்சியைப் பார்வையிட்டுப் பாராட்டியதோடு தமது கருத்துக்களையும் பதிவுசெய்தனர். 12 நாட்கள் நடைபெற்ற இக்கண்காட்சியை ஏறக்குறைய இரண்டு இலட்சம் பொதுமக்களும் 50 ஆயிரம் பள்ளி மாணவர்களும் கண்டுகளித்தனர்.

பார்வையாளர்களுள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர், மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர், மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர் கனிமொழி, தமிழக அரசின் தலைமைச் செயலாளர், இந்தியத் தொல்லியல் துறை ஆணையர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவர்.

நவீனத் தொழில்நுட்ப வசதிகளுடன் அமைக்கப்பட்டிருந்த இக்கண்காட்சியில் சிந்துவெளி அகழ்வாய்வில் கிடைத்த எழுத்துக்கள், முத்திரைகள், குறியீடுகள் ஆகியவை சுதை ஓவியமாகவும் படிமமாகவும் வடிவமைக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்பட்டன.

1. பொருந்தல் அகழாய்வில் கிடைத்தவை காட்சிப்படுத்தப்பட்டன. 2. நிறுவனக் குறுவட்டுக்கள் திரையிடப்பட்டன. 3. செம்பதிப்புத்துறையினரின் சுவடிகள் தேடுபொறி மென்பொருள்வழிச் சுவடிகளைக் கண்டறியும் முறை விளக்கப்பட்டது. 4. செம்மொழித் தமிழ் இணையவழிக் கல்வி விளக்கமுறை இடம்பெற்றது. 5. தமிழ்நாட்டின் நில வரைபடத்துடன் வட்டார வழக்குச்சொற்கள் காட்சிப்படுத்தப்பட்டன. 6. புதிய கட்டடத்தின் வடிவமைப்பும் தொல்காப்பியர், திருவள்ளுவர் உருவச் சிலைகளும் இடம் பெற்றிருந்தன. 7. தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகிய நூல்களின் முற்றோதல் ஒலிக்குறுவட்டுக்கள் ஒலிபரப்பப்பட்டன. 8. நிறுவனத்தின் ஆய்வுப்பணிகளை மக்கள் அறிந்துகொள்வதற்கு ஏதுவாகச் செய்தி மடல்களும் துண்டு அறிக்கைகளும் (தமிழ், ஆங்கிலம்) வழங்கப்பட்டன. 9. தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகிய நூல்களின் முற்றோதல் ஒலிக் குறுவட்டுக்கள் கண்காட்சியில் ஒலிபரப்பப்பட்டன. 10. நிறுவனத்தின் ஆய்வுப் பணிகளை மக்கள் அறிந்து கொள்வதற்கு ஏதுவாகச் செய்தி மடல்களும் துண்டறிக்கைகளும் (ஆங்கிலம், தமிழ்) கண்காட்சியில் வழங்கப்பட்டன.

# கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழாய்வு அறக்கட்டளைச் சொற்பொழிவு



கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழாய்வு அறக்கட்டளைச் சொற்பொழிவு உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் 25-06-2010 அன்று காலை 9 மணியளவில் கொடீசியா வளாகத்தில் உள்ள தொல்காப்பியர் அரங்கில் நடைபெற்றது. உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு ஆய்வரங்க அமைப்புக் குழுவும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் இணைந்து இந்நிகழ்ச்சியை நடத்தின. இதற்கு உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு ஆய்வரங்க அமைப்பாளர் பேராசிரியர் கா. சிவத்தம்பியும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இயக்குநர் பேராசிரியர் ச. மோகனும் ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்பட்டார்கள்,

இந்த நிகழ்ச்சிக்குத் தொல்லியல் அறிஞர் முனைவர் ஐராவதம் மகாதேவன் தலைமை தாங்கி வரவேற்புரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்ச்சியில் கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதின் 2009ஆம் ஆண்டு விருதாளரும் ஃபின்லாந்து நாட்டு ஹெல்சின்கி பல்கலைக்கழகப் பேராசிரியருமாகிய திரு அஸ்கோ பர்ப்போலா சிந்துவெளி எழுத்துச் சிக்கல் - திராவிடத் தீர்வு என்னும் பொருளில் சொற்பொழிவாற்றினார்.

தமிழ் அறிஞர்கள், ஆய்வு மாணவர்கள் உள்ளிட்ட பலர் இவ்வாய்வரங்கில் சொற்பொழிவில் கலந்துகொண்டனர்.

CICTArchives

# செம்மொழி விருது-பொற்கிழி வழங்கல்

தொல்காப்பியர் விருது, இளம் அறிஞர் விருதுகளுக்கான பொற்கிழி மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் 28.03.2010 அன்று சென்னைத் தாஜ் கோரமண்டலில் நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்டது.

**தொல்காப்பியர் விருது**

1. பேராசிரியர் அடிகளாசிரியர்

**இளம் அறிஞர் விருது**
**(2005-06)**

2. முனைவர் இரா. அறவேந்தன்
3. முனைவர் ய. மணிகண்டன்
4. முனைவர் சி. கலைமகள்


1


2


3


4


5


6


7


8

**இளம் அறிஞர் விருது**
**(2005-06)**

5. முனைவர் வா.மு.சே. முத்துராமலிங்க ஆண்டவர்
6. முனைவர் கே. பழனிவேலு

**இளம் அறிஞர் விருது**
**(2006-07)**

7. முனைவர் சு. சந்திரா
8. முனைவர் அரங்க. பாரி

CICTArchives

# செம்மொழி விருது-பொற்கிழி வழங்கல்

**இளம் அறிஞர் விருது**
**(2006-07)**

**9.** முனைவர் மு. இளங்கோவன்
**10.** முனைவர் மா. பவானி
**11.** முனைவர் இரா. கலைவாணி

**இளம் அறிஞர் விருது**
**(2007-08)**

**12.** முனைவர் அ. செல்வராசு











**இளம் அறிஞர் விருது**
**(2007-08)**

**13.** முனைவர் ப. வேல்முருகன்
**14.** முனைவர் ஆ. மணவழகன்
**15.** முனைவர் ச. சந்திரசேகரன்
**16.** முனைவர் சா. சைமன் ஜான்

CICTArchives

# பணிக்குழாம்

(2010 சனவரி - சூன்)

**பேராசிரியர் ச. மோகன்**
இயக்குநர்

**பேராசிரியர் க. இராமசாமி**
பொறுப்பு அலுவலர்

## முதுநிலை ஆய்வறிஞர்கள்

பேராசிரியர் க. இராமசாமி
பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி

## ஆய்வறிஞர்கள்

முனைவர் ந. அரணமுறுவல்
முனைவர் அன்னிதாமசு
முனைவர் கா. உமாராஜ்
முனைவர் இரெ. குமரன்
பேராசிரியர் இரா. கோதண்டராமன்
பேராசிரியர் கு. சிவமணி
முனைவர் அரிமளம் சு. பத்மநாபன்
பேராசிரியர் ப. மருதநாயகம்
முனைவர் ச. மனோகரன்
முனைவர் கா.கோ. வேங்கடராமன்

## இணை ஆய்வறிஞர்கள்

முனைவர் மு. இராமகிருஷ்ணன்
முனைவர் கோ. பழனிராஜன்
முனைவர் கூ.மு. புவனேஸ்வரி
முனைவர் கி. ஜெயக்குமார்

## முதன்மை ஆய்வு வளமையர்கள்

முனைவர் வி. இராமசாமி
முனைவர் சு. சௌந்தரபாண்டியன்
முனைவர் டொமினிக் ராஜ்
முனைவர் க. நர்மதா
பேராசிரியர் ம.ச. நாகராஜன்
முனைவர் வி. முருகன்
முனைவர் என். முருகையன்

## முதுநிலை ஆய்வு வளமையர்கள்

முனைவர் உ. அருணா
முனைவர் இரா. அருள்மணி
முனைவர் அ. ஆரோக்கியதாஸ்
முனைவர் கு. இராஜசேகரன்
முனைவர் சு. ஏழுமலை
முனைவர் ப. கண்ணதாசன்
முனைவர் க. கமலா ஏஞ்சல் பிரைட்
முனைவர் கி. காவிரி
முனைவர் இரா. குமாரசாமி
முனைவர் மா. சுசீலா
திரு ப. சுதாகரன்
முனைவர் மு. செல்வதுரை
முனைவர் ம. தமிழ்வாணன்
முனைவர் த. பூவை சுப்பிரமணியன்
திரு எம். மருதமுத்து
முனைவர் வ. மாரியப்பன்
முனைவர் சுப. வேல்முருகன்
முனைவர் கு. ஜெயகுமாரி

## இளநிலை ஆய்வு வளமையர்

திரு வே. அழகுமுத்து
செல்வி மோ. அனுசூயா
திரு சி. இராமச்சந்திரன்
திரு அ. கோ. இராஜதுரை
திரு பா. இராஜா
திரு ச. இராஜேஷ்குமார்
திரு கோ. உத்திராடம்
திரு கி. கண்ணன்
திரு சே. கரும்பாயிரம்
திரு கோ. சதீஷ்
திரு கோ. சந்திரசேகர்
திரு த. சரவணன்
திரு கோ. சீனிவாசன்
திரு ச. தமிழ்ச்செல்வன்
திருமதி ம. தாமரைச்செல்வி
திரு ம. நாகராஜன்
திருமதி சீ. நாகூரம்மாள்
திரு ந. பெரியசாமி
திரு பெ. முத்துசாமி
செல்வி த. லலிதமாலா
திரு இரா. வெங்கடேசன்

## நிரலாளர்கள்

திரு இரா. அகிலன்
திரு சு. கார்த்திகேயன்
திரு த. செந்தில்குமார்
திரு அ. முருக சுவாமிநாதன்

## இணைய வடிவமைப்பாளர்

திரு ச. குணசேகரன்

## கணினி நிருவகிப்பாளர்

திரு இரா. சுந்தரகணபதி

## மெய்ப்புத் திருத்துநர்

திருமதி தி. சுபாஷிணி

## சுவடி உதவியாளர்

திரு கே. பத்மநாபன்

## தரவு உள்ளீட்டாளர்கள்

திரு தி. ஞா. அருள் ஒளி
திருமதி சு. கீதா
திரு அ. சண்முகசுந்தரம்
திரு வெ. சிவப்பிரகாசம்
திருமதி வெ.ஜெ. சையது அலி பாத்திமா
திருமதி இரா. பேபி
திரு அ. மில்டன்
திரு மு. முனியசாமி

## கணக்காளர்

திரு சு. ஆறுமுகம்

## அலுவலகக் கண்காணிப்பாளர்கள்

திரு நீ. இராமானுஜம்
திரு கோ. புண்ணியமூர்த்தி

## இளநிலைக் கணக்கு அலுவலர்

திரு ஜா.வா. பாஸ்கரன்

## முதுநிலை எழுத்தர்

திரு க. பெருமாள்
திரு மோ. முருகானந்தம்

## இளநிலை எழுத்தர்

செல்வி பா. கல்பனா
செல்வி வெ. காயத்திரி
திரு க. சங்கர்
செல்வி இர. நளினா
திரு அ. முருகேசன்
செல்வி இர. ஜெயந்தி

## அனுப்புகை உதவியாளர்

திரு ம. கோவிந்தன்

## அலுவலக உதவியாளர்

திரு லோ. மகேஷ்

## துப்புரவுப் பணியாளர்கள்

திரு அ. ஆறுமுகம்
திரு ச. பாபு
திரு என். மகாதேவன்
திருமதி என். ஜெயலட்சுமி

## முனைவர் பட்ட மேலாய்வாளர்கள்

முனைவர் ஜெ. அரங்கராஜ்
முனைவர் ந. ஆனந்தி
முனைவர் பி. கணேசன்
முனைவர் சி. கார்த்திகேயன்
முனைவர் இரா. சங்கர்
முனைவர் செ. சிலம்புமணி
முனைவர் ந. தேவி
முனைவர் வீ. பால்முருகன்
முனைவர் பி. மஞ்சுளா
முனைவர் ஜெ. முத்துச்செல்வன்
முனைவர் க. ஜவகர்
முனைவர் அ. ஜெயக்குமார்

CICTArchives

**தொல்காப்பியம்**

**எட்டுத்தொகை**

- நற்றிணை
- குறுந்தொகை
- ஐங்குறுநூறு
- பதிற்றுப்பத்து
- பரிபாடல்
- கலித்தொகை
- அகநானூறு
- புறநானூறு

**பத்துப்பாட்டு**

- திருமுருகாற்றுப்படை
- பொருநராற்றுப்படை
- சிறுபாணாற்றுப்படை
- பெரும்பாணாற்றுப்படை
- முல்லைப்பாட்டு
- மதுரைக்காஞ்சி
- நெடுநல்வாடை
- குறிஞ்சிப்பாட்டு
- பட்டினப்பாலை
- மலைபடுகடாம்

**பதினெண்கீழ்க்கணக்கு**

- நாலடியார்
- நான்மணிக்கடிகை
- இன்னா நாற்பது
- இனியவை நாற்பது
- கார் நாற்பது
- களவழி நாற்பது
- ஐந்திணை ஐம்பது
- ஐந்திணை எழுபது
- திணைமொழி ஐம்பது
- திணைமாலை நூற்றைம்பது
- திருக்குறள்
- திரிகடுகம்
- ஆசாரக்கோவை
- பழமொழி
- சிறுபஞ்சமூலம்
- முதுமொழிக்காஞ்சி
- ஏலாதி
- கைந்நிலை

**சிலப்பதிகாரம்**

**மணிமேகலை**

**முத்தொள்ளாயிரம்**

**இறையனார் களவியல்**